823.21 SL/PR 2430

ஓம்

திருச்சிற்றம்பலம்

# கீதாஞ்சலி

## தமிழாக்கம்

யாழ்ப்பாணத்து நவாலியூர்

திரு. சோ. நடராசன் அவர்கள், B. A., (Hons.)

(இலங்கைக் கல்விப்பகுதி வித்தியாதரிசகர்)

செய்தது

2430.

சுன்னுகம் :

திருமகள் அழுத்தகம்

1950

பொருளடக்கம்

1. அணிந்துரை (I)
2. அணிந்துரை (II)

1. பாயிரம்
(I) கீதாஞ்சலி ஆங்கில முகவுரை
(II) கவிமரபு

2. நூல் : கீதாஞ்சலி — தமிழாக்கம்

## அர்ப்பணம்

தமிழின் இனிமையையும் தமிழன் பெருமையையும் சொல்லாலும் செயலாலும் உணர்த்திக் காட்டி என் வாழ்க்கை நிறையச் செய்த எனது அருமைப் பாட்டனார் நவாலியம்பதிப் பழங்குடித் தோன்றல் வன்னியசேகரமுதலி குல விளக்கு **அருமையினார் கதிர்காமர்** நினைவுக் கறிகுறியாக இந்நூலை அர்ப்பணஞ் செய்கிறேன்.

சோ. நடராசன்

அண்ணாமலைச் சர்வகலாசாலைத்
தமிழ்ப்பேராசிரியராயிருந்தவரும் நாவலருமாகிய
**இளசைகிழார் ச. சோமசுந்தர பாரதியார்**
அளித்த

## அணிந்துரை (I)

பழம் பாரத நாட்டின் வடக்கே வங்காளத்திற் **கவி தாகூரும்** தென் தமிழகத்தில் **பாவலர் பாரதியாரும்** நவயுக மகாகவிகள். அவர்கால அடிமைத் தமிழரின் நொதுமலுக்கும் அறிவைக் கொல்லும் நிச்சநிரப்புக்கும் இடையே பாரதியார் கவியுள்ளம் சேற்றில் வளரும் தாமரை போற் பூத்தது—மாரி வானத்தில் ஊரும் மதிபோலத் தாகூரின் கவிதை போற்றுவாரிடையே ஊற்றம் பெற்றது. நம்மவர் அடிமை மோகம் அகன்று விடுதலை பெறத் தூண்டும் வேட்கையால், தமிழில் முன்னில்லாத நாட்டு வெறியூட்டும் அமுதகவி மழைத்த முகில்—பாரதியார். கடவுள் மணமறியாத பிறமொழிக் கலையின் கோடைக் காற்றால் நம்மவரின் வறண்ட மனம் வளமெய்தித் தழையவேண்டித் தாகூர் பாடிய செய்யுளெல்லாம் தெய்வ மணக்கும்.

இருவரும் சும்மாவிருக்கும் சுகத்தை வெறுத்து வாழ்வை மதியாமல் தாழும் இந்தியரின் பாழ் நிலையைப் போக்கி, படைத்த கடவுளைப் பழிக்கும் மடம் தரும் சோம்பரை நீக்கி, உரத்தொடும் ஊக்கி நிறை வாழ்வும் நிம்மதியும் நம்மவர் அடையப் பாடியவர். இருவரும் புதிய போத்தலில் முதிய மதுவை வார்த்து இனிமை கனியும் கட்டித் தேனைக் கற்கண்டாக்கும் கவித்திறம், முயன்று பயிலாது இயற்கையி லமைந்த பாவலர்;

இருவருள்ளே தாகூர் பாடிய வங்காளக் கவிகளுள் வனப்பும் உணர்ச்சி வளமும் நிறைந்து சிறந்த **கீதாஞ்சலி**யைத் தமிழர் சுவைத்துவக்க மொழிபெயர்த்து உதவிய உபகாரி **இலங்கை இருமொழிப் புலவர் திரு. சோ. நடராசராவர்.** அவர் தமிழ்ப்படுத்திய கீதாஞ்சலியைப் படித்து மகிழ்ந்தேன். இனிய எளிய தமிழில் கனியும் தேனுங் கலந்த பஞ்சாமிர்தப் பாகுபோன்ற அவர்கள் பாக்களை யாவரும் பருகி இன்பமும் பயனுமெய்துவர் என்று நம்புகிறேன்.

தாகூரின் கனிக்கருத்துக்களை வடிக்கத் **திரு. நடராசர் வார்த்திருக்கும் ஐம்பொற் கிண்ணங்களான** செந்துறை வகைகளும் சிந்தும், துள்ளலோசைக் கவிநிலை வகையும் அகவலும் மிகவும் இனிமை தருகின்றன. **பண்டிதர் கருத்தையும் பாமரர் உணர்வையும் கவர்ந்துகொண்டு ஒழுகும் இன்கவிகள் யாவரும் படித்துவக்கும் பதம் உடையவை. நடுநிலை உள்ளத்தர் பாராட்டுதற்குரியவை.** வாழ்க நற்றமிழ், வாழியர் தமிழர்.

**திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரன்,** எம்.ஏ., எம்.ஓ.எல்
(பேராசிரியர்—அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)
அளித்த

## அணிந்துரை (II)

திரு. சோ. நடராசனார் கீதாஞ்சலியைத் தமிழ்ச் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துள்ளார். **உலகம் போற்றும் இந்தியப் பாவாணராம் இரவீந்திரரின் பாடல்களைத் தமிழனும் உணர்ந்து பாடி உள்ளக் களிப்பிலே திளைக்குங்காலம் இந்த மொழிபெயர்ப்பின்வழியே வருகிறதெனலாம்.** அனைவருமறிந்து துய்க்கவேண்டுமென்ற நோக்கத்தால் பேசுவதுபோலவே பாடியிருக்கிறார். ஆசிரியரின் அருள்நோக்கம் போற்றத்தகுந்தது.

தாயுமானவர் நடையை அடியொற்றிப் பாடியுள்ள செய்யுள்களே சிறந்து விளங்குகின்றன. சிந்துகளாக வருவன பண்ணோடியைந்து சிறக்கக் காண்போம். இந்த ஆசிரியரின் முயற்சி அவர் விரும்பிய பயனைத் தந்து தமிழகத்துக்குப் பெருவிருந்தாய் இனித்து ஓங்குக.

# பாயிரம்

## (I) கீதாஞ்சலி ஆங்கில முகவுரை

கீதாஞ்சலியின் அருமை பெருமைகளை மேல்நாட்டுக் கலைவாணரிடையே முதன் முதற் பிரசித்தப்படுத்திய டபிள்யூ. பீ. ஈட்ஸ் என்ற அயர்லாந்துப் புலவர் கீதாஞ்சலி ஆங்கில மொழிபெயர்ப்புக்கு எழுதிய முகவுரை வருமாறு:

சில நாட்களுக்கு முன் பிரசித்திபெற்ற வங்காள வைத்தியரொருவருக்கு நான் சொன்னேன்: "எனக்கு ஜெர்மன் பாஷை தெரியாது. இருந்தும் ஜெர்மன் புலவரொருவருடைய கவிதைகளின் மொழிபெயர்ப்பு என் உணர்ச்சிகளைக் கிள்ளிவிடுமானால் உடனே நான் பிரிட்டிஷ் நூதனசாலை நூல்நிலையத்துக்குப் போய் அப்புலவரின் வாழ்க்கையைப் பற்றியும் அவருடைய எண்ணப் போக்கின் வரலாற்றைப்பற்றியும் கொஞ்சமாவது கூறும் ஆங்கில நூல்களைப் படித்து அறிந்துகொள்வேன். ஆனால் **இரவீந்திரநாத தாகூர்** பாடல்களில் சிலவற்றை வசன ரூபமாக மொழிபெயர்த்த இக்கவிதைகள் என் உள்ளத்தை உருக்கியது போலப் பல வருடங்களாக வேறொன்றும் என்னை உருக்கவில்லை. அப்படியிருந்தும், இவரைப்பற்றி யாராவது இந்தியப் பிரயாணியொருவர் கூறுவிட்டால் இவரின் வாழ்க்கையைப் பற்றியோ இக்கவிகள் மலர்வதற்கு அநுகூலமாயிருந்த எண்ணப் போக்குகளைப் பற்றியோ ஒன்றும் அறிய முடியாமலிருந்திருக்கும்." இரவீந்திரரின் கவிதைகள் என்னை உருக்கியதில் விசேஷமொன்றுமில்லையென அவருக்குப் பட்டது. அவர் கூறினார் "நான் தினமும் இரவீந்திரரின் பாடல்களைப் படிக்கிறேன்,



அவருடைய கவிதைகளில் ஒரு வரியைப் படித்தாலே உலகத்துத் தொல்லைகளையெல்லாம் மறந்துவிடலாம்." நான் சொன்னேன்:- "இரண்டாவது இரிச்சாட்டு மன்னன் காலத்தில் இலண்டனிலிருந்த ஓர் ஆங்கிலேயனுக்கு பெட்ராக்கு அல்லது தாந்தே என்ற புலவர்களது கவிதைகளின் மொழிபெயர்ப்பைக் காட்டினால் அவன் மனதிலெழும் வினாக்களுக்கு விடை பகரக்கூடிய நூல்கள் ஆங்கிலத்தில் இருந்திரா. என்னைப் போலவே அவனும் புளோரன்ஸ் நகரிலிருந்து வந்த ஒரு வங்கிக்காரனையோ உலொம்பாடியில் இருந்துவந்த ஒரு வர்த்தகனையோ விசாரிக்க வேண்டியிருந்திருக்கும். நானறிந்த வரையில் இரவீந்திரரின் இக்கவிதைகள் எளிதாயும் நிறைவுடையனவாயும் இருக்கின்றன. புதிய மறுமலர்ச்சி உங்கள் தேசத்தில்தான் உண்டாயிருக்கிறது. அதைப்பற்றிக் கேட்டறிந்து கொள்ளலாமேயன்றிப் படித்தறிய முடியவில்லை."

அவர் பதில் வருமாறு:- "இரவீந்திரரை விட வேறு புலவர்களு மிருக்கிறார்கள். ஆனால் இவருக்கு இணையானவர்களில்லை. எங்கள் தேசத்தில் இவர் பிரசித்தி பெற்றிருப்பதுபோல ஐரோப்பாவில் எந்தப் புலவராவது புகழ் அடையவில்லை. கவி பாடுவதில் இரவீந்திரர் எவ்வளவு சிறந்திருக்கிறாரோ அதுபோலவே சங்கீதத்திலுஞ் சிறந்து விளங்குகிறார். இந்தியாவில் மேற்குக் கோடி தொட்டு பர்மாவில் வங்காளம் பேசப்படும் பிரதேசம் வரை இவர் பாட்டுக்களைப் பாடிவருகிறார்கள். இரவீந்திரர் தமது முதல் நவீனத்தை யெழுதிய பத்தொன்பதாவது வயதிலேயே புகழ் அடைந்துவிட்டார். இவர் சற்று முதிர்ந்த வயதில் எழுதிய நாடகங்கள் இப்பொழுதும், கல்கத்தாவில் நடிக்கப்பட்டு வருகின்றன. இரவீந்திரரின் பூரணமான வாழ்க்

கையைக் கண்டு நான் மிகவும் அதிசயமடைகின்றேன். மிக இளைய வயதில் இரவீந்திரர் இயற்கைத் தோற்றங்களைப்பற்றிக் கவி புனைந்தார். நாள் முழுவதும் தமது நந்தவனத்திலேயே இருப்பார். ஏறக்குறைய இருபத்தைந்தாமாண்டு தொடக்கம், அவருடைய வாழ்வில் ஒரு துக்க சம்பவம் ஏற்பட்ட முப்பத்தைந்தாம் ஆண்டு வரை நமது பாஷையிலேயே இணையில்லாத அழகிய காதற் கீதங்களைப் பாடினார்” என்று அவர் மிகுந்த உணர்ச்சியோடு பின்வருமாறு தெரிவித்தார்:-

“அவருடைய காதற் கவிதைகளைப் படித்ததனால் பதினேழு வயதில் என் மனத்தில் உண்டான பெரிய மாற்றத்தை வாக்கினால் எப்படி உரைப்பது? அதன் பின்னர் அவருடைய கவிதை அழகும் தத்துவப் போக்கும் உடையதாய்ப் பத்திச் சார்பு பெற்றது. மனித சமூகத்தின் பலதிறப்பட்ட அபிலாஷைகளும் இரவீந்திரர் கவிதைகளில் பிரதிபலிக்கக் காணலாம். வாழ்வை வாழவேண்டுமென்று கூறிய சாதுக்களில் முதற் சாது இவரே. வாழ்வின் ஆழத்திலிருந்தே இவருடைய உரைகள் கிளம்புகின்றன. அதனாற்றான் நாம் இவரிடம் அன்பு செலுத்துகிறோம்.” நன்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அவருடைய சொற்கள் எனது ஞாபகத்திலே தவறியிருக்கலாம். ஆனால் அவருடைய கருத்து மாத்திரம் மாறவில்லை. மேலும் அவர், “கல்கத்தாவிலுள்ள நமது பெரிய திருச்சபையொன்றில் ஆராதனைப் பிரசங்கம் செய்வதற்காக இரவீந்திரரை ஏற்பாடு செய்திருந்தார்கள். பிரம சமாசத்தைச் சேர்ந்த நாம் உங்களுடைய ஆங்கில வார்த்தையான ‘சேர்ச்’ என்பதை உபயோகிப்பதுண்டு. ஆராதனை ஆரம்பிப்பதற்குச் சற்று நேரந்தானிருந்தது. சனக்கூட்டம் அதிகம்,



பலகணிமீதுகூடச் சனங்கள் நெருங்கி நின்றார்கள். வீதிகளிற் போக்குவரவு நிறுத்தப்பட்டுவிட்டது.”

வேறு சில இந்தியர் என்னைக் காண வந்தார்கள். அவர்களும் இரவீந்திரரைப்பற்றிப் பெரிதும் மதிப்புடன் பேசினார்கள். எல்லார்க்கும் வெளியாகத் தெரியும் பரிகாசமயமானதும் அரைகுறையாக மதித்து ஏளனஞ் செய்யும் போக்குடையதுமான திரையினாற்றான் பெரியவை சிறியவை எல்லாவற்றையும் மறைத்து வைக்கும் எங்கள் நாட்டில் இவர்கள் கூற்று நூதனமாகவேயிருந்தது. நமது தேவ கோட்டங்களைக் கட்டிய பொழுதும் நமது பெரியோரிடத்து அத்தகைய கௌரவத்தை நாம் காட்டினோமா? “தினமுங் காலை மூன்று மணிக்குக் குருதேவர் தியானத்தில் அசையாமல் அமர்ந்து விடுவார். கடவுளைப்பற்றி ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்த அவர் இரண்டு மணி நேரம் நிட்டையிலேயே இருப்பார். இதை நான் நேரிற் பார்த்திருக்கிறேன்” என்று வேறொருவர் என்னிடங் கூறினார். இரவீந்திரருடைய தந்தையான மகரிஷி தியானத்தில் ஆழ்ந்தால் அடுத்த நாள் முடியும்வரை கூட நிஷ்டை கலைவதில்லை. ஒரு முறை ஓர் ஆற்றிற் பிரயாணஞ் செய்யும்போது இயற்கையின் அழகிய காட்சியைக் கண்டு அப்படியே எட்டு மணி நேரம் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். அதன் பின்னர்தான் யாத்திரையைத் தொடர்ந்து நடத்தவேண்டியதாயிற்று. பின்னர் அவர் தாகூர் குடும்பத்தைப்பற்றிக் கூறினார். “தலைமுறை தலைமுறையாக இக் குடும்பத்திற் பல பெரியோர் தோன்றியிருக்கிறார்கள். இன்றும் ககனேந்திரநாத், அவநீந்திரநாத் என இருவர் சித்திரகாரராய்த் திகழ்கிறார்கள். இரவீந்திரரின் சகோதரரான துவிஜேந்திரநாத் பெரிய

தத்துவ ஞானி. கிளைகளில் இருந்த அணில்கள் வந்து அவரின் முழந்தாளில் தங்கும். பறவைகள் கரங்களில் வந்திருக்கும்.”

“இப்பவோ பின்னையோ சடப்பொருள் மீது தமது சத்தியைப் பிரதிபலிக்கச்செய்யாத அறிவின் அழகிலோ ஒழுக்கத்தின் சௌந்தரியத்திலோ நாம் நம்பிக்கை வைக்கக் கூடாதென ‘நிட்ஸே’ என்ற தத்துவ ஞானியின் கொள்கையையே இவர்களும் அனுசரிக்கின்றார்களோ என்று சொல்லக்கூடிய விதமாக பிரத்தியட்சமான அழகையும் பொருளையும் இவர்கள் பேச்சில் காண்கின்றேன்.” நான் சொன்னேன்: ஒரு குடும்பத்தைப் புகழோடென்றும் பிரகாசிக்கும்படி செய்யக் கீழைத்தேச வாசிகளாகிய உங்களுக்குத்தான் தெரியும். அன்றொரு நாள் நூதனசாலை அதிபர் அங்கே சீனச் சித்திரங்களை அடுக்கி ஒழுங்கு செய்துகொண்டிருந்த ஒரு கறுப்பு மனிதனைக் காட்டி “மிக்காடோ அரசனுக்குக் கலை விஷயமாகப் பரம்பரையாக ஆலோசனை கூறுபவர் இவர்தான். இவர் குடும்பத்தில் இப் பதவியை ஏற்றவர்களில் இவர் பதினான்காம் ஆள்” என்றார். அவர் சொன்னார்: “இரவீந்திரர் சிறு பையனாய் இருந்த காலத்தில் வீட்டிலே எப்பொழுதும் சங்கீதமும் கவிதையும் ஒலித்துக் கொண்டிருக்கும்” இரவீந்திரருடைய கவிதையில் எளிமையையும் பரிபூரணத்தன்மையையும் நினைத்துப் பின்வருமாறு கூறினேன்: “உங்கள் தேசத்தில் பிரசார இலக்கியம் அதிகம் உண்டா? இலக்கிய விமரிசனம் அதிகம் உண்டா? இந்த வகையில் நம் நாட்டில் அதிகம் செய்ய வேண்டியிருப்பதால் நமது சிந்தனை புதிய கற்பனைகளில் ஈடுபடுவது குறைந்துவிட்டது. நாம் அப்படிச் செய்யாமல இருக்கவும் முடியாது. நமது மனதி



லோ மற்றவர்களுடைய மனதிலோ சரியாக இரசிகத்தன்மையை உண்டாக்குவதில் 4/5 பங்கு சத்தியைச் செலவு செய்கிறோம்.” அவர் சொன்னார்: “ஆமெங்கள் தேசத்தில் பிரசார இலக்கியம் உண்டுதான்; மத்திய காலத்துச் சமஸ்கிருத நூல்களிலிருந்து வழிநூலாகச் செய்யப்பட்ட அநேக புராணங்களைக் கிராமங்களிலே படித்துப் பாராயணஞ் செய்கிறார்கள். ஊடேயூடே மனிதர் செய்யவேண்டிய கடமைகளையும் எடுத்துக் கூறிவிடுகிறார்கள்.

## II

பல நாட்களாக இம்மொழிபெயர்ப்பின் எழுத்துப் பிரதியைக் கையோடுகொண்டு சென்றுவருகிறேன். புகைவண்டிகளிலும் ‘பஸ்’களிலும் போசனசாலைகளிலும் இவற்றை வைத்து வாசித்துவருகிறேன். என் உணர்ச்சியை இவை வெகுவாகக் கிளறிவிட்டன. அதை வேறு யாராவதுபார்த்துவிடுவார்களோ என்ற பயத்தினால் அடிக்கடி இவற்றை மூடிக்கொள்ளவேண்டி ஏற்பட்டது. வங்க மூலத்தில் இவைகள் தாளநுட்பங்களும் மொழிபெயர்க்க முடியாத சரளமான பல நயங்களும் புதிய சந்தவிருத்திகளும் உடையன என்று எனது இந்திய நண்பர்கள் கூறுகிறார்கள். ஆனால் இவற்றின் எண்ணப்பாங்கு நான் என் வாழ்நாள் முழுவதும் கனாக்கண்ட ஒரு புதிய உலகத்தை வெளிப்படுத்துகின்றது. இது சிரேஷ்டமான ஒரு பண்பாட்டின் விளைவு. இருந்தாலும் புல்லும் பூண்டும் வளரும் சாதாரண புற்றரையில் வளர்ந்த இயற்கை நலமுடையது.

கவிதை என்றால் ஈசுவர சங்கீர்த்தனம்; கடவுளை நினைத்து அவன் புகழ் பாடுதல் என்ற கவிதா சம்பிர

தாயமானது கற்றவர் மற்றவர் என்ற எல்லாரிடத்தும் பழக்கத்திலிருந்து வந்த உபமான உபமேயங்களையும் உணர்ச்சிகளையும் பல நூற்றாண்டாகவே சேர்த்து வாரிக்கொண்டும் கற்றவர் மனத்திலும் உயர்ந்தோருள்ளத்திலுமிருந்து பல எண்ணங்களை யரித்துக்கொண்டும் வடிந்து மறுபடியும் அந்தச் சனசமூகத்தையே போய்ச் சேர்ந்துவந்திருக்கிறது.

வங்காளத்துப் பண்பாடு உடைந்துபோகாமலிருக்குமானால், எல்லாருள்ளத்திலும் எதிரொலிக்கும் அந்தச் சாதாரண பொதுவுள்ளமானது நம் தேசத்தவருள்ளம்போல் மற்றவரறிந்துகொள்ள முடியாதபடி பன்னிரண்டு உள்ளங்களாய் உடைந்து போகாமலிருக்குமானால், இரவீந்திரரின் கவிதைகளில் உள்ள அதிசூக்குமமான கருத்துக்களுட் சில கருத்துக்களாவது கொஞ்சத் தலைமுறைக்குட் பிச்சைக்காரனுக்குக் கூடத் தெரியக்கூடியதாய் வந்துவிடும். இங்கிலாந்திலே இந்த ஓர் உள்ளம் நிலவிய காலத்திற் சோசர் என்ற கவி 'துரொயிலஸ் அண்ட் கிரெசிடா' என்ற நூலை எழுதினார். சனங்கள் வாசிக்கவும் வாசிப்பதைக் காதாரக்கேட்கவுமே எழுதப்பட்டபோதிலும் அதைப் பாணர்கள் பாடினார்கள். சோசருக்கு முன்னுள்ள கவிகளைப்போலவே இரவீந்திரரும் தமது பாடல்களுக்குப் பண்ணமைத்திருக்கிறார். அவருடையபாடல்களைப்படிக்கும்போது அவை தட்டுத்தடங்கலின்றி கவியின் மனத்தில் எவ்வாறு எழுந்தன, எவ்வளவு நிறைவுடையன, எவ்வளவு இயற்கையாலெழுகின்றன, உணர்ச்சியின் வேகம் எவ்வளவு துணிவுடன் கிளம்புகிறது, எவ்வளவு அற்புதரசம் ததும்புகிறது என்றெல்லாம் கணந்தோறும் எண்ணுகிறோம். காரணமென்ன? பாட்டு அவருக்கு இயற்கையாகவே எழுகின்றது. அதில்



தனமில்லை. காரணஞ் சொல்லிச் சமாதானப்படுத்த வேண்டிய அவசியமேயில்லை.

வாழ்க்கையில் அர்த்தங் காணாது பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் பெண்கள் அழகாகப் பதிக்கப்பட்ட சிறிய நூலாய்த் தம் மேசையில் இருக்கும் இக் கவிதைகளைப் பார்த்துச் சோம்பற் கரங்களால் ஒற்றைகளைப் புரட்டிக்கொண்டிருக்க வேண்டிய நிலை இவற்றுக்கேற்படாது. அல்லது சர்வகலாசாலை மாணவர்கள் தமது பாடசாலைப் படிப்பு முடியும் வரை இவற்றைக் கையிலேந்திக்கொண்டு திரிந்துவிட்டு வாழ்க்கைப் போரிலீடுபடும்போது தூர வீசிவிட மாட்டார்கள். நாளடைவில் பிரயாணிகள் இவற்றை வழிநெடுகப் பாடிக்கொள்வார்கள். ஆற்றில் ஓடஞ்செலுத்துவோர் ஓதிக்கொள்வார்கள். காதலர் குறிபார்த்து நிற்கும் நேரங்களில் ஈசுவரனுடைய அன்பை விழைந்து பாடப்பட்ட இப் பேரின்ப கீதங்களை முணுமுணுப்பதால் மோகனமான ஒரு சுனையில் முழுகித் தமது கசப்பான சொந்த வேட்கைகளெல்லாம் மாறி இளமை மறுமலர்ச்சி பெறக் காண்பார்கள்.

இறுமாப்பின்றி இழிவானதென்ற உணர்ச்சியின்றி இக்கவியின் உள்ளம் ஒவ்வொரு கணமும் இவர்களையடைய ஒழுகியோடுகின்றது. ஏனெனில் இவர்களுடைய மனப்போக்கை நன்றாக அறியும் ஆற்றலுடைய தாதலினாலே இவர்களும் கவியின் இதயத்தை நன்கு அறியும் பக்குவமுடையவர்கள். அதனால் இக் காதலரின் வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களை உள்ளூர அறிந்து சொல்லும் தன்மையை நிறையப் பெற்றிருக்கிறது. மாசு தெரியாதவாறு கஷாயந்தரித்துச் செல்லும் சன்னியாசியும், அரசகுலக் காதலனின் மார்பிலணிந்த கண்ணியி

விருந்து விழுந்த பூவிதழ் கிடைக்குமாவென்று படுக்கையிற் தேடுமிள மங்கையும், வெறும் வீட்டிலிருந்து கொண்டு தன் தலைவனின் வரவை எதிர்பார்த்திருக்கும் மணவாட்டியும் என்ற இன்னோரன்ன கற்பனைப் பாத்திரங்களெல்லாம் கடவுளை நினைந்து வேட்கையுறும் உள்ளத்தை உருவகித்ததாகும். கூடல் பிரிதல் என்ற ஒழுக்கங்களை உருவகிக்குங்கால் பூக்களையுஞ் சங்கையும் ஆற்றொலியையும் ஆடிமாதத்து நிறைமுகிற் பருவத்தையும் கவி கற்பனை செய்கிறார். ஆற்றிலே ஓடத்திலிருந்து புல்லாங்குழலை மீட்டிக்கொண்டிருக்கும் மனிதன் யார்? சீனச்சித்திரங்களிலுள்ள கூடார்த்தமான சில உருவங்களைப் போலவே இம் மனிதனும் ஆண்டவனைக் குறிக்கும். எங்கள் பண்பாட்டுக்கு முற்றும் அன்னியமான ஒரு சாதியாரின் பண்பாடு முழுவதுமே கவியின் கற்பனையில் இடம்பெற்றிருக்கின்றது. இக்கவிதைகள் நம் உள்ளத்தைக் கொள்ளைகொள்வதற்குக் காரணம் இந்த நூதனத்தன்மையன்று. ஆனால் நமது சொந்தத்தேசத்து உருவங்களையே இங்குக் காணுகிறோம். தோசெட்டியென்னும் கவிஞரின் வில்லோ மரக்காட்டில் உலாவுவது போன்ற உணர்ச்சியுண்டாகிறது. இலக்கிய உலகில் முதன்முறையாக நாம் எமது சொந்தக் குரலைத்தான் கனவிலே கேட்கிறோமா என்ற உணர்ச்சியுண்டாகிறது.

மறுமலர்ச்சிக்காலந்தொட்டு ஐரோப்பிய இருடிகள் எழுதிக்கொண்டே வந்திருக்கிறார்கள். அவர்களுடைய உபமான உபமேயங்களும் எண்ணப்போக்கின் பொது அமைப்பும் எங்களுக்கு எவ்வளவு பழக்கமுடையனவாய் இருந்த போதிலும் அவர்களுடைய எழுத்துக்களில் நமக்கிருந்த ஆர்வங் கெட்டுப்போய் விட்டது. ஈற்றில் இவ்வுலக வாழ்வை நாமெல்லாம் கைவிட்டுவிட வேண்டு



மென்பதை அறிவோம். இளைத்துப்போன நேரங்களிலும், நாமாகவே இந்த உலகத்தைத் துறந்துகொள்ள எண்ணுங் காலங்களுமுண்டு. இவ்வளவு கவிதைகளைப் படித்த நாம் இவ்வளவு இனிய சங்கீதத்தைக் கேட்ட நாம் இத்தனை அழகிய சித்திரங்களைப் பார்த்த நாம் எப்படி வாழ்வைத் துறப்பது. நமது தேக சம்பந்தமான இச்சைகளே ஆன்மாவின் இச்சையாகவுந் தோன்றும்பொழுது அதை எப்படி அலட்சியமாகவும் கடினமனதுடனும் துறந்து விடுவது? சுவிற்சலாந்து எரிகளின் அழகைப் பார்க்கக் கூடாதென்று அர்ச். பேனாட்டு தன் கண்களை மூடிக்கொண்டாராம். அவருக்கும் எங்களுக்கும் எவ்வகையிற் சம்பந்தமுண்டு. அல்லது யோவானுக்கு வெளிப்படுத்திய வெளி ஆகமத்திற் கூறப்பட்ட கடினமான அலங்கார வாக்கியங்களோடு தான் எங்களுக்கு எவ்வகையிற் சம்பந்தமுண்டு. இரவீந்திரர் கவிதையிலுள்ள அன்பின் வாக்கியங்களைப் பார்க்கத்தான் விரும்புவோம்.

விடை பெற்றேன் பிரியாவிடை கூறுமின்
கடிது தாழ்த்திச் சிரங்குவித் தேனிதோ
நெடிது காலமும் மோடிருந் தேனினிப்
படியி லென்மனை யாட்சி துறந்திட்டேன்.

ஏற்ற ருள்வீ ரிதோகையிற் சாவிதான்
சாற்று வீரன்பி னொலொரு வாய்மொழி
போற்றி நீர்தந்த வைக்குள வோகைம்மா
றாற்றி நல்லொளி காலை யொளிர்ந்ததே.

இருளை நீக்கியென் னுள்ளத்தை யேமலர்ந்
தருளு வித்த விளக்கு மணைந்ததே
வருக வென்றொரு கட்டளை வந்ததால்
பெரிய யாத்திரைக் காயத்த மாயினேன்.

ஏ. கெம்பீஸ் அல்லது சிலுவை யோவான் என்ற சாதுக்களின் மனநிலைக்கு எவ்வளவு வேறானது இக் கவியின் மனோபாவம். "இந்த வாழ்வை நான் விரும்புகிறபடியால் மரணத்தையும் நான் விரும்புகிறேன்" என்று இவர் கதறும்பொழுது சொந்த மன நிலையைக் காண்கிறோமல்லவா? மரணத்தைப்பற்றிக் கூறும் எண்ணங்கள் மாத்திரமா நம்மெல்லாருடைய மனநிலையோடும் ஒத்திருக்கின்றன? இல்லை. நமது வாழ்வில் ஆண்டவனிடத்து நம்பிக்கை வைத்ததுண்டா? அன்புகொண்டோமென்று சொல்லமுடியுமா? ஆனாற் சென்றுகழிந்த நமது வாழ்நாளைப் பார்க்குமிடத்தும் காட்டில் வழிதேடியலையும்பொழுதும் மலைக்குன்றில் ஏகாந்தமான பிரதேசத்தில் வீணாகவே தாம் கொள்ளும் அந்த நூதனமான உரிமையிலும் இந்தத் தோன்றாத சுவையை யுண்டாக்கும் உணர்ச்சியைக் காண்கிறோம்.

என்தெய்வமே
கூட்டத்தி லொருவனென என்னையறி யாதென்னுள்ளம்
மன்னியென் சலனமாம் வாழ்வினெவ் வோர்கணமும்
மாறாத சாசுவதமாம்
மருவினிய முத்திரையை யிட்டுப் பொறித்தனை,

இது திண்ணை வேதாந்தமன்று. சிறைக்கூடத்தில் நிலவுந் தூய்மையன்று. தூசையும் அதனைப் பிரகாசிக்கச் செய்யும் பரிதியின் ஒளியையும் தீட்டும் சைத்திரிகரின் உணர்ச்சி வேகம் தீவிரமான பெருநிலை யடைகிறது. அந்த நிலைக்கு நம்மையும் உயர்த்தும் தன்மையை இங்கே காணுகிறோம். இம்மாதிரியான குரலைக் கேட்க வேண்டுமானால் சென். பிரான்ஸிஸிடமும் வில்லியம் பிளேக்கிடமுந்தான் போகவேண்டும். ஆனால் மறம்



பிக்கநம் சரித்திரத்தில் இவர்கள் எங்களுக்கே அன்னியராகிவிட்டார்கள்.

## III

நீண்ட நூல்களை எழுதுகிறோம். திட்டம்போட்டு அதன்படி நிறைந்த நம்பிக்கையுடன் அவற்றை எழுதித் தள்ளிவிடுகிறோம். ஆனால் ஒரு பக்கமாவது எமக்கு ஆன்மதிருப்தி யளிக்கிறதா? எழுதுவதில் இன்பத்தை யுண்டாக்குகிறதா? சண்டைபோட்டுப் பணத்தைக் குவிக்கிறோம். மண்டை நிறைய அரசியற் பிரச்சினைகளைத் திணித்துக்கொள்ளுகிறோம். எல்லாம் சுவையற்ற வேலைகள். ஆனாற் தாகூர் இந்தியப் பண்பாட்டைப் போலவே ஆன்மாவைத் தேடிக் கண்டு தரிசித்து அதன் இயற்கைப் பெருக்கில் மூழ்கிவிடுகிறார். மேலைத்தேச முறைப்படி நடந்து அதனால் உலகிற் பெருமை பெற்றவர்கள்போலக் காணப்படுவோருடன் தமது வாழ்வையும் கவி ஒப்பிட்டுப் பார்க்கிறார். தன்னுடைய வாழ்க்கை நெறியே சிறந்ததென்பதை அவர் மிகுந்த விநயத்துடன் கூறுகிறார்.

மனைநினைந் தேகும் மக்களு மெனைப்பார்த்
தொருசிறு முறுவலால் நாணமேற் றினரே
தானையை யிழுத்தென் முகத்தினை மறைத்தே
பிச்சைக் காரிபோற் பேசா திருப்பேன்
யாதை யோநீ வேண்டுவ தென்பார்
நாணிக் கண்புதைத் தடங்கி யிருப்பேன்.

மற்றோரிடத்தில் ஒருகாலத்தில் தனது வாழ்வு எவ்வாறு வேறு போக்குடையதாய் இருந்ததென்பதை எண்ணி அவர் "நன்மை தீமையென்ற போரில் எத்தனை தினங்களைக் கழித்தேன், இளமையின் வெறுநாட்களில்

என்னோடு விளையாடிய தோழன் எனது இதயத்தைத் தன்னிடமிழுக்கிறான். இதனால் என்ன பயனற்ற நிலைமை ஏற்படுமோ அறியேன்'' என்கிறார். குழந்தைகள் பறவைகளையும் இலைகளையும் எப்படிப் பார்க்கிறார்களோ அப்படியே கவியும் காண்கிறார். பருவப் பெயர்ச்சிகளில் நடைபெறும் பெரிய சம்பவங்கள் எங்களுக்குக் காட்சியளிப்பதுபோலவே அவைகட்குங் காட்சியளிக்கின்றன. என்ன குழந்தையுள்ளம்! என்ன எளிமை! சரளபாவம். வேறு இலக்கியங்களில் எங்குங் கிடையாது. வங்க இலக்கிய ஊற்றிலிருந்து உண்டானதா? பத்தியிற் பிறந்ததா? கவியின் சகோதரர் கையிற் பட்சிகள் கூட வந்து அமருமாமே? அப்படியானாற் பரம்பரையாகக் கிடைத்ததா? டிரிஸ்டன் அல்லது பெலனோர் என்பவரின் விநயம்போல இதுவும் பல நூற்றாண்டாக வளர்ந்து வந்ததா? குழந்தைகளைப்பற்றிப் பேசும்பொழுது தன்னைப்பற்றித்தான் பேசுகிறாரோ? அல்லது சாதுக்களைப்பற்றித்தான் கூறுகிறாரோ? என்று நினைக்க வேண்டியதாய் இருக்கிறது.

கூடுவார் சிறுவர்கூத் தாடியே பாடிமனை
　　கோலுவார் மணல்கொண்டு வெண்
சவியற்ற சருகினால் ஓடஞ் சமைத்துவிரி
　　சலதியிற் போத விடுவார்,
சாலவும் புன்னகைசெய் தோடிப் பொறுக்குவார்
　　சங்கினோடு சிப்பிக் குலம்
புவியினிற் புதைபட்ட பெருநிதிக் கலைகிலார்
　　பொருளெனப் பரல்கொள்ளு வார்
பொருகடற் றிரைமூழ்கி முத்துக் குளிப்பர்பலர்
　　போகுவார் வணிகர் பலரே.

டபிள்யூ. பீ. ஈட்ஸ்.

செப்டெம்பர், 1912

# (II) கவிமரபு

உலகத்து மக்கள் உள்ளத்தில் ஆதியிலே தோன்றிய அழகுணர்ச்சிப் பிரவிருத்திகளில் ஒன்று பாட்டு. சரித்திரம், சாத்திரம், தந்திரம், மந்திரம், தருமம் எல்லாம் ஆதியிற் பாட்டாகவே பாடப்பட்டன. நாகரிகமுற்ற எந்தச் சாதியாரின் பழைய சரித்திரத்தைப் பார்த்தாலும் சந்தமும், யாப்பும் கொண்ட கவிதையாகவே எல்லா இலக்கியங்களும் இருப்பதைக் காணலாம். கிரீசிலென்றாலென்ன, காந்திநேவியாவிலென்றாலென்ன, இங்கிலாந்திலென்றாலென்ன, சீனா, யப்பானிலென்றாலென்ன, எகிப்திலென்றாலென்ன கவிதையாகவே பழைய இலக்கிய முயற்சிகளெல்லாம் அமைந்திருக்கின்றன. வேத கீதங்களையும் பழந் தமிழிலக்கியங்களையும் ஆராய்வோர் இந்தியாவிலும் இது பெருவழக்கென்பதை யறிவார்கள். சீர், அடி, எதுகை, மோனை இவற்றைக் கொண்ட சொற் கூட்டங்களைப் பார்க்கலாம். இந்தப் பாட்டு அமைப்பே இன்றுவரை அழியாதிருக்கிறது. வாழ்வின் வேறுதுறைகளில் நினைத்தற்கரிய மாற்றங்கள் பல ஏற்பட்டபோதிலும் பாட்டு என்ற இலக்கிய அம்சம் இன்றுவரை மாற்றமடையவில்லை.

இவ்வாறுவந்த இந்தியக் கவி மரபில் இக்காலத்திலே தோன்றிய இந்திய மகா கவிகளுள் இரவீந்திரநாத தாகூரும் ஒருவர். இவர் வங்காளத்திலுதித்தவர். செந்தமிழ் நாடும் **பாரதியார், சோமசுந்தரப்புலவர், தேசிகவிநாயகம் பிள்ளை** என மூன்று கவி சிரேட்டர்களைப் பெற்றிருக்கிறது.

தாகூர் அமரகவி; அவருடைய பாட்டுக்கள் அழியாத நலமுடையன. வங்க இலக்கியம் தாகூருடைய பாட்டுக்களால் ஒரு மறுமலர்ச்சியைப் பெற்றது. உலகமே ஒரு புதுக் கவியைப் பெற்றுவிட்டது. ஈட்ஸ், ரஸல், வால்டர், டிலாமூர் போன்ற ஆங்கிலப் புலவர் கூட்டத்துக்குத் தலைவராகத் தாகூர் திகழ்ந்தார். கவி உலகில் இது தாகூர் யுகமென்றே பலர் கொண்டாடினார்கள். இந்தியக் கவிகள் மரபில் அவர் வேதகால இருடிபோல இருந்தார். உபநிடதத்து முனிவர்கள்போல விளங்கினார். பத்தியால் கசிந்துருகும் மாணிக்கவாசகர், நாவுக்கரசர், துளசிதாசர், புரந்தரதாசர்போலத் திகழ்ந்தார். இராமதாசர், மீராபாய், ஆண்டாள், தியாகய்யர் முதலிய பத்திமான்களின் கூட்டத்தைச் சேர்ந்திருந்தார். வங்கத்தில் உதித்த பெரிய வைணவ பத்த சிகாமணியான சைதன்னியரின் சம்பத்து தாகூருக்கும் இயல்பாகவே கிடைத்தது. பொதுவாகவே இந்திய இலக்கியம் பக்திப் போக்கையுடையது. சமயச் சார்பையுடையது. தத்துவ மெய்ஞ்ஞானத்தையே குறிக்கோளாகக் கொள்ளுவது. "அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே" என்பதே அன்றுதொட்டுத் தமிழிலக்கியக் குறிக்கோளாயிருந்திருக்கின்றது. இது இந்திய இலக்கியங்களின் ஒரு விசேஷ தன்மையென்று உணரலாம். இதற்குப் பல காரணங்கள் கூறலாம். கடவுளை "அம்மையப்பன்" என்றும், "தோன்றாத்துணை" என்றும், நண்பனென்றும், நாயகனென்றும் பலவாறாக இந்தியக் கவிகளும், முனிவர்களும் பாராட்டிப் பத்தி பண்ணிப் போற்றி வந்திருக்கிறார்கள். எல்லாம் பிரமம் என்ற மேலான அத்துவைத சித்தாந்தத்தை, அதாவது—சிந்தைக்குமெட்டாதவாறு உயர்ந்த விவேகிகளால் மாத்திரம் யோக



சாதனையால் தியானஞ் செய்யக்கூடிய (பிரமத்தை எல்லாமாகக் காணும்) ஒரு சித்தாந்தத்தைக் கண்ட சங்கரரும் ஈற்றில் "அம்மே அப்பா, தட்சணாமூர்த்தி! உன்னை வணங்குகிறதற்கு மூட சனங்கள் காட்டிலும், மலையிலும், தடாகங்களிலும் மலர் பறிக்கச் செல்லுகிறார்கள். ஆனால் உள்ளமென்னும் தடாகத்தில் மலர்ந்துள்ள மலரையவர்கள் உபயோகிக்கவில்லை", யென்று கதறுகிறார்.

தாகூருடைய பாடல்களும் பத்தியிலேதான் ஊற்றெடுத்தவை. தாகூரை உலகுக்குக் காட்டிய நூல் 'கீதாஞ்சலி'. அதுவே அவருக்கு 'நோபெல்' பரிசையும் கொடுத்தது. அதனால் அவர் உலகுக்கு ஒரு கவியெனப் புகழ்ந்து பாராட்டப்பட்டார். தாகூர்போன்ற மேதாவிகளின் பாடல்களை மொழிபெயர்க்க முடியாது. மூலத்திலுள்ள கீதம் இசை, நயம், சொல், பொருள் நயங்களெல்லாம் மொழிபெயர்ப்பில் ஒழுகிவிடுகின்றன. இருந்தும், தாகூரின் எண்ணப்பாங்கும் சொன்னடை முதலியனவும் பன்னூறாண்டாக நமது பத்தர்களாற் பயின்றுவரப்பட்டனவே. அதனால் அதில் அவ்வளவு கஷ்டமில்லை; அதைத் தமிழ்ப்படுத்துவதும் சிரமமில்லை. கற்பனைகளும், தலைவன் தலைவி சம்பிரதாயமும், இன்னோரன்ன விஷயங்களும் தமிழ் மரபில் ஆளப்பட்டன. அதனால் அவை தமிழிலக்கிய மரபாய்த் தமிழர் இதயத்தில் ஊறிவிட்டன. எனவே, தாகூரின் பாடல்களை மொழிபெயர்ப்பதில் அந்நியபாஷைக்காரருக்கிருக்கும் கஷ்டங்கள் இந்திய பாஷைக்காரருக்கு அதிகமில்லை. அதுவும் தமிழில் மிகக் குறைவு எனலாம்.

தாகூர் தமது வசந்தோற்சவமென்ற கவிதையில் "மனிதரிடமுள்ள விருப்பு வெறுப்பை நீக்குவதுதான்

கவிகளின் தொழில்'' என்று கூறுகிறார். வாழ்க்கைப் போரிற் சுதந்திரமென்ற வெற்றியைக் கொடுப்பதுதான் கலைகளின் உண்மையான பலன். உலக பந்தங்களை மறந்து காலங் கடந்த பரம்பொருளோடு நாம் தொடர்பு பெற்றிருக்கும் கண்ணால் காணமுடியாத சம்பந்தங்களைக் கலைதான் காட்டுகிறது. வாழ்வென்னும் ஒரேதன்மையான சக்கரத்திற் சுழலாமல், அதன் இழிதகைய கூட்டங்களிலிருந்து எம்மை உயர்த்திப் புனிதமான உலகங்களிற் கொண்டுபோய் விடுகிறது. ஓயாமல் உண்டுடுத்துத் தொழில் புரிந்து சுற்றுவதை விட்டுப் பூசல் மலிந்த நோயறையிலிருந்து அப்புறப்படுத்தி விடுகிறது. வாடிக்கையான பேச்சு வலையிற் சிக்கிக்கிடக்கும் எம்மை விடுதலைசெய்கிறது. ஈற்றில் எம்மை மறந்து சாந்தி பெறுகிறோம் எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதுங்கிக் கிடக்கும் கவித்துவத்தையும், இரசிக சுவாபத்தையும் விடுதலை செய்கிறது. தன்னை மறந்து ஆனந்தத்தினால் கவிதை புனையும் கலைஞன்தான் மற்றவர்களுக்கும் இத்தகைய ஆனந்தத்தைக் கொடுப்பான். உலகத்து இன்பதுன்பங்களிலிருந்தும் காமக் குரோதங்களிலிருந்தும் விடுபட்டு மேலே எழுந்து செல்லும் திறமை உடையவன்தான் உண்மையான கலைஞன்.

கலைஞனின் அந்தராத்மா, வெளியுலகத்தோடு ஒன்றுபட்டாற்றான் கலை பிறக்கும். கலைக்கு ஊற்று ஆனந்தம். அதனாற்றான் கலை ஆனந்தத்தை மற்றவர்களிடையே உண்டாக்குகிறது. இந்த ஆனந்தம் மனிதரின் விநோத காலத்தின் தன்மையைப் பொறுத்தது. உண்டுடுத்துத் தொழில் புரிந்து எஞ்சியகாலத்தை மனிதன் விநோதங்களிற் கழிக்கிறான். சாகித்தியம், சங்கீதம், கலை என்பன இவ் விநோதகாலப் பிரவிருத்திகள்.



பயன் கருதிப் பேசுவது ஒன்று. ஒரு பயனும் கருதாத பேச்சுப் பாட்டாகிறது. ஓர் இடத்துக்குப் போகவேண்டுமானால் காலால் நடக்கிறோம். அப்படி ஒரு இலட்சியம் இல்லாதபோது காலால்நடனமாடுகிறோம். சூரியன்வட்டமானது! உலகம் அதைச் சுற்றிச் சுழல்கிறது; நீர் பாய்கிறது, அக்கினி சூடானது; என்றெல்லாம் சாத்திர உண்மைகளை ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தாற் சலிப்புண்டாகும். ஆனாற் சூரியோதய வருணனை எத்தனை தரம் சொன்னாலும் சலிப்புண்டாக்காது. ஏனெனில் சூரியோதய வருணனையென்பது சாத்திர உண்மையன்று. அதைக்கண்ட ஒரு புலவனின் உள்ள உணர்ச்சி அதில் அடங்கியிருப்பதால் அது சாசுவதமான இன்பத்தை அளிக்கக்கூடியதாயிருக்கிறது.

கவிதையிற் புலவனுடைய ஆன்ம விலாசம் பிரகாசமாகிறது. அப்பொழுது ''அன்பு என்ற உணர்ச்சியினாலோ அதுபோன்ற ஆழ்ந்த வேறோருணர்ச்சியினாலோ நமது உள்ளம் பொங்கி வழியும்பொழுது நமது ஆன்ம விலாசம் மடைதிறந்து பாய்கிறது'' என்கிறார் தாகூர்.

கலையைப்பற்றி இரவீந்திரநாத தாகூர் கொண்டுள்ள கொள்கை இந்தியாவின் கலை மரபையே விளக்குகிறது. இந்தவகையில் தாகூரின் பாடல்களில் அமைந்துள்ள சில தத்துவங்களைப் பார்க்கலாம்.

மனிதனிடத்து இரண்டுவிதமான சுபாவங்களிருப்பதைக் காணலாம். ஒன்று உயர்ந்தது. மற்றது இழிந்தது. உலகத்து விடய போகங்களைப் பெரிதென மதிக்கிறது இழிந்த சுபாவம். உயர்ந்த சுபாவம் ஆன்ம சாந்

தியையும் பற்றற்ற தன்மையையும் பெற விரும்புகிறது.
ஒன்று கடவுளை நினைத்துச் சுதந்தரம்பெற அவாவு
கின்றது. மற்றது உலகத்து இன்பங்கள் தான் சிறந்தவை
யென்று மண்ணோடு மண்ணாய்க் கிடக்க விரும்புகிறது.
இவையிரண்டும் ஒற்றுமைப்படுவதில்லை. இந்தச் சாதா
ரண அநுபவத்தைத் தாகூர் கீதாஞ்சலியில் ஒரு பாட்
டில் அழகாகக் குறிப்பிடுகிறார் :

கொண்டது விடாதென்னை யண்டிநிற் கும்விலங்
குக்கூட்ட மாந்தொல் லைகள்
கோடானு கோடியுங் கொன்றிடுவ னென்றுளங்
கொள்ளிலென் னெஞ்சு பதறும்
அண்டருங் காணாத அரியநிதி யுன்னிடத்
தாகுமென் றறிகுவன் யான்
ஐயனே நீயெனது மெய்யன்ப னானாலு
மலைவனே காக்காய்ப் பொனுக்
குண்டெனக் காசையிவ் விடுதலைக் கேயென்னி
னுள்ளமதை யெண்ண நாணும்
ஊனமும் மரணமுங் கொண்டவிப் போர்வையிலை
தொன்றுக்கு முதவா தெனின்
பண்டுவரு பாசத்தி னாலிதனை வவ்வினேன்
பாவியேன் வறுமை பெரிதே
பாலித்து மிக்கவருள் செய்திடுவை யென்றென்று
பயமுற்ற தேழை நெஞ்சே.

" கடவுளே ! யிந்தப் பிரபஞ்ச பாசங்களை யகற்று "
என்று கேட்கும்பொழுதும் கடவுள் அப்படிச் செய்து
விட்டாற் சுகபோகங்கள் போய்விடுமேயென்று பயப்படு
கிறோம். இந்த அனுபவம் சர்வ சாதாரணம். உணர்ச்
சியை வெளியிடுவதுதான் கவிதையென்கிறார்கள். அது
எப்படிப்பட்ட உணர்ச்சியாயிருக்கவேண்டுமானால் எல்



லார் மனத்திலும் எதிரொலிக்கும் தன்மையுடையதா
யிருக்கவேண்டும். கூலியாளாகவந்து மண் சுமந்த சோம
சுந்தரக் கடவுளுக்கு அரசனுடைய தண்டநாயகர்கள்
பிரம்பு கொண்டு அடித்தார்களாம். அந்த அடி எல்லா
ருடைய முதுகிலும் பட்டதாம். ஒரு புலவனுடைய
கவிதையிற் கூறப்படும் உணர்ச்சிகளும் அப்படித்தான்.
எல்லாருடைய மனத்திலும் ஏற்பட்ட அல்லது ஏற்படக்
கூடிய பொதுவான உணர்ச்சிகள். அத்தகைய ஒரு
பொதுவான உணர்ச்சி தாகூரின் பாடல்களிற் பரக்கக்
காணலாம்.

உலகம் அநித்தியமானது ; அழியும் மாலைத்து.
ஆதலால் ஆன்ம விடுதலை வேண்டுமானால் உலகைத்
துறந்து காட்டிலே தவஞ்செய்ய வேண்டுமென்பது தாகூ
ருடைய சித்தாந்தமன்று. உலகத்திலிருந்துகொண்டு
தான் அனாசக்தியோகஞ் செய்யவேண்டுமென்பது தாகூர்
சித்தாந்தம். ஈசுவரனுடைய சக்தி எப்பொழுதும் கருமத்
தில் விடுதலையை அடைகிறது. வரட்டுச் சந்நியாசம்
உண்மையான நிராசையை உண்டுபண்ணாது.

பகவத்கீதை கூறுகிறது :- மனத்தினால் விஷய
போகங்களை நினைத்துக்கொண்டு காயத்தினால் அவற்றைத்
துறந்துகொண்டிருப்பவன் அஞ்ஞானி. அவனுக்கு விடு
தலை கிட்டாது. பயனைத் துறந்து கருமத்தைச் செய்து
கொண்டிருப்பவனுக்கே முத்தி கிடைக்கும். தாகூர்
கூறுகிறார் :-

மணியுருட் டிச்செபம் பண்ணியே காந்தமாய்
மந்திரஞ் சொல்லு கின்றாய்
மங்குமிருள் குடிகொண்ட கோவிலிற் கதவுதாள்
மாட்டிவழி பாடு செய்வாய்

பணிசெயுங் கடவுளுன் முன்னில்லை நோக்குவாய்
பாதையிற் கல்லு டைக்கும்
பாட்டாளி மகனோடு கூட்டா யிருக்கிறான்
பண்ணையா ளோடு மவனே
துணியெலாந் தூசுறச் சுடுவெய்யில் தன்னிலும்
தூறுமழை புயலி லுந்தான்
துணையா யிருப்பனச் சோதிநற் கடவுளுன்
தூயவுடை தன்னை விட்டே
மனிதனே யீசனைப் போலநீ மண்மீது
வந்துபணி செய்ய வேண்டும்
மன்னுநல் வீடெனப் பன்னுவாய் வீட்டுக்கு
மார்க்கமெங் கேயறிவை யோ.

கடவுள்கூடக் கருமத்தைச் செய்துகொண்டே இருக்கிறான். அது அவனுடைய தருமம் என்று கீதையின் கருமயோகத்தை அற்புதமான பாட்டினால் எல்லாரும் உணருமாறு தாகூர் விளக்குகிறார். தாகூருடைய வேதாந்தப் பாடல்களிற் சிறந்து மிளிரும் ஒரு விசேட அமிசம் வேதாந்த உண்மைகளை எல்லாரும் அறிந்து அநுபவிக்கும்படி இலேசாகப் பாடிவிடுகிறார்.

இரசங்களுக்கெல்லாம் ஆரம்பமும் முடிவுமாயிருப்பது சாந்த ரசமென்பார்கள் அலங்கார சாத்திரமறிந்தவர்கள். **'லீலா சுகர்'** என்னும் பத்தசிகாமணி கிருஷ்ண கர்ணாமிர்தத்தில் தம் மனம் சாந்தியடைந்திருப்பதை அவருடைய விருப்பத்தை வெளியிடும் வாயிலாக உணர்த்துகிறார். சந்தியாவந்தனமே! உனக்கு ஒரு நமஸ்காரம். மூன்று வேளையும் தவறாமல் செய்துவந்த ஸ்நானத்திற்கும் ஒரு வந்தனம். ஒ தேவர்களே! பித்ருக்களே உங்களுக்கும் நான் கை கூப்புகிறேன். உங்களைச் சந்தோஷஞ்செய்ய என்னால் முடியாது. மன்னிக்க



வேண்டும். நான் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து ஆயர்குலத்துக்கு மகுட மணிபோன்ற கண்ணனை நினைத்து நினைத்து என் பாபங்களைப் போக்கிக்கொள்ளுகிறேன். அதுவே எனக்குப் போதும். மற்றது எனக்கு வேண்டாம்? என்கிறார். இதுவே சாந்தத்தின் வெளித்தோற்றம். இதைக் கைப்பற்றுவதே ஒருவனை உத்தமனாய்ச் செய்துவிடும்.

இரசங்களெல்லாம் உருவெடுத்து நிலைத்து மடியும் இடத்திற்குச் சாந்த ரசம் என்பார்கள். காற்றில்லாத இடத்தில் விளக்கின் சுடர் அலையாது நிற்பதுபோல மனிதனுடைய ஆசைகள் துன்பங்கள் இன்பங்கள் எல்லாம் மடிந்து ஸ்திதப் பிரக்ஞை நிற்கும் நிலை அது. அதை எளிதில் அடைய முடியாது. கவிஞனுக்கு மூலாதாரமான மனோபாவமாயுள்ளது இந்தச் சாந்த நிலை. ஒரு பொருளில் ஆசை வந்துவிட்டால் நம் மனமே அப்பொருளை மற்றவைகளைக் காட்டிலும் உயர்த்திவிடுகிறது. விருப்பும் வெறுப்பும் இருக்கும்வரை மனத்தில் சாந்த நிலை உண்டாகாது. சதாசிவப்பிரமம் என்பவர் சாந்த ரசத்தின் அவதாரம் போன்றவர். அவர் இந்தச் சம நிலையைப்பற்றி ஓர் இடத்தில் விளக்கியிருக்கிறார். சாந்த நிலையடைந்த யோகி ஒன்றையும் தனக்கு வேண்டும் என்று விரும்பமாட்டான். ஒன்றையும் வெறுக்க முன்வரான். அவனுள்ளம் ஆசையும் வெறுப்பும் இல்லாமல் இருப்பதால் சந்தனம்போலக் குளிர்ந்ததாய்த் துலங்கும். அங்கு இன்பம் நிலைத்து நிற்கிறது. பழந் தமிழரிடையே இவ்வுயர்ந்த கொள்கை பெரிதும் போற்றப்பட்டு வந்தது. புறநானூற்றில் ஒரு செய்யுள் இதை வலியுறுத்தும். அது வருமாறு:-

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா;
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன;
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே; முனிவில்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே".

**— கவுணியன் பூங்குன்றன் பாட்டு.**

சூரியன் சந்திரனாய் இருக்கட்டும், குளிர்ந்த கிரணங்களையே வீசட்டும், சந்திரன் கதிரவனாகட்டும், அவன் கிரணங்களும் அனலையள்ளி வீசட்டும், அக்கினி மேல் நோக்கி எரியும் வழக்கத்தைவிட்டுக் கீழ்முகமாய் எரியட்டும், எது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். எல்லாம் மாயையின் செயலென்று எண்ணிச் சாந்த நிலையை அடைந்தவன் ஆச்சரியமடையமாட்டான். ஆகாயம் இடிந்து விழுந்தாலும் பூமி பிளந்தாலும் பற்றுதலற்று, நிறைந்த உள்ளத்தோடு இருப்பவனுக்கு ஒரு குறைவுமில்லை.

உலகம் ஒரு லீலை. எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் அருட் சத்தி ஒன்று உண்டு. அதன் சந்நிதானத்தில் நாமெல்லாம் பிரவிருத்தி செய்கிறோம். ஈசுவரன் ஒரு மகா கவி. எங்கள் செயல்களுக்கெல்லாம் பலிதரும்



காரணனாயிருப்பதுமாத்திரமல்லாமல் அவனே தானாக எங்கள் புலன்களிற் புதைந்து நின்று தனது சுந்தரத் தொல்லுலக மாயையைக் கண்டு களிக்கின்றான் என்ற கருத்திற் சாந்த ரசம் ததும்புவதை யுணரலாம். இந்த இரசம் தாகூருடைய பாட்டுக்களில் மலிந்து கிடக்கக் காணலாம்.

ஒரு பாட்டு.

வாழ்வெனும் பொற்கலம் வழியுமா றீசனே
வாயார நீயு மொருகால்
வற்றாத நல்லமுத மிக்கலத் திட்டுமிக
வாய்மடுத் திடுவ தென்றோ
நீள்புவன போகங்க ளாயநின் தோற்றத்தை
நீயெனது கண்கள் கொண்டே
நேராக நோக்கிமிக ஆனந்த முறுவையோ
நீயெனது செவியில் நின்றே
சூழுநின் சாசுவத மாயநற் பாவினிசை
சோராது கேட்டு மகிழ்வாய்
சொல்லாற் றொடுக்குமென துள்ளமுன் சுந்தரத்
தொல்லுலக மாயை கண்டே
வாழ்வினைப் பேரன்பு மயமாக வைத்தநின்
வற்றாத கருணை யமுதம்
வறியனென் சிறுமைபோ யுனதினிமை யாய்மாற
வாழ்வுதந் தருளு மாலோ.

இது சாந்த ரசத்தின் சிகரம்.

இரசம் என்பது கேவலம் அநுபவத்தை மட்டுமே குறிப்பிடும். தன்னுடைய அனுபவத்தை முற்றாக எடுத்துக்கூற ஒருவனுக்குத் திறனில்லை. பூரணமான இன்ப அநுபவத்திற்கு அயர்ந்து நன்றாய் உறங்கும் நிலையையே

சமமாகக் கூறலாம். உறக்கத்தில் நாம் என்ன செய்தோ மென்று யாருக்கும் புலப்படாமல் போனாலும் விழித்த வுடன் ஒரு புத்துணர்ச்சி உடம்பு முழுதும் பரவி யிருப்பதை யறியலாம். அவ்விதமே காவியத்தைப் படித்தோ நாடகத்தைப் பார்த்தோ இரசிகர்களுக்குப் புலன்களின் தெளிவு ஏற்படுகிறது. அதுவே இரசம் பொருந்திய காவியத்திற்குத் தக்க பரீட்சையாகும். தாகூரின் பாடல்களைப் படித்து முடிந்தபின் புலன்கள் தெளிவுறுகின்றன. காலையில் மலரும் தாமரைபோல நம்முள்ளம் அயராத புதுமையில் மலர்கிறது. யார் அதை வேண்டாமென்று சொல்லுவார்கள்.

**சோ. நடராசன்**

# கீதாஞ்சலி

அந்தமில் வாழ்வெனக் கருளினை ஐயனே
அதுவுமுன் றிருவுள்ளமோ
அழிகாய மாமிக் கலங்கவிழ்த் துக்கவிழ்த்
தரியபுது வாழ்வுபெய்தாய்
சந்ததமு மிச்சிறிய சுந்தரப் புற்குழல்
தாரணியெ லாங்கொண்டுபோய்
சாசுவத மாகவே புதுமையின் னினிமையுள
சங்கீத கானமருள்வாய்
எந்தையுன் கரகமல சஞ்சீவி பட்டதும்
என்மனம தெல்லைமீறி
எட்டாத வானந்த சாகரத் தாழுவேன்
என்னென்ன வோவலறுவேன்
சிந்தையுஞ் செய்வதற் கரியநின் கொடைகளென்
சிறியகை கொள்ளுமாலோ
தெண்கடல் மடைதிறந் தென்னநீ யுகமெலாஞ்
சொரிகுவை நிறைவதெப்போ ? 1

2

பாடுக வென்றுநீ பணித்தலு மையனே
தேடுதற் கரியநின் திருமுகம் பார்த்தேன்
உள்ளம் பொங்கி யுரைதடு மாறிக்
கரையறி யாதவோர் பெருமித முற்றேன்.
உண்ணீர் மையினுற் கண்ணீர் கலங்க
மாறுபட்ட பொல் லாமையெல் லாமோர்
ஆறுபாட் டின்னிசை நல்லொழுக் காயின.

பரவையைத் தாண்டுமப் புள்ளினம் போல
என்மனங் களித்துநின் பொன்னடி படருமென்
பாடலுக் கிரங்கும் பான்மையை யாதலிற்
கூடிய தெனக்குநின் கோலத் தெரிசனம்
பாணனென் றதனாற் போவென விட்டார்
ஆதலிற் கிட்டிய தல்லது கிட்டுமோ
மாலயன் காணா மலரடி யெனது
பாவெனுஞ் சிறகாற் பறந்துவந் தடைந்தேன்.
பாட்டினில் மயங்கிப் பரவச மாகிப்
பரம்பொரு ளாகிய வுன்னைத்
தரந்தெரி யாதுநான் தோழவென் றேனே. 2

## 3

பண்ணிறைந்த வின்னிசையாற் கவிபாடும்
பான்மையைநீ பரம யோகீ
எண்ணியெண்ணி யென்னுள்ளே யிறுமாந்தே
யிருப்பதல்லா லறிய மாட்டேன்
மண்ணையொளி மயமாக்கி வானெங்கு
முயிர்ப்புதவி வருவான் யாற்றுத்
தன்மையென வேசொரிவை தெள்ளமுத
மிஃதெனவித் தரணி மீதே. 3

உன்னொடு பாடுதற் கென்மன மையனே
பன்னெடு நாளாய்ப் பரிதவித் திடுமே
பாடுவ னென்றுநான் வாய்திறந் திடுகையில்
உரைதடு மாறி ஓவென் றலறுவேன்
அந்தமி லின்னிசைப் பாவெனும் வலையிற்
பந்தமுற் றகப்படும் பாவியென் மனமே. 4



## 4

மன்னுமுன் தெய்வத் திருக்கரப் பரிசம்
மானுட யாக்கையெவ் வுறுப்பும்
துன்னிநின் றியக்கும் உண்மையை நன்று
துணிந்தன னாதலி னாலே
சொன்னவா றுடம்பை நாடொறு மடியேன்
தூய்மையாய் வைத்திட முயல்வேன்
இன்னுயிர்க் குயிரா யென்னுளே நிற்கு
மீசனே யெம்பெரு மானே. 5

என்னகத் தலரு மிதயநற் கோவில்
இமைப்பொழு தகலா தென்றும்
மன்னிவீற் றிருத்தி நீயெனு மியல்பை
மாசற வுணர்ந்தன னதனால்
துன்னுபொல் லாமை யாவையுந் தூரத்
துரத்திட முயன்றிடு கின்றேன்
இன்னுயிர்க் குயிரா யென்னுளே நிற்கு
மீசனே யெம்பெரு மானே. 6

மன்பதை செய்யுஞ் செய்கைக ளெவைக்கும்
வலிதருங் காரண னாகி
அன்புட னுடனா யருளுவை யென்னு
மறிவினை யறிந்தன னதனால்
என்னுளச் செயல்கள் யாவுநின் னருளே
யென்றெணி யிருந்திட முயல்வேன்
இன்னுயிர்க் குயிரா யென்னுளே நிற்கு
மீசனே யெம்பெரு மானே. 7

## 5

வேண்டுவ னென்னை யாண்ட
வித்தக வுன்பா லொன்றே
ஈண்டிய வொருபோ துன்றன்
ஈடிலாத் திருமுன் நிற்கப்
பூண்டவென் கரும மாமிப்
பொருகடற் கரைகாண் பேனே
காண்டகு முனது தெய்வக்
கருணையின் முகங்கா ணுதே. 8

பிறந்தது வேனி லின்று
பிறந்தது தென்றற் சோகம்
பறந்தபாண் வண்டின் கூட்டம்
பாடியிச் சோலை யெங்கும்
வறந்தரு வாழ்வை வேள்வி
வழங்குதற் கிதுவே காலம்
மறந்துமற் றலுவ லுன்முன்
மனமகிழ்ந் தொடுங்கி நின்றேன். 9

## 6

சிறுமலர் கொய்தி சற்றுந்
தாமதித் திடுதல் வேண்டா
வெறுமலர் வாடி மண்மீ
துறுமுனங் கொய்து கொள்வாய்
நிறமிலை யாணு லென்ன
நின்னருட் சேவைக் கின்னே
குறைபல பொறுத்துக் கொண்டு
கொய்திடு குணங்க ளாணுய். 10



## 7

புன்கவி நயங்கள் பூணுப்
பொதுக்கவி அணிக ளற்றுக்
கென்கவிக் கலைகள் வேண்டா
இனியநின் சார்பு போதும்
உன்றிரு முன்பு கற்ற
கவியெனும் மமதை மாண்ட
தென்னரு வாழ்வை நேரா
யெளியபூங் குழலாய்ச் செய்வேன். 11

செய்த விக்குழல் வாயினிற் சேர்த்துநீ
பெய்தருள் சச்சி தானந்தப் பேரிசை
பொய்யணி யெமைப் பேதப் படுத்தியுன்
செய்ய வாய்மொழி சேரவி டாதுகாண். 12

## 8

அணிமணிகள் பூட்டிப்பட் டாடைகள் புனைந்தங்ஙன்
அரசிளங் குமரரெனவே
ஆடுமச் சிறுவர்க்கவ் வணிகளிடை யூறுசெய
ஆட்டத்தி னுட்டமழியும்
துணியினிற் றூசுபட் டிடுமெனுந் துயரினுற்
றொட்டுமறி யாருலகினைத்
துறவுகொண் டசையவும் மிகவஞ்சி யன்னையே
சுயவசம தின்றிவாழ்வார்
பணிசெயா ரிப்புவிப் பாவனம தானசுப
போகதா சிப்படிகிலார்
பயனில்லை யன்னையே நீதரும் பொன்னணிப்
பந்தத்தி னுலிம்மையில்

மனிதவாழ் வென்கின்ற விப்பெரிய திருவிழா
மகிமையைக் காணலின்றி
மன்னுபுல னைந்தினையு மாளச் சிறைசெயின்
வழிமீள வகையில்லையே. 13

9

என்னையென் தோள்மீது தூக்கிச்செல் வேனெனும்
எண்ணமது மடமையன்றோ
ஏதுமில் லாதபிச் சைக்கார னேயுன்ற
னில்லத்தி லோவிரப்பாய்
பன்னரிய வண்டபகி ரண்டமெல் லாங்கணம்
பாலிக்கு மையனானது
பாரம் பொறுப்பதற் கில்லையோ பித்தனே
பாரமவ னுக்குவிடுவாய்
பின்னையென் னென்னவரு மோவென்று சஞ்சலப்
பட்டுநீ பேதையழிவாய்
பேயான ஆசையுன் னல்லறிவெ னுஞ்சுடர்
பெருமூச்சி னாலணைக்கும்
அன்னைநல் லன்பினால் அருள்கின்ற தூயகொடை
யதுபோது மென்றடங்காய்
ஆகாத பேராசை கொண்டங்கு மிங்குமா
யலையா தடங்குசுகமே. 14

10

வீழ்ந்தவ ரீனர் வறியரில் வறியோர்
தாழ்ந்தவர்க் கேயொரு தஞ்ச மாயநின்
பாத பீடம் பணிவதற் கையனே
தாழுமோ வென்றலை தாழ்த்தினா யினும்
வீழ்ந்தவ ரீனர் வறியரில் வறியோர்
தாழ்ந்தவ ரிருக்கும் சந்நிதிக் கொருதரம்



தாழுமோ வகந்தையில் மூழ்கிய வென்மனம்
நீயோ
வறியவ ருடையணிந் தெளியை போல
வீழ்ந்தவ ரீனர் வறியரில் வறியோர்
தாழ்ந்தவ ரிருக்கும் சந்நிதி யுலாவுவை
நானோ
அகந்தையா லுன்னை யணுகவும் மாட்டேன்
தீன தயாளுவுன் சேவடி படரும்
வீழ்ந்தவ ரீனர் வறியரில் வறியோர்
தாழ்ந்தவ ரிருக்கும் சந்நிதிக் கென்மனம்
ஒருநா ளொருபொழு தாயினும்
உருகா தையநா னுய்யுமா றெவனோ. 15

11

மணியுருட் டிச்செபம் பண்ணியே காந்தமாய்
மந்திரஞ் சொல்லுகின்றாய்
மங்குமிருள் குடிகொண்ட கோவிலிற் கதவுதாள்
மாட்டிவழி பாடுசெய்வாய்
பணிசெயுங் கடவுளுன் முன்னில்லை நோக்குவாய்
பாதையிற் கல்லுடைக்கும்
பாட்டாளி மகனோடு கூட்டா யிருக்கிறான்
பண்ணையா ளோடுமவனே
துணியெலாந் தூசுறச் சுடுவெய்யில் தன்னிலும்
தூறுமழை புயலிலுந்தான்
துணையா யிருப்பனச் சோதிநற் கடவுளுன்
தூயவுடை தன்னைவிட்டே
மனிதனே யீசனைப் போலநீ மண்மீது
வந்துபணி செய்யவேண்டும்
மன்னுநல் வீடெனப் பண்ணுவாய் வீட்டுக்கு
மார்க்கமெங் கேயறிவையோ. 16

படைப்பெ னும்பெரும் பந்தத்தை யெம்பிரான்
கடைப்பி டித்ததி லானந்தங் காண்பனே
படைத்த நாண்முத லாயவன் பந்துவே
துடைத்தி டாய்வெறுந் தூபதீ பங்களே. 17

முணுமு ணுக்குமிம் மந்திரம் போதுமுன்
கிணுகி ணுத்த புகையொடு கீதமும்
பணியெ டுத்து வியர்வை பறந்திட
துணியும் தூசுபட் டாலென்ன சேவைசெய். 18

## 12

பாதை நீண்டது பற்பல நாட்செலும்
சோதி யாய முதற்சுடர்த் தேரினில்
பாதை யாயபல் வேறு புவனங்கள்
ஆதி நாட்டொட் டலைந்தலைந் தேவந்தேன். 19

எண்ணில் தாரகை மண்டல மெங்குநான்
பண்ணு யாத்திரைத் தேரடி பட்டதால்
நண்ணி யேயுனை நாடி வருபவர்
மண்ணி லெத்தனை மார்க்க மறிவரோ. 20

பண்டு போயறி யாத புரத்திடை
ஒன்றி யாய்வரு மன்னிய வூரினன்
கண்ட வீட்டுக் கதவு கணக்கில
சுண்டி வந்துதன் தொல்மனை தட்டுவான். 21

நல்ல தாயெளி தாகிய நேரிசை
சொல்ல வல்லவர் தொல்லிசை நுட்பமே
எல்லை யற்ற விசைத்திசைத் தேபயின்
றல்ல லூற்றடை வாரது வல்லையே. 22



அந்த ரங்கம தாகிய வற்புதச்
சுந்த ரத்திருச் சோதியின் மூலமும்
பந்த மாம்வெளிப் பாதைகள் தாண்டியே
வந்து சேர வகையுண்டு காண்மினே. 23

## 13

பாட வந்தவென் பாடல்க ளாயின
கூடு நாளிது காறும் படித்திலேன்
நீடு வீணையின் தந்திகள் நேரிசை
கூட மீட்டிக் குறைத்துக் கழித்தனன். 24

கால மின்னுங்கை கூடிய தில்லையால்
நாலு சொல்லை நயம்பட வைத்திலேன்
ஏலு மோவெனக் கென்றென துள்ளமும்
சால வும்விளை வாற்சலிக் கின்றதே. 25

மொட்டு நாள்மல ரின்னும் முகைவிரிந்
திட்ட தில்லை யிராப்பக லாகவே
நெட்டு யிர்த்தது நீளநி னைந்துபல்
வட்ட மிட்டு வருமிளந் தென்றலே. 26

காண்கி லேனவன் காதற் றிருமுகம்
மாண்பு றும்மலர்த் தேன்மொழி கேட்கிலேன்
தாண்டு மெல்லடிச் சந்தடி யேதெருத்
தாண்டி வந்தென் செவிகளிற் சாருமால். 27

காலை தொட்டுக் கதிரவன் போய்மறை
மாலை வந்தது வும்மறை யும்வரை
வேலை யாக விரித்தன னாசனம்
கோல நல்விளக் கின்னுங் கொளுத்திலேன். 28

வந்து நாயகன் வாசற் படியினில்
முந்து போதுநீ போதென வெங்ஙனம்
வந்தனை செய்து நல்வர வேற்பனே
எந்த நாளவ னென்னைவந் தெய்துமோ. 29

## 14

ஆசைக்கொ ரளவில்லை ஐயனே யுன்முன்னுன்
அழுதவைக் களவுமில்லை
ஆசைப் படப்படத் துன்பமே யாகுமென்
றறியாத வென்னையாள
ஓசைப் படாதுநீ சும்மா விருந்தென்றன்
உள்ளத்தை யுன்கருணையால்
ஓங்குநன் னெறியின்க ணுய்யச் செலுத்தினை
உண்மையறி வானபொருளே
காசுக் கிரக்கநான் காற்றைக் கொடுத்தனை
காயமாங் கோயில்தந்தாய்
கரியமுகில் வில்லிடும் பெருவிசும் பீய்ந்தனை
கடல்மலையொ டாறுதந்தாய்
பேசப் புகின்னுனது வள்ளன்மை பெரிதுநான்
பேணியுனை நாடிவந்தால்
பேயான வாசைநோய் பிடியாம லாளநீ
பெரிதொளித் தருள்செய்வையே. 30

வாழ்ந்தன னிதனுல் வையக முதலே
மலையுங் கடலும் வானமு மழிவில்
கலையுந் தந்தெனைக் காத்தாய்
அலையா தென்னுள மாசைநோய் கொண்டே. 31

வானகமுஞ் சோதிகளும் வடிவுமுயி ரும்மனதும்
ஆனவிவை கேளாமே அளித்தவைக ளனுபவிக்க
நாளுளுந் தகுதியுடை யவனுக்கி நன்றுபுரி
கோனேபே ராசைதனை நீக்கியாட் கொள்ளுதியே. 32



## 15

நாளுமின் னிசையுள்ள கவிபாடி யேத்தவே
நாடியுன் மணிமண்டபம்
நானங்கொர் மூலையிற் றங்குவேன் வேறுதொழில்
நானிலத் தேதுமறியேன்
பாழுமென் வாழ்வினைப் பண்புசெய் திடவேறு
பணிகளிங் கறியமாட்டேன்
பாட்டாக வென்மனம் பாடிக் கழிக்குமால்
பயனென்று மறியாமலே
சூழுமிருள் தூங்குநற் சாமத் திருக்கோவில்
தொழுமணி யிசைக்குமப்போ
தொண்டனே யிங்குநீ வந்துபா டுகவென்று
சொல்லிப் பணித்தருளுவாய்
கோளில்நற் கனகயாழ் காலையிற் காற்றுடன்
கூட்டியின் னிசைசெய்யவே
குருவாகி யென்னையாட் கொள்ளுதற் கீசனே
கூவுநின் சந்நிதிக்கே. 33

## 16

வைய கத்துநின் வாழ்வெனும் வேள்வியில்
ஐய வந்து கலந்துகொள் வாயெனக்
கையி லோலை கிடைத்ததும் வந்தனன்
செய்ய வாழ்வு சிறந்த தெனக்குமே. 34

கண்ணி னுற்பல காட்சிகள் கண்டனன்
திண்ண மாயென் செவிகளுங் கேட்டன
பண்ணு லாவிய வீணையிற் பாடுக
வென்ன நானதற் கேற்றவா பாடினன். 35

வந்து நானுன் மலர்முகங் காணவும்
சிந்தை யொன்றிவாக் கற்றுனக் கேயொரு
வந்தனை செய்ய வும்இனிக் காலந்தான்
வந்த தோவென வாய்விட் டலறினேன். 36

**17**

என்று வருவானோ நன்றவன் மலர்க்கரத்
தொன்றிய மனதுடன் சரணென வொடுங்குவேன்
என்றுளத் தெண்ணியே யிதுவரை யிருந்தேன்
காலந் தாழ்த்தது கடமைகள் கழிந்தன
சாத்திரம் பேசினர் தருமங் கூறினர்
சூத்திரங் கொண்டெனைச் சூழக் கட்டினர்
அமிழ்தினு மினியார் அருண்முகம் பார்த்துநான்
வாழா விருந்தேன் வைதன ருலகினர்
நோக்கமில் லாளென நொந்தனர் சரியே
சந்தை கலைந்தது வேலைக ளோய்ந்தன
சிந்தையில் வெகுண்டெனைத் தேடிவந் தவரெலாம்
திரும்பினர் திரும்பா திருந்தே னென்னுயிர்
விருந்தினர் மலர்க்கரத் தொடுங்குவ னென்றே. 37

**18**

மழைக்குலம் திரண்டது மாநில மிருளக்
கண்மணி யெனைநீ கடைவா சலிலே
தன்னந் தனியே தவித்திட விட்டாய்
கனத்தபல் வேலைக் கடலலை வேளையிற்
சனத்திர ளோடுநான் தங்குவ னாயின்
தனித்தவிவ் விருளிற் சரணம் நீயே
நெடுமழை சூழுமிந் நீளிருட் டனிநாள்
உன்முகங் காட்டா தென்னைநீ விட்டால்



கழியுமா றுளதோ காலமிங் கெனக்கே
வானப் பெருவெளி வருமிருள் பார்த்தேன்
உள்ள மலைகிற தையோ
துள்ளி யலையுமிச் சுழல்காற் றெனவே. 38

**19**

வாய்திறந் தொருசொல் வழங்கா யெனில்நான்
ஓய்விறந் துனதுநற் சாந்தியி லொடுங்குவேன்
விண்மீன் காவலில் விளங்குநல் லிருள்தான்
மண்மிசைத் தலைகவிந் தடங்குதல் போலவே
வாய்ச்சொல் லற்றுநான் மௌனியாய் நிற்பேன்
பொழுது விடியுமே பொய்யிரு ளகலுமே
பழுதிலுன் திருமொழிப் பொன்னரு வித்திரள்
விண்ணையும் பிளந்துவல் வேகமாய் வருமே
பண்ணெனுஞ் சிறகடித் துன்திரு வாய்மொழி
என்னுடைக் கூண்டுக ளெங்கணும் பாடுமே
மன்னுமென் முல்லையஞ் சோலையி லெங்குநின்
பாவிசை பூவெனப் பரிமளித் திடுமே. 39

**20**

மடுவிற் றாமரை பூத்தவன் றென்மனம்
மடியுற் றெங்கு மலைந்து மயங்கினேன்
படியிற் கூடை பறிமல ரின்றியே
மிடியுற் றேன்மலர் பூத்த தறிகிலேன். 40

விட்டு விட்டென் மனதினில் வேதனை
தொட்ட தவ்வழிச் சொப்பனங் கண்டதை
விட்டெ ழுந்தென் விநோத நறுமணம்
விட்ட வெங்குங் கிளர்ந்தது தென்றலில். 41

எங்கி ருந்திவ் வினிய நறுமணம்
பொங்கி வந்தென துள்ள மலைத்ததோ
தங்கு நல்முது வேனில் தலைவிரித்
திங்கு வீசி யிருந்து நிறைந்ததோ. 42

என்ம னத்தில் விரிந்த வினிமையிஃ
தென்ன கத்து ளிருந்து மலர்ந்ததே
என்னு டைப்பொரு ளென்னுடை யன்பெனச்
சொன்ன வன்று தெரிந்திருந் தேனிலை. 43

## 21

ஓடஞ் செலுத்த வேண்டும்நான்
உணர்வை யலைக்கும் நாழிகைகள்
ஓடிச் சென்ற வின்னும்பார்
உறங்கு கின்றேன் கரையிலந்தோ
கூடு வசந்தம் பூப்பூத்துக்
கூடி விடைபெற் றேகியதே
வாடி வதங்கும் மலர்சேர்த்து
வறிதே நின்று வருந்துகிறேன். 44

கடலிற் றிரைகள் கதறியழும்
கவியும் நிழல்சேர் சாலையிலே
படியும் மஞ்சட் சருகுமிக
மறுகுங் காற்றி லசைந்துவிழும்
மிடியுற் றென்னே வாழாநீ
வெறிதே பார்த்து மயங்குகிறாய்
கடிதே யந்தக் கரையில்எழும்
கானம் வருதல் கேளாயோ. 45



## 22

காணா தெங்குந் தனியாகக்
கள்வன் போல அடிவைத்தே
போனாய் மேகம் புயல்மூடிப்
பொழியும் வேனிற் பருவமதில்
வீணாய் வெருமிக் கீழ்க்காற்று
வேகங் கொண்டே கூவுமதைப்
பேணா தின்றிக் காலமகள்
பெரிதுங் கண்கள் மூடிடுவாள். 46

என்றுந் துயிலா நீலவெளி
யின்றோர் கரிய துகில்மூடும்
பொன்றா விசைசெய் கானகமும்
போயோர் நிட்டை கூடிடுமால்
நன்றே வாயிற் கதவெல்லாம்
நயமாய்த் தாளிட் டடைபட்ட
என்னா ருயிரே தனிவருவோய்
என்னிற் புகுத வேண்டுகிறேன். 47

## 23

தஞ்ச மின்றித் தவிப்பவர் போலவே
மஞ்சு லாவிய வானங் குமுறுமால்
அஞ்ச வீசு புயலதிர் நள்ளிருள்
நெஞ்சி லன்புடன் நீயெனை நண்ணினாய். 48

என்னை யாளுடை யண்ண லிரவினில்
பொன் னடியிப் புவியினில் வைத்தெனை
எண்ணி யாத்திரை பண்ணினை யோவெனக்
கன்னை யப்பன் அருந்துணை யானவா. 49

கண்ணு றக்க மிலாதுனை யேகணம்
எண்ணி யெண்ணி யிரங்குவ னேமனம்
கண்ணும் பூக்கக் கதவினை யேதிறந்
தின்னு முன்னையெங் காயினுங் கண்டிலேன். 50

என்ன காண்ப னிருளிரு ளெங்குமே
பின்னை யொன்றுமென் பார்வையிற் பட்டில
தின்னு நீயெனை யெண்ணி வருகிறாய்
என்ன விந்தையுன் பாதை யறிகிலேன் 51

எந்த ஆற்றி னிருங்கரை தாண்டுவாய்
எந்த மாமலை யெந்தவெங் கானமோ
எந்த வெஞ்சுர மெந்த விருள்வழி
எந்த வாறுவந் தென்னை யணுகுவாய். 52

## 24

பரிதிகண் மறைந்தான் பறவைபாட் டடங்கிய
சுருதிவண் டோய்ந்த சூழிளந் தென்றலும்
மாங்கிளை யிடையே தூங்கிய தாதலின்
ஓங்கிய துயிலினா லுலகினைப் போர்த்து
மாலையிற் றாமரை மலரினை மெல்லெனக்
கோல விதழெலாங் குவித்துவைப் பதுபோல்
இரவெனும் போர்வையி லென்னையும் மூடுவாய்
ஓய்வெனும் நிசியில்நல் லுயிர்புதி தெய்திடும்
நாண்மலர் போலவென் நலிவுறு வாழ்வையும்
சிறுமையும் வறுமையும் சிரிதி னகற்றி
நெடுவழி தொலையுமுன் நிறையுண வொழியுமுன்
சுற்றிய வாடையுந் தூசுபட் டழியுமுன்
தஞ்ச மின்றித் தவித்திடு மெனக்கும்
புதுமைதந் தருளிநீ போற்றிட வேண்டுமே. 53



## 25

இன்னல் சூழு மிரவினில் யானுமுன்
பொன் னடிகள் புகலென நம்பியே
என்னை யும்மறந் தின்பத் துயில்செய்வேன்
உன்னை வாழ்த்தவிவ் வாழ்விது போதுமோ. 54

போற்று மாறெவன் புன்மனத் தாலுனை
ஏற்ற வாறுநா னேற்றுதற் கேலுமோ
தோற்று நாளின் துயர்கெட வேயிருள்
மாற்றி வைத்து மலர்ந்திடச் செய்கிறாய். 55

## 26

கெடுக சிந்தை கெடுகவென் தூக்கம்
கடுகிவந் தென்னைக் காணவென் றிருந்தாய்
கொடியவென் தூக்கம் குலையா தயர்ந்தேன்
வீணையுங் கையுமாய் விரைந்துநள் ளிருளில்
பேணிவந் தாய்நான் பெரும்பித் தானேன்
கனவினிற் கேட்டதுன் கையுறு கீதம்
காணா தொழிந்தன கனவில்பல் லிரவுகள்
ஏனோ வுணரா னிழந்தேன்
ஆனாத் துயிலிலு மருந்துணை யானாய். 56

## 27

இச்சை யென்னு மெரிகின்ற தீக்கொண்டே
இச்ச கத்தி லொளியினை யேற்றுவாய்
மெச்சு நல்விளக் கில்மின் சுடரிலை
சிச்சி நீயிதிற் சாவது சாலுமே. 57

வறுமை யாகிய சேவகன் வாயிலிற்
குறுகி நாளுமு னைவந்து கூப்பிட்டே
இறைவ னுன்மண வாள னிரவினில்
வரவு பார்த்து வழியினின் றானெனும். 58

மேகம் மூடிய வானக மெங்குமே
சோக மாய்மழை சோவென் றிழிந்ததென்
னுகத் தேயொ ரருட்சியுண் டானதே
ஆக! மற்றித னர்த்த மறிகிலேன். 59

மின்னல் கீறிய தின்னு மிருள்மிகப்
பன் மடங்கு படர்ந்ததென் பார்வையில்
இன்னி சையில் விரவில் வரும்வழி
என்ன காண்கிலன் என்மன மேங்குமே. 60

ஒளி யொளியில் வொளியினை யேற்றுவாய்
வெளியில் வானம் வெடிக்கப் புயல்பொரும்
தெளிவி லாதிருள் கல்லிரு ளானதே
ஒளியை அன்பினை யேற்றுநின் வாழ்விலே. 61

## 28

கொண்டது விடாதென்னை யண்டிநிற் கும்விலங்
குக்கூட்ட மாந்தொல்லைகள்
கோடானு கோடியுங் கொன்றிடுவ னென்றுளங்
கொள்ளிலென் னெஞ்சுபதறும்
அண்டருங் காணாத வரியநிதி யுன்னிடத்
தாகுமென் றறிகுவன்யான்
ஐயனே நீயெனது மெய்யன்ப னுனலு
மல்லவனே காக்காய்ப்பொனுக்
குண்டெனக் காசையில் விடுதலைக் கேயென்னி
லுள்ளமதை யெண்ணநாணும்
ஊனமும் மரணமுங் கொண்டவிப் போர்வையின்
தொன்றுக்கு முதவாதெனின்
பண்டுவரு பாசத்தி னுலிதனை வவ்வினேன்
பாவியேன் வறுமைபெரிதே
பாலித்து மிக்கவருள் செய்திடுவை யென்றென்று
பயமுற்ற தேழை நெஞ்சே. 62



## 29

நாம மென்னுஞ் சுவரை யெழுப்பியென்
நாமம் பூண்டவ னைச்சிறை வைத்துளேன்
நாம மாய விருட்டறை யில்லவன்
யாம மும்பக லும்மழு தோயுமே. 63

நாளு நானிந்த நல்ல சுவரினைத்
தாழ்த லின்றி விரைந்து சமைத்தனன்
சூழ வேயுயர்ந் தோங்கிவிண் சேர்மதில்
தாழு சாயலில் என்னை மறந்தனன். 64

நீண்டு வானை யிடிக்கு மதிலையான்
யாண்டு மோட்டை யுடையலில் லாமலே
மாண்ட பூச்சொடு சாந்து மெழுகினேன்
பூண்ட நாமம் புரைபட லின்றியே. 65

செய்த மாமதி லென்னை யிருண்டிடச்
செய்த மாய மொருசிறி தாயினும்
ஐய யானிங் கறிந்திலன் மற்றதன்
மெய்யில் சூழ்ச்சியில் மிக்கு மறைந்தனன். 66

## 30

இரவி லண்ணலைக் காண்பதற் கேகினேன்
இரவி லேயெனைப் பின்தொடர் வானெவன்
அரவ மின்றி யவனை விலக்குதற்
கொரு புறத்தங் கொதுங்கியும் போகிலான். 67

பெருமி தத்த நடையுட னேயவன்
வருவ ழிப்புழு தியெழும் வாய்விட்டே
தருமொ ழிக்கவ னும்எதிர் கூவுவான்
சிறியன் யாரிவன் என்னைத் தொடர்கிறான். 68

பிரபு மற்றிவன் என்னகத் தேயுளான்
சிறிய வென்சுவை பாவம தாயுளான்
வறியன் வெட்கமி லானிவ னோடுயான்
குறுக நாணினன் உன்னிடத் தண்ணலே. 69

## 31

கைதி யேயுனைக் கைகட்டி வைத்தவன்
செய்தி யாதெனச் சொல்லுதி மற்றெனக்
கைய னென்னுடை யண்ணலென் றுன்கைதி
வைய கத்திலெல் லாரையும் வெல்வன்யான். 70

எல்லை யற்ற நிதியொடு வல்லமை
எல்லை யற்ற வகையினி லெய்துவேன்
எல்லை யாயெதற் குந்தலை யாகுவேன்
எல்லை யில்லை யெனக்கென வெண்ணினேன். 71

எங்கள் மன்னவ னுக்குரித் தாகிய
பொங்கு மாநிதி சேர்த்தென தாக்கியே
அங்கென் மூலபண் டாரத் தொதுக்கினேன்
செங்கண் சோரத் துயில்வந் தொதுங்கினேன். 72

வண்ண மாய வளர்நிதிக் கோயிலில்
அண்ணல் மஞ்சத்தி லாழ்ந்து துயில்செய்தேன்
கண் விழித்ததுங் கைதியெனக் கண்டேன்
எண்ண வொன்றுமற் றொன்றெனக் கானதே. 73

கையி லேயுனைக் கட்டிய சங்கிலி
செய்த பேரெவர் சொல்லுதி கைதியே
மெய்யு றப்பிணித் தேனுனை யானென்றுன்
கைதி கட்டை யவிழ்க்க வறிகிலான். 74



உலகை யேயொரு கட்டிற் பிணிக்குமவ்
வலகி லாதபே ராற்ற லுடையன்யான்
உலகில் யாரெனை வெல்பவர் மற்றெனக்
குலக மஞ்சலி செய்துகை கூப்புமே. 75

இரவு நல்ல பகலுமில் லாதுநெஞ்
சுரனு டன்பல தீயுலை மூட்டியே
விரவு சங்கிலிக் கோவை முறுக்கினேன்
கரவி லொன்றுங் கரந்தறி யாதயான். 76

வேலை முற்றும் முடிந்தது சங்கிலி
மாலை யாயெனை யேவந்து மாட்டவே
கால மோவெனக் கையற்று நானதன்
கோல மாய பிணிப்பிற் குறுகினேன். 77

## 32

நானா விதப்பட்ட பாசங்க ளாலென்னை
நானிலத் தன்புசெய்வோர்
நன்றுநீ யெம்மகத் தகலா திருத்தியென
நயமாய்ப் பிணித்துவைப்பார்
ஆனாலெ னன்பினுக் கன்புசெய் வாயுன்ற
னன்புக்கொ ரளவில்லையே
ஆகாத பாசத்தி னாகுமன் பல்லவுன
தானந்த வீடுதருமே
போனால் மறந்திடுவ னென்றெண்ணி ஐயனே
பொழுதுமெனை யகலமாட்டார்
பொல்லாத நாட்கள்பல போய்க்கழிந் திடினுமொரு
போதுமுனை யென்மனத்தே
பூணா திருப்பினும் போற்றியென் றென்றுனைப்
பூசனைசெ யாதுவிடினும்
போகாத செல்வமா முன்னருட் பேரன்பு
பொய்யனெனை நாடிவருமே. 78

## 33

காலையில் வந்தென தில்லத் தொருசிறு
மூலையி லிருப்போம் போதுமென் றுரைத்தார்
ஆண்டவன் பூசையி லடியோ முங்கலந்
தேன்றநல் லுதவிக ளளிப்போ மென்றார்
அண்ண லருளில்நம் சிறியபங் கெமக்கும்
திண்ணமென் றடங்கியே யொடுங்கி யிருந்தார்
கங்குல் கவிந்தது மென்னுடைக் கோவில்புக்
கருளிலா நெஞ்சின ராண்டவன் பீடமார்
பொருளெலாம் வாரிப் போயினர் கடிதே. 79

## 34

நீயேயெ னிதியெலா மென்றுசொலு மத்துணை
நிதியிருந் தாலேபோதும்
நின்னையே பார்க்குமிட மெங்கணுங் காண்கின்ற
நெறியிருந் தாலேபோதும்
நாயேனெவ் வெத்தொழில் செய்திடினு முன்னையே
நாடுநெறி யொன்றுபோதும்
நண்ணுமொவ் வொருகணமும் உன்னிடத் தன்புசெயு
நயமொன்று போதும்போதும்
ஓயாது நாளுமுன் பணிசெயும் வாழ்வெனக்
குற்றுலஃ தொன்றுபோதும்
ஊறுசெய் பந்தங்க ளெத்தனை யிருந்தாலும்
உன்செயல்செய் பந்தமுண்டேல்
தாயே யெனப்பரிந் துன்னிடத் திடையறுத்
தன்மையுள வன்பென்னுமத்
தூயநற் பந்தமொன் றென்னிடத் துண்டெனிற்
சோதியது போதுமருளே. 80



## 35

அஞ்சாத நெஞ்சமும் பணியாத தலையுமோர்
அளவுப் படாத அறிவும்
அள்ளிக் கொடுத்துப் பெருக்கிப் புரக்கின்ற
அழியாத ஞானமுதலும்
நஞ்சாதி யுஞ்சாதி யென்றே மதம்பேசி
நலிகின்ற சிறுமைபோக
நானிலத் தோரெலா மொருகுடும் பத்தவர்
நாமவரி லொருவரென்னும்
துஞ்சாத ஒருமையும் சோராத ஊக்கமும்
தூயநற் சிந்தனைகளும்
தூங்காம லென்றுநற் றொழில்புரியு மாற்றலும்
தூய்மைமிகு வாய்மைநெறியும்
எஞ்சாது நின்றியல் வழக்கற் றழுக்குட
விருந்தினி யழிந்துபோகும்
இயையா வழக்கெனும் பாலையிற் போகாத
எழில்மனமு மருளெந்தையே. 81

## 36

வெட்டுதி வெட்டுதி வறுமை வேரறக்
கிட்டிய வின்பிலுந் துன்பிலுங் கலங்கா
உட்டெளி வருளுதி திட்டமாய் யடியேன்
திருத்தொண் டாற்றும் விருப்பும் கருத்துடன்
ஏழைக் கிரங்கி யிறுமாந் தவர்க்குச்
சாலப் பணியாத் தன்மையும் மேல்வரும்
தினசரி வாழ்க்கையில் மனநிலை சலியாத்
திண்மையு முண்மையு மருளுதி
கண்ணிமை யாது காக்குமெம் பிரானே. 82

## 37

முடிந்ததென் வாழ்வெனும் யாத்திரை ஐயனே
முடிந்தவென் சக்திகள் முற்றாய் முடிந்தன
போம்வழி யினியிலைப் பொருளிலை யினிநான்
ஒழிவினிற் றனியா யொடுங்குவ னெனமனத்
தெளிவுகொண் டடங்கின னயினென் தெய்வமே
உன்னரு ளென்னிடத் தோய்வுகண் டிலதே
மன்னுமென் வாக்கிற் பழஞ்சொல் மடிந்திடிற்
பின்னுமெ னுளத்திற் புதுமொழி பிறக்குமே
பழையன கழியப் புதியநற் பாதைகள்
நூதனம் நூதன மாய்த்தோன் றிடுமே. 83

## 38

ஸாமா — ராகம் ஆதி — தாளம்.

பல்லவி

வேண்டுவ னுனையே வேறொன்றும் வேண்டேன்
வேதமந்திர மிதுவே (வேண்டு)

அநுபல்லவி

ஈண்டி யிரவுபகல் பூண்ட தொல்லைகள் பொய்யே
(வேண்டு)

சரணம்

இருளினில் ஒளிபோல் என்னகத் துனது
ஒருநினை வேயெங்கு மோய்வின்றி நின்றிடும் (வேண்)

பெரும்புய லோய்வது பேசுநற் சாந்தியில்
பரம்பொரு ளுனதன்பே பாவியென் புகலிடம் (வேண்)

## 39

வாடியென துள்ளம் வதங்கிக் கரிந்துதுயர்
வாட்டுமவ் வேளைதனிலுன்
வற்றாத கருணையின் பெரியமழை பெய்தெனை
வாழ்விக்க வந்தருளுவாய்



கூடுமருள் நீங்கியென் வாழ்வுகெடு மப்பொழுது
கோதிலின் லிசையாகுவாய்
கோளாறு செய்யுமென் கன்மங்கள் திசைதொறும்
கூவியே சிறையிடுங்கால்
நீடுநல் மோனசுக வாரியே நீயுனது
நிறைசாந்தி நெறிதந்திடாய்
நீசனைப் போலவென் வறுமையா மிருள்சேரு
நிலவறையி லுற்றிடுங்கால்
தேடியெனை வந்திருட் டறைதிறந் தரசனே
திருவருள் செய்தாளுவாய்
தீராத வாசையென துள்ளம் மறைக்கையில்
செய்யவொளி தந்துகாப்பாய். 85

## 40

பாழான வென்மனத் தேயுனது கருணையின்
பருவமழை பெய்யவில்லை
பாவியேன் வாழ்வெனும் வானவெளி யோவென்று
படருமொரு முகிலுமறியா
தாளுமெனை தண்ணலே யின்றில்லை யென்றாலு
மானவொரு நாளிலேனும்
அரியசிறு தூறலுண் டோவென்ப தறிகிலேன்
ஐயவுன் திருவுள்ளமேல்
முழுமின் னொளிவான மெங்குமே பொங்கவுன்
மோகாந்த காரமயமாம்
முடிவான சாவெனும் புயல்தன்னை மூட்டுவாய்
மூடனே னுள்ளத்திலோ
சூழுமிக் கொடியவெயில் நாளுமெனை யறியாது
சுவ்வென்று சுட்டெரிக்கும்
சோதிநீ தாயினுஞ் சாலப்பரிந்தருட்
தூயமழை யாயிரங்காய். 86

## 41

ஓதுங்கிநின் றுயென் ஆருயிர்க் காதல
பதுங்கினை நிழலிற் புழுதிசேர் வீதியில்
தள்ளிவிட் டுன்னைச் சட்டைசெய் யாதே
துள்ளி யேகினர் யாவரு மாயின்
காந்த னென்னுடைக் கற்பகம் வருமெனக்
கூடையிற் றண்மலர் கொண்டுநா னின்றேன்
கணமெலாம் யுகம்போற் கழிந்தது வந்திலை
வழியிடைச் செல்வோர் மலரெலாங் கொண்டார்
காலை நண்பக லாகிக் கழிந்ததே
மாலையென் கண்ணும் மயங்கி வளர்ந்தது
மனைநினைந் தேகு மக்களு மெனைப்பார்த்
தொருசிறு முறுவலால் நாணமேற் றினரே
தானையை யிழுத்தென் முகத்தினை மறைத்தே
பிச்சைக் காரிபோற் பேசா திருப்பேன்
யாதை யோநீ வேண்டுவ தென்பார்
நாணிக் கண்புதைத் தடங்கி யிருப்பேன்
உயிர்க் கினியானே ருத்தமன் வருமென
வாக்கு வழங்கினுன் வருவழி கணமும்
நோக்கி யிருந்தனென் றெங்ஙனம் நுவல்வேன்
வறுமையே கையுறை யென்றுசொல் வேனே
உள்ளத் துன்னினை வோங்கிக் கிடக்குமே
புற்றரை யிருந்தே வான்வெளி நோக்கிப்
பற்பல வெண்ணிப் பகற்கன வாழ்ந்தேன்
வீதிக ளெல்லாம் விளக்குகள் மலர
கொடித்தே ரூர்ந்து கோவே வந்தனை
வியந்தனர் வாயங் காந்தனர் கூட்டம்
ஆசனத் திறங்கி யண்ணலே யென்னைத்
தூசியிற் கிடந்த துன்னிய கந்தலை



நாணமே யிறுமாப் பிவைநலித் திடவே
கோடைக் காற்றினில் கோடிய கொடியை
கரந்தொட் டெடுத்துன் பக்கத் திருத்தினை
கனவுக லைந்தது கொடித்தே ரோசை
நனவி லில்லையே நானிலத் தெத்தனை
விழாக் களூர்வலங்கள் விதம் விதமாகவே
ஆர்த்தும் பாடியும் செயசெய கூவியும்
சென்றன வுன்வர வொன்றே காண்கிலன்
நிற்பதும் நீயோ; நிழலில் மௌனியாய்
உள்ள முடைய வுன்வர வெதிர்கொண்
டழுது மரற்றியு மழிவதும் நானே. 87

## 42

வள்ள மூர்ந்துநாம் வாளா திரிவோம்
தெள்ளமு தனையாய் நீயும் நானுமே
எந்தவூ ரெக்கரை யென்றொன் றின்றிநாம்
சிந்தைசெல் வழியே தெண்கட லலைவோம்
உலகிலிச் செய்தியை யொருவரு மறியொணா
தென்றொரு ரகசிய மியம்பினர் காலையில்
கரையறி யாதவக் கடல்மிசை செவிசாய்த்
துரையறி யாதுநீ முறுவலித் திருப்பாய்
பாடுமென் கீதம் பலபலவிசை கொளித்
தோடுநல் லலைபோற் சொற்கட் டுடைத்தே
காலம் வந்ததோ கரும மொழிந்ததோ
மாலை யானதே மயங்கிய வொளியில்
கடற்புள் சேக்கையைக் கருதிப் பறந்தன
கட்டிய நாவாய்ச் சங்கிலி கழன்றே
மாலையில் மறையும் பரிதியின் அந்திக்
கதிர்போ லிருளிற் கரந்திட லென்றோ. 88

## 43

என்னையுன் வரவினுக் கேற்ற பக்குவமுடைய
னாக்கிவைத் தேனில்லையே
எனினுமென் தெய்வமே கூட்டத்தி லொருவனென
என்னையறி யாதென்னுளம்
மன்னியென் சலனமாம் வாழ்வினெவ் வோர்கணமும்
மாறாத சாசுவதமாம்
மருவினிய முத்திரையை யிட்டுப் பொறித்தனை
மாற்றமற நின்றபொருளே
சின்னவென் வாழ்நாளில் இன்பதுன் பென்னுமச்
சிறியநினை வுகளினிடையே
தேவாதி தேவவுன் கையிட்ட முத்திரை
சிதறிக் கிடந்ததறிவேன்
முன்னமென் புழுதிவிளை யாட்டினைப் பார்த்துநீ
முனிவுகொண் டாயுமில்லை
முதலங்கு கேட்டவுன் பாதவொலி யேவானில்
முழுதுமெதி ரொலிசெய்யுமே. 89

## 44

இருளின் சாயல் பகலினை யோட்டுமிம்
மருளுஞ் சாலையி னோர்புறத் தேயிருந்
தொரு வழிப்பட வுன்வர வெண்ணியே
யுருகிக் காத்து நிற்பேன் மகிழ்கூரவே. 90

வேனில் நீங்க மழைமுகில் தண்ணென
யானறி யாத்திசை யிருந் தேபல
வான தூதுவர் செய்திதந் தேகுவர்
ஆனந் தம்மிது போற்பிறி தில்லையே. 91



வீசு தென்றல் விரிய நறுமணம்
மூசு காலைதொட் டந்தி வரும்வரை
பேசு மாறறி யாதுனை உன்னிநின்
தேசு காணத் திகைத்துநிற் பேனரோ. 92

இங்கென் வாசற் படியில் மகிழ்ந்துநான்
தங்கு வேனுனைக் காணச் சமயந்தான்
பங்க மின்றிக்கி டைக்குமென் றேமனம்
பொங்கிப் பாடிம கிழ்ந்திருப் பேனரோ. 93

## 45

வருமவர் மெல்லடி யரவங் கேட்டதோ
வருவா ரென்றும் வருவார் வருவார்
கணந்தொறும் கால யுகந்தொறும் என்றும்
அல்லும் பகலும் அவரே வருவார்
மனநிலை திரிதொறும் பலவிசை கலந்துநான்
ஓதிய கீதமெல் லாமொரு பாணியில்
வருவார் வருவார் வருவா ரென்னுமே. 94

தென்றல் மணங்கமழச் செய்யோன் கதிர்பரப்ப
நன்றாய சித்திரையி னாட்களிலும்—பொன்றா
உருவாய கானத் தொருபாதை தாண்டி
வருவாரென் றென்று மவர். 95

மேகஞ் சூழ்ந்திருள் மூடும் பருவத்தும்
நாக மஞ்சு மிடியெனுந் தேரினில்
ஆகத் தின்பங் குமுற விருளில்வெஞ்
சோகந் தீர்க்கத் துணைவரு வாரவர். 96

துன்பம் வந்து துயருறு வேளையும்
இன்பம் வந்திறும் பூதெய்து வேளையும்

அன்புக் கேசிறை யாகிய வண்ணல்தன்
செம்பொற் றாளன்றி வேறென் துணைகொலோ. 97

## 46

எத்தனை யுகங்களா யென்னை நீ யணுகுதற்
கீசனே எண்ணிவருவாய்
என்றைக்கு முன்னைநான் காணா திருக்குமா
றிரவியுந் தாரகைகளும்
மெத்தவே மறைவாக வைத்திடுதல் முடியுமோ
மேவுபல காலமாலே
மெய்யன்ப நீவரும் மெல்லடியி னோசைதான்
மிகுதியுங் கேட்டுமகிழ்வேன்
சித்தத்தி லுன்னருட் சேவகன் வந்தெனைத்
தேடிவா வென்றழைப்பான்
செப்பரிய வானந்த வெள்ளத்தி லென்மனம்
தேங்கிடத் தத்தளிக்கும்
இத்தனையு மேயெனக் கருளுமா றென்னையோ
இனியவுன் னருள்விலாசம்
எங்கணும் பரிமளித் திடுகின்ற தென்வினைக்
கினியோய்வு கண்டுகொண்டேன். 98

## 47

வருவா ரென்றே காத்திருந்தேன்
வறிதே யிரவுங் கழிந்ததம்மா
திருவே யணையார் காலையிலே
செயலற் றுறங்கும் வேளையிலே
வருவா ரென்றென் றஞ்சுகிறேன்
வந்தால் விடுவீர் மறியாதீர்
தெருவே திடுமென் றவர்வந்தால்
சீசீ தடைநீர் செய்வீரோ. 99



வந்தா லரவங் கேட்கும்நான்
வாளா தூங்கிக் கிடந்தாலும்
அந்தோ எனைநீர் துயில்நீக்கீர்
அஞ்செஞ் சிறைசேர் குருகினமே
வந்தே காலைப் பெருவிழவில்
வயங்கு தென்றற் காற்றீரே
முந்திக் கரவாய் வந்தாலும்
முறியா திருமென் னித்திரையே. 100

துயிலே யருமைத் துயிலேதாம்
தூக்கங் கலையத் தொடுவாரேல்
அயலே முறுவல் பூத்துநிற்பார்
அவரைக் கண்டாற் கனவிலெனை
மயலே செய்தார் வந்தாரை
மகிழ்ந்து விழித்துக் காண்பேன்யான்
துயிலைக் கலையீ ரவர்வந்தென்
துயிலைக் கலைக்க வேண்டுவனே. 101

ஒளிக்கெல்லா மொளியானுன் உருவுக் குருயான்
விழிக்கின்ற போதெனது கண்முன்னே நின்றால்
களித்திடுமே யென்னாவி கரைகாணா வின்பந்
திளைத்தவனே யானாய் இரண்டற நிற்போமே. 102

## 48

காலை மோனக் கடலெழு சுழிபோற்
சோலைப் பறவைகள் சுழன்று பாடின
வீதிக ளெங்கும் விரிமல ரசைந்தன
சோதிநற் செம்பொன் னுருகி வழிந்தென
மேகப் பாறையின் வெடிப்புகள் மின்னின
சோகமொன் றின்றிநாம் சும்மா நடந்தேம்
பாடின தில்லைப் பரவச முற்றுநாம்
ஆடின தில்லை யயர்ந்து போவதுபோல்

பேச்சு மூச்சின்றிப் பெருவழி படர்ந்தோம்
ஊர்ச்சந்தை யிலொரு பண்டமாற் றறியோம்
முகத்திற் சிறிதும் முறுவலே யில்லை
நாழிகை சென்றன நாமும் விரைந்தோம்
நண்பகல் வாத்துகள் நிழலிற் கரைந்தன
சருகு சுழன்றது சுடுமணற் பகலில்
ஆல மாமரத் தருநிழற் கீழே
கோல நித்திரை கனவொடு கொள்ளும்
ஆடு மேய்க்குமோ ரிடைப்பய லங்கே
தெண்ணீர்க் குட்டை பசுந்தரை மீதுநான்
துண்ணென நீட்டி நிமிர்ந்து துயின்றேன்
கொல்லென நகைத்தகன் றாரென் தோழர்கள்
நிமிர்ந்த தலையும் நீடிய நடையுமாய்
காடும் மேடும்முன் கண்டறி யாப்பல
நாடும் கடந்துபோய் நன்றே மறைந்தார்
போமிட மெங்கணும் போக்கறு மதிதிநீ
சாமியுன் றாளிணை சரணஞ் சரணம்
ஆவா செத்தே னளியன் யானென
மேவிய தென்னுளத் தாயினு மசைவற்
றுன்செய லென்றுநா னொடுங்கிக் கிடந்தேன்
சிந்தையி லந்தியி லிருள் சூழ்ந்திடவே
வந்தவென் யாத்திரை வகைமறந் தோயா
வின்னிசை பாடிக் கனவிற் கிடந்தேன்
துயில்விட் டெழுந்தேன் தூண்டா மணிவிளக்
கயல் நின்றதுபோ லையநீ நின்றாய்
பாதை நீண்டது பற்பல நாட்செலும்
நாதனே யுனைநா னாடுவ தரிதென
எண்ணிப் பயந்த தெல்லாம்
அண்ணல் வீணென் றறிந்தன னின்றே. 103



## 49

அரியணை யிழிந்தென் சிறுமனை வாசலிற்
பெரியோய் நின்றனை பேதையென் சிறுமையிற்
தனியே யிருந்து தந்தியை மீட்டிப்
பாடிய துன்செவி படர்ந்ததோ வதனால்
தேடிவந் தென்சிறு மனையடைந் தாயோ
பாடல் சான்றநின் பட்டிமண் டபத்தே
பண்ணிறை யின்கவி பாடுவார் பலரே
கணந்தொறுங் கீத மணங்கமழ் கோவில்விட்
டென்னொரு தனியிசைப் புன்மொழி கேட்டோ
உலகெலா மேத்துமிவ் விசைக்கடற் பரப்பில்,
ஒருவனென் முறையீ டொருபொரு ளாகநீ
கையில் மலரொடென் சிறுமனை குறுகினை
ஐயவென் புதுமொழிக் கன்புகொண் டனையோ.

## 50

வீட்டுவா யில்தொறும் பிச்சை வேண்டியே
நாட்ட மோடு நயந்து திரிந்தனன்
ஓட்டமா யுன்பொற் றேர்வரத் தூரத்தே
காட்டிற் றீதென் கனவென் றரற்றினேன். 105

மன்னர் மன்னவன் வந்தவிம் மாயமீ
தென்ன வென்றுளம் பூத்தனன் தீமைபோய்
நன்மை வந்தது நானுயர்ந் தேனென
எண்ணிப் பேருவ கைக்கடல் மூழ்கினேன். 106

வறுமை தீர்ந்தது வாய்விட் டுரைத்திடா
துறுதி யாயெனக் குண்டுபொன் செய்நிதி
பெறுக வென்று பெருநிதி சிந்துவான்
பொறுதி யாய்நின்று வாங்குவ னென்றனன். 107

வந்த தேரென் வழியெதிர் நிற்கவே
எந்தை நீயெனைப் பார்த்துச் சிரித்தனை
சிந்தை செய்தனன் தெய்வ முவந்ததென்
றந்தோ நீயுன்கை நீட்டி யிரந்தனை. 108

வறிய னென்னிடத் தோவள்ளல் கேட்டனை
மறிய வென்மனம் வாடிநின் றெண்ணினேன்
சிறிய தோர்வினை யாட்டிது செல்வநீ
வறிய னென்னிடத் தோவந் திரக்கிறாய். 109

என்றென் னுள்ள மிரங்கவென் பொக்கணம்
நன்று கையிலெ டுத்துவி ரித்தங்கே
குன்றி போலொரு தானியங் கைப்பட
நின்றுன் கையி லதனையிட் டேகினேன். 110

மாலை யென்னுடைப் பையை விரித்தலும்
மூலை நின்றொரு பொன்மணி வீழ்ந்ததால்
சால யாவு முனக்குத்தந் தேனிலைச்
சீல மென்னவென் றேகரைந் தேங்கினேன். 111

51

இரவு சூழ்ந்தது வேலைக ளோய்ந்தன
வரு விருந்தினர் யாவரும் வந்தனர்
மருவு மூரிற் கதவுகள் மாட்டினர்
வருவர் போலுமெம் வேந்தனென் றார்சிலர். 112

மன்னவன்வரு மாறிலை யென்றுநாம்
சொன்ன தோடு சிறுநகை செய்தனம்
என்ன விந்தை கதவை யிடித்தெனப்
பின்னை யோர்பெருஞ் சத்தம் பிறந்ததே. 113



விண்ண சைந்திடும் காற்றது வேறல
எண்ண மேனினித் தூங்குவ மென்றுநாம்
கண்ணு றங்கினம் தீபம ணைத்திட்டே
திண்ணம் மற்றிதோர் தூதனென் றார்சிலர். 114

காற்றுத் தானது மற்றிலை யென்றுநாம்
மாற்றஞ் சொல்லிச் சிரித்து மடங்கினோம்
சீற்றமா யுலக மதிர்ச்சி கொள
நாற்றி சைச்சுவ ரும்நடுக் கங்கொண்ட. 115

அனந்த லில்நினைந் தோமது தூரத்தே
சினந்து மாமுகில் மோதியி டித்ததென்
றுணர்ந்த பேர்சிலர் தேரடி யென்றனர்
கனவித் தூங்கும்யாம் பேரிடி காணென்றோம்.

கழியி ரவிலப் பேரிகை காதுற
விழிமி னீரினித் தாமதஞ் செய்கலீர்
ஒழிமின் தூக்கமென் றோருரை கேட்கவே
கழிவி ரக்கங்கொண் டேகை யுதறினோம். 117

உள்ளம் நைந்த துடல்நடுக் குற்றது
வள்ளல் வந்தனன் வான்கொடி பாரென்றார்
துள்ளித் தூக்கந் துடைத்தெழுந் தேநின்று
தள்ளிப் போடத் தருணமில்லை யென்றோம். 118

மன்னன் வந்தனன் மாலையெங் கேயொளி
மின்னுந் தீபமெங் கேமிளிர் தோரணம்
மன்னு மாசனம் மண்டப மெங்குள
என்ன வெட்கமிஃ தென்றிரைந் தோடினோம்.

இந்தக் கூச்சல்வீ ணென்றிரைந் தார்சிலர்
சிந்தை யொன்றிவெ றுங்கையென் றானுநீர்
எந்தை யைவர வேற்றெஞ் சிறுகுடில்
வந்து சேர்கவென் றேயழைத் தேகுமின் 120

திறமின் கதவே ஊதுமின் சங்கே
இருட்டறை யரசனல் லிருளில் வந்தான்
விண்ணிடை யிடிமுழக் கெங்கணு மதிர
மின்னொளி யிரவை நடுக்கங் காட்டும்
பாயின் கந்தலை முன்றிலிற் பரப்புமின்
நடுநிசி யரசனிப் புயலுடன்
இடுமென வந்தான் திகைப்புற யாமே. 121

**52**

கழுத்தி லணிந்த கடம்பமலர்க்
கண்ணி கேட்க வேண்டுமென்றே
பழுத்த விருப்போ டிருந்தேனுன்
பாவி கேட்கப் பயந்துவிட்டேன்
கிழக்கு வெளுக்கும் வரையும்நான்
கேளா திருந்தேன் துயில்நீங்கி
எழுந்து சென்றாய் மஞ்சத்தே
இதழொன் றிரண்டு கண்ணுற்றேன். 122

பிச்சைக் காரன் போலநான்
பிரித்துப் படுக்கை தேடுகையில்
அச்சோ வுன்ற னன்பினுக்கே
அடையா ளம்போ லிருந்ததுகாண்
பச்சைச் சாந்தோ பசுமலரோ
பனிநீர் வாசக் கலவையல
வச்ரக் கோல்போல் மின்னியதே
வள்ள லணிந்த உடைவாளே. 123

காலை யிளைய வெய்யில்பல
கணிவா யூடே வந்துனது
கோல மஞ்சத் தொளிவீசிக்
குருவி பாடிக் கேட்பதுபோல்



மாலை யணைய மடக்கொடியே
வாய்த்த துனக்கிங் கென்னென்னும்
சோலை மலரோ பனிநீரோ
தூய சாந்தோ வலவாளே. 124

தந்தா யெனக்கிப் பரிசிதென்
றைய லெங்கே தரிப்பனென்றே
சிந்தை செய்தே யிறும்பூதிற்
றிகைத்து மூழ்கி யிருந்திட்டேன்
நைந்த சாய லுடையேன்நான்
நகைப்பா ரிதையே தரித்திட்டால்
எந்தை யுனது பரிசென்றே
இதைநா னகத் தணிந்திருப்பேன். 125

துன்பின் பாரச் சின்னத்தைத்
தூய பரிசா யெனக்கீந்தாய்
இன்பே யன்றித் துன்பில்லை
இனியிவ் வையத் தெனக்கென்பேன்
அன்ப வெனக்கே வருமின்னல்
அனைத்தும் பொருதே வெல்வேன்யான்
கொன்னே வருமிப் பந்தமெலாம்
குறுக்கே வெட்டி யெறிந்திடுவேன். 126

இறப்பே யெனக்குத் தோழனென
என்னோ டியைத்து விட்டாய்நீ
சிறப்பா யவர்க்கே வாழ்வென்னும்
செய்ய முடியைச் சூட்டிடுவேன்
துறப்பே னுலகிற் பயமெல்லாம்
தூண்டு சுடரே! மாமணியே!
மறப்பேன் மற்ற வணிகளெல்லாம்
மடிந்து மயங்கித் திரியேனே. 127

என்னு ருயிரே யினிமேலும்
இருந்து நினைந்து வருந்துவனோ
பொன்னே! புவிக்கோர் புத்தமுதே!
போயும் போயும் பேதைமையால்
கொன்னே நாணம் நயமற்றிக்
குணங்கள் கொண்டிங் கலைவேனோ
இன்னே வாளொன் றீந்துவிட்டாய்
இனியென் வாழ்வு சிறந்ததுவே. 128

## 53

ஆயிர வண்ணத் தருமணி குயிற்றிப்
பாயிரு ளகற்றுந் தாரகை பதித்ததுன்
கையுறு கங்கண மாயினுன் னுடைவாள்
மைநிறத் திருமால் தெய்வவா களமாம்
பறவையின் விரிசிற கந்திவா னொளியிற்
பரந்துமின் னுதல்போல் வளைந்துமின் னிபதே
மரணத் திறுதித் துன்பினைத் தாங்கும்
வாழ்வின் முடிவெனும் இன்ப வதிர்ச்சிபோல்
விஷயவாழ் வெல்லாம் வெந்துநீ றுக்குமோர்
பாவன மானதீக் கொழுந்தினைப் போல
மின்னி யொளிவிடும் நின்னுடை வாளே
தாரகை பதித்ததுன் கங்கண மெனினும்
மேக நாதனின் மெய்யொளி யுடைவாள்
கட்புலன் காணச் சிந்தையுங் கொள்ளாப்
பொற்புடை யழியா நிறையழ குடைத்தே. 129

## 54

உன்னை யானொன்றுங் கேட்டிலன் வாய்விட்டே
என்னை நீவிடை பெற்றகன் றுயப்போ
சொன்ன தில்லையென் பேரினை யூமையோ
வென்ன நின்றனன் யாதொன்றும் பேசிலேன். 130



தனிமை யாகவக் கூவக் கரைதனில்
மௌனி போலநின் றேன்மரத் தின்கிளை
இனிய சாயல் விரித்த திளமடக்
கனிய னார்குட நீர்கொண்டு போயினார். 131

காலை முற்றிற்று நண்பகல் வந்தது
ஏலவே யெங்க ளோடு வருதியென்
றோல மிட்டுரைத் தாரவர் மற்றுயான்
நாலு சிந்தனை செய்து நலிந்தனன். 132

வந்த மெல்லடி யோசையுங் கேட்டிலேன்
மூந்தி நோக்கிய கண்கள் மெலிந்தன
நொந்து கூறிய வாய்மொழி தாழ்ந்திட
நைந்து போயினன் தாகத்தி னாலென்றான். 133

கண் டிருந்த கனவு குலைந்தது
கொண்ட னன்குறித் தேகையில் நீர்க்குடம்
விண்டெ னேந்துன் கரத்து விளங்குநீர்
மண்டு பூங்குயிற் றேனிசை தூரத்தே. 134

இலைகள் மேலிருந் தேயிரைந் தாடின
தொலைவில் வீதியின் மூலையி லேகிடந்
தலையும் பூவின் நறுமணம் எங்கணும்
நிலையில் நாணினன் நீபெயர் கேட்டதும். 135

என்னை நீயுன்நி னைவி லிருத்துதற்
கென்ன செய்தன னாயினுன் தாகத்தை
முன்ன மேதணித் தேனெனு மெண்ணந்தான்
இன்னு மென்மனத் தின்பினை யூட்டுமால். 136

காலை நீங்கிக் கடும்பக லாகுமே
சோலைப் புள்ளினம் சோகித் திசைசொலும்
மேலே நீபக் குளைக ளசைந்திட
வேலை வேறின்றிச் சிந்தையில் மூழ்குவேன். 137

## 55

நெஞ்சிலே வேட்கை கொண்டாய்
நிறைந்தது நெஞ்சிற் றாக்கம்
மிஞ்சிய வழகி னோடு
மலர்ந்தன செடியிற் பூக்கள்
செஞ்சொலா லிந்தச் செய்தி
செப்பிட விலையோ வும்முன்
கொஞ்சமும் காலம் வீணே
கழித்திடா தெழுமி னின்றே. 138

கல்லுறு பாதை தாண்டிக்
கடிகமழ் தனியூ ரெல்லை
நல்லவென் நண்பன் நின்றான்
அவனைவஞ் சிக்க வேண்டாம்
மெல்லநீ யெழுந்து போதி
வானிடை யுச்சி வெய்யில்
கொல்லென வதிர்ந்து மூச்சுக்
குமுறியே பாலை செய்யும். 139

உள்ளினை யுருக்க நெஞ்சி
லுறுமகிழ் விலையே வீதி
மெல்லடி யரவங் கேட்டு
மேவிய துன்ப மென்னும்
தெள்ளிய யாழின் தந்தி
சுருதியை மீட்டி மீட்டி
அள்ளிநல் லிசையை யெங்கும்
அலைத்திடா திருக்கு மோகாண். 140



## 56

சிறியனே னென்னிடத் துன்னருள் மகிழ்ச்சிதான்
சேர்ந்துபூ ரணமானதோ
தேவாதி தேவனே யெனைநினைந் திங்ஙனம்
சேவிக்க வோவந்தனை
பெரியநின் நிதியெலா முன்னுடன் சேர்ந்துநான்
பேதமின் றிச்சுகிக்கப்
பெருமநீ யருளினும் நானில்லை யாயினுன்
பேரன்பு யாதாகுமோ
அரியநின் சாசுவத மானநல் லானந்த
மடியனே னுள்ளத்திலே
அயராது தினமுநல் லாடல்புரி கின்றதே
ஆயவென் வாழ்வதனிலே
விரியுமுன் சித்தமே யுருவுகொண் டதுவேந்தர்
வேந்தவுள் ளந்திருடவோ
வேறான கோலந் தரித்தத்து விதமாக
வேறின்றி யொன்றாயினாய். 141

## 57

ஒளியேயெ னொளியேயிவ் வுலகெலா நிறைகின்ற
ஓங்குகண் ணானவொளியே
உள்ளத்தை யின்பத்தி லாழ்த்துமொளி யேநடன
முள்ளாடு வாழ்வினொளியே
ஒளியேயெ னன்பெனும் வீணையின் தந்தியை
ஒலித்திடும் நல்லஒளியே
ஓவெனும் வானவெளி யுன்மத்த மானகாற்
றோயா திரைந்துகொள்ளும்

வெளியேயிவ் வுலகெலாம் புன்னகை மலர்ந்திடும்
விரிசோதி யானதிரையில்
வேகமாய் வண்ணாத்தி பாயுமே மல்லிகை
விரிமலர்கள் நீந்திவருமே
பொழிகின்றகருமுகில்கள் தோறுமிவ்வொளியெனும்
பொன்னான நற்கதிர்கள்
போய்வந்து வட்டமிட் டுச்சிதறி வழியுமே
பொருவில்மணி சிந்திவிடுமே. 142

## 58

புல்லாகி யுலகினைப் பூரிக்க வைப்பதும்
புவிமீது நடனமாடும்
போக்குவர வென்கின்ற துணையாய விருமையும்
புயல்சீறி மன்னுமுலகை
நில்லா தலைத்துயிரை யெல்லா மெழுப்பிநகை
நித்திலஞ் சொரிவிப்பதும்
நிலையற்ற துன்பெனுங் கமலக்கண் ணீராக
நின்றிடச் செய்திடுவதும்
எல்லா மெமக்குடைமை யென்றென் றிருக்குமவை
யெல்லாம் நிலத்தில்வீசி
ஏகாந்த நிர்விசா ரத்தினில் நிலைத்திட
நிகழ்த்துவது மற்றிஃதெல்லாம்
சொல்லா லுரைக்கிலோ ரானந்த மேயெனது
சொல்லான கீதவிசையிற்
சொல்லுமிவ் வானந்த மெல்லா மொருங்குறச்
கூட்டினே னொருகீதமே. 143



## 59

சோலை நிறம்பெயரச் செய்யுமொளி யுன்னன்பே
நீல வெளிதனிலே நீந்துமுகிற் கூட்டமுமிக்
காலை வருதென்றற் காற்றின் குளிர்மையுநீ
ஏழைக் கிரங்கு மியல்பிஃதென் னுடையன்பே.

காலை யொளியினிலே — என்னன்பே
கண்டேனுன் அன்புக்குறி
மேலே யிருந்துனது—கண்களெனை
விழைந்து பார்க்கையிலே

என்மன முனது பொன்னடி புகலெனப்
பணிந்தது பரம்பொருள் நீயே
அறிந்தன னுயிர்க்குயி ராகுநின் னன்பே. 145

## 60

புவியனந் தஞ்சூழு மெறிகடற் கரைமீது
போதுகின் றார்சிறுவர்கள்
போக்குவர வுற்றலையும் அலைதிரளு மொண்கடல்
பொருமியுறு மிக்குரைக்கும்
குவிகின்ற வெல்லையில் வானவெளி மீமிசைக்
கூடியசை வற்றிருக்கும்
கூடுவார் சிறுவர்கூத் தாடியே பாடிமனை
கோலுவார் மணல்கொண்டுவெண்
சவியற்ற சருகினா லோடஞ் சமைத்துவிரி
சலதியிற் போகவிடுவார்
சாலவும் புன்னகைசெய் தோடிப் பொறுக்குவார்
சங்கினொடு சிப்பிக்குலம்
புவியினிற் புதைபட்ட பெருநிதிக் கலைகிலார்
பொருளெனப் பரல்கொள்ளுவார்
பொருகடற் றிரைமூழ்கி முத்துக் குளிப்பர்பலர்
போகுவார் வணிகர்பலரே. 146

தெண்கடல் வெண்ணகை திரையெறிந் தார்ப்ப
வெண்மணற் கரையொரு புன்னகை பூக்கும்
கொல்லலைக் கூட்டம் கூடிய சிறுவரை
கண்வளர்ப் பதுபோல் தாலாட் டிசைக்கும்
அந்தமில் புவனத் தாழியின் கரைதனிற்
சிந்திய சிப்பியுங் கையுமா யாடுவர்
நீந்தலு மறியார் நிதிகொள வறியார்
வழியிலா நீல வெளியினிற் பெருப்புயல்
சாவெனும் பூதம் தாரணி யெங்கும்
ஜலதியின் கரையிற் சிறுவரா டுவரே. 147

## 61

கண்ணை மூடிக் கிடக்குங் குழந்தையின்
கண்ணிற் தாண்டவ மாடுந் துயிலது
மண்ணி லெங்கிருந் தேவந்த தென்பதை
யெண்ணிக் கூறவிங் காருளர் சொல்லுமின். 148

மின்மினி யொளி வீசுமோர் கானகம்
வன்ன மான நிழல்விடு மோகினிச்
சின்ன வூரொன் றிலங்கிடு மாம்மயல்
துன்னு மோரிரு மொட்டுகள் தூங்குமாம். 149

அங்கி ருந்து கிளம்பிய வத்துயில்
தங்கு சின்னஞ் சிறுவனின் கண்களிற்
பொங்கி வந்துமுத் தமிட்டுப் போமெனச்
சங்கை யான வதந்தியொன் றுண்டரோ. 150

சொப்ப னத்திற் குழந்தையின் வாயிலே
கொப்ப ளித்திடு முத்து முறுவல்தான்
எப்படிக் கங்கு வந்த தெனுமிந்தச்
செப்பிடு வித்தை யாவர் தெரிவரே. 151



பனி கழுவிய வைகறைப் போதுதான்
இனிது கண்ட கனவினி லேயொரு
கனிவு செய்யும் இளம்பிறை வெண்கதிர்
குனியும் வெண்முகி லோரத்தைக் கொஞ்சிற்றே.

கொஞ்சும் நேரத்தி லேபிறந் திட்டதாம்
பஞ்சு போற்றுயில் கின்ற குழந்தையின்
கொஞ்சு கொவ்வைச்செவ் வாயிற் பிறந்திட்ட
செஞ்சொல் போலும் சிறந்த முறுவல்தான். 153

பட்டுப் போன்ற வதனுடை மேனியில்
சொட்டு மிந்தப் புதுமையெங் கேநின்று
கிட்டிற் றென்று கிளர்த்துதல் கூடுமோ
திட்ட மாயோர் வதந்தியுண் டாமது. 154

பேதை யாயதன் தாயிருந் திட்டநாள்
கோதை யின்மனக் கோயிலைச் சுற்றியே
காத லென்றதோர் காரிருள் மர்மந்தான்
மீது சென்று படர்ந்து கிடந்ததாம். 155

மிருது வான வினியவிச் சுந்தரத்
திருவின் செம்மை குழந்தையின் மேனியில்
பரவிற் றென்று பலரும்சொல் வாரிதே
கருவி லேதிரு வான கருத்துமாம். 156

## 62

வண்ண வண்ணப் பதுமை—உனக்கு
வாங்கி வருகையிலே
விண்ணில் விளங்கு மைந்து—வருண
வில்லை நினைந்திடுவேன். 157

கீத மிசைத்தாலோ—குழந்தாய்
கிண்கிணி யோசைசெயப்
பாதம் பெயர்த்தாங்கே—குழந்தாய்
பரத மாடிடுவாய். 158

சோலையி லேயிலைகள் குழந்தாய்
சுழன்று பாடிடுமே
வேலையி லேகணமும்—அலைவாய்
விட்டிசை யோதிடுமே. 159

இன்சுவைப் பண்டங்களோ—கடையில்
எடுத்துக் கொண்டுவந்தால்
பொன்செய் திருக்கரத்தால்—அவற்றைப்
பொத்திக்கொண் டோடிடுவாய். 160

இன்ப மலர்களிலே—குழந்தாய்
இனிய தேனைவைத்தான்
அன்பு கனிவதுபோற்—பழத்தில்
அமுதை யூற்றிவைத்தான். 161

முத்தந் தரும்போது—குழந்தாய்
முகம்ம லர்ந்துநிற்பாய்
நித்தமும் காலையொளி—அதுபோல்
நிறைந்த தென்றலுமாம். 162

## 63

தெரியாத பேர்கள்பல ரைத்தெரிய வைத்துநீ
தீராத நண்புசெய்தாய்
சேய்மையா யுள்ளவைக ளண்மையிற் கூட்டினை
சேராத சேரவைத்தாய்



ஒருகாலு மறியாத அன்னியர்க ளோடுநான்
உறவா யிருக்கவைத்தாய்
உரிமையில் லாதபல வீடுகள் தோறுமங்
குடனாய் நடக்கவைத்தாய்
பிரியாது பலநாளு முடனா யிருந்தவென்
பேழையை விடவஞ்சினேன்
பேசுமிப் புதுமையிற் பழமையுண் டவ்விடைப்
பெயர்த்துநீ யேநிற்றியால்
வரவோடு போக்காய மரணம் பிறப்பிங்கும்
மற்றெந்த வுலகத்தினும்
மாறா தெனைத்தொடர்ந் தெங்குநீ யேயெனது
மாசற்ற தோழனாய். 163

வந்து வந்தென தந்தமில் வாழ்வுதோ
றெந்தை நான்பழ சாதவெ லாமொரா
னந்த மென்னுநற் பந்தத்தி னாற்பிணித்
திந்த வாழ்வு சிறக்க வருளினாய். 164

உன்னை யிங்குணர்ந் தாலிவர் நண்பர்மற்
றன்னி யரிவ ரென்ப தகன்றிடும்
மன்னு வீடுகள் முற்றுமென் சொந்தமாம்
பன்மை யில்லொரு மையருள் பண்பருள். 165

## 64

தன்னந் தனியாக வோடு நதிக்கரை
சாய்ந்துபுல் லோங்கி வளர்ந்தகரை
மின்னு விளக்கைமுன் தானையால் மூடியே
மின்னிடை யாய்செல்லும் மாயமென்ன

என்னுடை யில்லத் திருள்வந்து சூழ்ந்ததங்
கேகாந்த மேகுடி கொண்டதம்மா
உன்னிடத் துள்ளவிக் கைவிளக் கையெனக்
குத்தமி நீதந் துதவுவையோ. 166

என்று சொல்லியந்த மங்கையைக் கேட்டனன்
ஏறெடுத் தென்னை யவள்பார்த்தாள்
கன்று மிருளில் அவன்கருங் கண்களென்
கண்ணைப் பறித்திடக் கூறுகின்றான்
நன்றிந் நதியிலித் தீபத்தை யேற்றிட
நானிவ் விருட்டில்வந் தேனெனவே
நின்றனள் புல்வள ராற்றுக் கரையில்யான்
நீந்தி யெரிசுடர் பார்த்துநின்றேன். 167

கூடு மிருளினில் மோன வெளியினில்
கோதையுன் தீபங் கொளுத்தி விட்டாய்
நாடி யகல்வதெங் கேயிந்தத் தீபத்தை
நல்குதி யோவெனக் கென்றுரைத்தேன்
ஓடிப் பரந்த தவள்விழி யென்னிடம்
ஒன்று கணஞ்சும்மா நின்றனள்பின்
தேடியென் தீபந் திசையெங்கு மேற்றநான்
சேர்ந்தன னிங்கெனக் கூறிவிட்டாள். 168

மாறுசொ லாதங்கச் செஞ்சுடர் வீணுக்கு
மண்டி யெரிவது பார்த்துநின்றேன்
சீறு மிருள்நில வின்றிச் செறிநடுச்
சாமத்திற் கேட்டனன் செம்மனத்தாய்
கூறுன் விளக்கினை நெஞ்சொ டணைத்தென்
கூர்ந்த திருளென் தனிமனையில்
வேறொன்று மில்லைத்தீ பாவளி யானதால்
விரும்பிக் கொணர்ந்தெனித் தீபமென்றாள்.
169.



## 65

வாழ்வெனும் பொற்கலம் வழியுமா றீசனே
வாயார நீயுமொருகால்
வற்றாத நல்லமுத மிக்கலத் திட்டுமிக
வாய்மடுத் திடுவதென்றோ
நீள்புவன போகங்க ளாயநின் தோற்றத்தை
நீயெனது கண்கள்கொண்டே
நேராக நோக்கிமிக வானந்த முறுவையோ
நீயெனது செவியில்நின்றே
சூழுநின் சாசுவத மாயநற் பாவினிசை
சோராது கேட்டுமகிழ்வாய்
சொல்லாற் றொடுக்குமென துள்ளமுன் சுந்தரத்
தொல்லுலக மாயைகண்டே
வாழ்வினைப் பேரன்பு மயமாக வைத்தநின்
வற்றாத கருணையமுதம்
வறியவென் சிறுமைபோ யுனதினிமை யாய்மாற
வாழ்வுதந் தருளுமாலோ. 170

## 66

என்னகத் தாழத்தென் னோடென்று முற்றவள்
இரவுபக லிருசந்தியும்
இன்பவொளி வீசியங் கேயொளிரு வாள்காலை
யொண்டிரை யகற்றாதவள்
மன்னுமென திறுதியாங் கீதத்தி லேபோர்த்தி
வைத்திடுவ னீசவுன்முன்
வாழியேற்றருளெனது முடிவானகொடையென்று
வாக்கினா லன்புசெய்தேன்

கன்னலைத் தேனைக் கருத்திலே தூண்டினேன்
கடிதவளை யடைதலரிதே
கனவிலோ நினைவிலோ கற்பனைகள் செயலிலோ
காண்பதெல் லாமவளையே
துன்னுபல தேசங்க ளெங்குசென் றாலுமவள்
தூயவடி வுள்ளநிறையும்
சுற்றியவ ளைத்தொடர்ந் தேயெனது வாழ்வுநாள்
தூங்கிவளர் வுறுகின்றதே. 171

## 67

வானுநீ வானிடைத் தூங்குநற் கூடுநீ
வடிவெலா மானவடிவே
வண்ணம் பதம்நாதம் வளருநிற மென்றெலாம்
வகையாக வுயிரகிலமும்
பேணுமுன தன்பென்ற போர்வையாற் கூட்டிலே
பிரியாது மூடிவைப்பாய்
பெரியபொற் கூடைதனில் அழகான மாலைகொடு
பூமிக்கு முடிசூட்டவே
ஆனநற் காலைமகள் மெல்லடி பெயர்த்துவரும்
ஆவினம் போனபின்னர்
ஆறிலா நெறிகடந் தம்பொற் குடத்திலே
அமைதியாந் தண்புனலெனும்
பானங்கை யேந்தியே மாலைவந் தெய்திடும்
பாராதி யண்டமேவும்
பரவெளியி லுயிர்பறந் திடுமங் கிராப்பகல்
பகருருச் சொல்லுமிலையே. 172



## 68

உனதுபொற் பரிதியின் கதிர்களிப் புவியின்மிசை
ஓங்குநற் கரம்விரித்தே
ஓய்வின்றி யென்மனைக் கதவில்வந் தேநெட்
டுயிர்ப்போடும் கண்ணீரொடும்
மனதில்வரு துன்பகீ தத்திலெழு கருமுகிலை
வாரியுன் னடிசேர்க்குமே
வற்றாத பெருமகிழ்வி னோடந்த முகிலதனை
மார்பிடத் தணிவதற்கோ
கணமுமிக மாறிடும் வண்ணம் பரப்பியே
கனவுருவ மாய்மடிப்பாய்
கனமற்ற மிருதுவாங் கரியவிருள் நிறமுடைய
கண்ணீர் கலந்ததனால்
தினமுமதை நச்சினாய் தெய்வமே தூய்மைமிகு
சிற்பரா னந்தவடிவே
தேசோம யானந்த மானவுன் னுருவையிச்
சிறியமுகி லால்மறைப்பாய். 173

## 69

என்னுடலி லிரவுபக லோடுமச் சீவனே
இவ்வுலக மெங்குமோடி
இனியநல் நடனம் புரிந்துவரு கின்றதிங்
கிம்மகித லத்துமண்மேல்
பன்னரிய பூடாகிப் புல்லாகி மரமாகிப்
பசியவிலை பூவாகியே
பாரெங்கு மானந்த பல்லவம தாகிவரும்
பகருமவ் வொருசீவனே

எண்ணரிய யோனியாய்ப் போக்குவர வென்கின்ற
எல்லையில் சாகரத்தே
ஏறியு மிறங்கியும் சுற்றிவரு கின்றதெச்
சீவனச் சீவனுமிஃதே
துன்னுமென் னங்கங்க ளெங்கணுந் தோயுமிச்
சுக,சிவ சம்பந்தமே
தொலையாத மகிமையாந் தொன்றுதொட் டிதுவே
தொடர்ந்தென்னில் நடனமிடுமே. 174

## 70

சுற்றிச் சுழன்றுவரு பிரகிருதி யின்னிசைச்
சுகவின்ப வாரிதியிலே
தோய்ந்தழுந் தித்திரையி லடிபட்டு மூழ்கியே
துன்னுமின் பச்சுழிகொழித்
தெற்றிவரு முக்கிரப் பேரின்ப மனுபவித்
திடுவதற் கெட்டுமாலோ
எப்பொருளு மோய்வின்றி யிடையறு தோவென்
றிரைந்துசுழல் கின்றததனுல்
சுற்றிநின் றுருபொழுது பார்ப்பதற் கில்லையெச்
சக்திதான் தடைசெய்யுமோ
சுழல்கின்ற விருதுக்கள் பிரகிருதி யிசையோடு
தொடருலய தாளநடனம்
பற்றிவரு வண்ணம் பதப்பாணி நறுமணம்
பாரெங்கு மடைதிறந்தே
பரிமளப் பிரவாக மென்னப் பரந்தொர்கண
பங்கமாய் மாறிவருமே. 175



## 71

என்னையொரு பெரியபொரு ளாகநா னெண்ணியே
எங்கெங்கு மேசுழன்றே
ஈசனே யுனதுபே ரொளியின்மிசை பலவருண
மிசையுநிழல் பலபோக்குவேன்
பின்னையிது தானுமுன் மாயையே பிரிவிலாப்
பெரியவுன் னுருவத்தையே
பேதப் படுத்தியவை பலகோடி சுருதியால்
பெயர்வைத் தழைத்தருளுவாய்
மன்னவுன தருளொளியி னம்சமே யுருவுபெற
மன்னியென துடலிலுறையும்
மாறுபடு பலநிறக் கண்ணீ ருடன்முறுவல்
மயமான பாட்டினிசைதான்
துன்னுபல வாசையாய் வெற்றிதோல் வியுமாகித்
துள்ளும்அலை யாகிமடியும்
தோன்றுகன வாகிவா னெங்குமெதி ரொலிசெயுந்
தோல்வியுன தென்னிடத்தோ. 176

இரவுபக லென்கின்ற தூரியங் கொண்டுநீ
எண்ணரிய சித்திரங்கள்
இடையே விரித்திட்ட மாயைத் திரைச்சீலை
யெங்குமெழு திப்பொறித்தாய்
பரவுபல வற்புதச் சித்திரக் கோடுகள்
பதியுமுன் மணியிருக்கை
பாங்காக வேயத் திரைப்பின்ன ரொளிருமே
பன்னுவா னகமெங்கணும்
விரவுமுன் னேடுநான் ஒன்றிவரு காட்சிதான்
விரிந்துநிறை வாகிநிற்கும்
வித்தகா வுனதுநல் லிசையோடு பாடுமென்
வேறிலாக் கீதவொலிதான்

பரவியா காசமெங் குங்குமுறி யோங்குமே
பற்றிப் பிடித்திடற்கே
பகவனே நீயுநா னுந்தேடி யோடிடப்
பலயுகஞ் செல்கின்றதே. 177

72

ஆழ்ந்துமறை வானபரி சத்தினு லேதொட்டெ
னரியவுயிர் மலர்வித்தவன்
ஆனசுக துக்கமெனு மழகான சுருதிசேர்த்
தையனென துளவீணையிற்
சூழ்ந்தபல் லிசைமீட்டி யானந்த மடைகிருன்
சோதிவிரி கண்கள்மலரச்
சுயமான மந்திரச் சிட்சைசெய் வானவன்
சுந்தரப் பலநிறங்கள்
வீழ்ந்தமா யாசால வித்தைகள் காட்டியே
விரிமலர்ப் பாதமருளி
வீணனுன் மெய்மறந் தவசநிலை யடையவே
மெய்ப்பதந் தந்தாளுவான்
தாழ்ந்தபல காலங்கள் வருடங்கள் நாட்களே
தாளாதெ னுள்ளத்தினைத்
தரணியிற் பலநாம ரூபசுக துக்கமாந்
தரமருளி யாண்டருள்வனே. 178

73

ஐம்புல னடக்கியே சும்மா விருக்கின்ற
ஆகாத துறவுவேண்டேன்
அத்துறவி னல்வரும் விடுதலை யெனக்கென்றும்
அற்பமும் வேண்டுகில்லேன்

2430



எம்பிரா னென்னையிங் கானந்த பந்தங்க
ளாயிரஞ் சூழ்ந்துதழுவ
எங்கணும் விடுதலைப் பரிசமுண் டாகுமே
என்னுடைப் பாண்டமிதனுள்
வம்பரு வளமுள்ள மதுவின்வகை நிறையவே
வெற்ருது வார்த்தருளுவாய்
வாய்த்தவென் சிறியவுல குக்கொளி கொடுக்கவே
வருவிளக் கொருநூற்றினை
செம்பொனே ருனதருட் சோதியா லொளிசெய்துன்
சன்னிதா னத்துவைப்பேன்
சேருமென தைந்துபுல னுகின்ற வாசலிவை
செத்தாலு மூடமாட்டேன். 179

காட்சியே மனமே கேள்வியே உணர்வே
மாட்சிசே ரிப்புலன் வருமுய ரின்பெலாம்
மூர்த்தி நின்னருள் முத்திரை கொண்டன
ஆதலின்
புலன்வரு மயக்கெலா முனதுபே ரின்பக்
கனல்வழி வெந்தருட் காட்சியா கும்மே
இச்சையெல் லாமென் னிதயத் தேகனிந்
தெச்சமி லன்பாங் கனியா கும்மே. 180

74

பக லிறந்தது பாயிருள் படர்ந்தது
அகல்வாய்க் குடங்கொண் டாற்றுக் கரைக்குத்
தெளிநீர் கொள்ளச் செல்லுதல் வேண்டும்
சலசல வோடுந் தண்ணீ ரரற்ருெலி
மாலைக் காற்றுடன் மயங்கிவந் தலைக்கும்
சாலையுந் தனியே வெறித்துக் கிடந்தது

கங்குல்மற் றென்னைக் கரைந்தழைக் கும்மே
பொங்குசுழி யலைத்துப் போகுமாற் றரவம்
ஆற்றுத் துறையிலங் கறியா னொருவன்
குழல்வாய் வைத்துக் கோதிலிசை பரப்பும்
வருவெனோ மீண்டும் வழியில்மற் றெவரைக்
காண்பெனோ அறியே னம்ம
வீண்பழி வந்தெனை விலங்குமோ அவமே. 181

## 75

வள்ளல்நீ யெம்மவர்க் கருளுநற் கொடைகளெம்
வாழ்வினை நிறைத்துமேலும்
வற்றாது நின்னையே வந்தடையு மோயாது
வழிகின்ற தெண்ணீர்நதி
துள்ளிவயல் பலவூர்கள் தோறுந் திரிந்தபின்
சுவாமியுன் பாதமலசச்
சோராது பெருகிநித மோடிவரு முனதுபத
சேவையால் வறுமையுளதோ
கள்ளுலா மலரெலாங் காற்றில்நறு மணம்வீசிக்
கடைசியா யுனதடிக்கே
கருதிவந் தடையுநற் கற்பனை விரிக்கின்ற
கவிவாண ருள்ளத்திலே
தெள்ளுநற் சொல்லா லமைந்தகவி மலரெலாம்
தெரிபொருள்கள் பலவாயினும்
தெய்வமே முடிவான பொருளொன்று தானஃதுன்
றிருவடி யலாதில்லையே. 182

## 76

சந்ததமு முன்னருட் சன்னிதா னத்திலே
தளராது வந்துநிற்பேன்
சகநாத கைகட்டி வாய்புதைத் துன்முன்னான்
சலியாது வந்துநிற்பேன்



எந்தையுன் வானவெளி மேலே கவிந்திடவே
யேகாந்த மாய்மௌனியாய்
எளியனே னுள்ளமுன் பாதம் பணிந்தையய
வெதிரெதிர் வந்துநிற்பேன்
சொந்தமா முனதுபே ருலகிலோ யாதுதொழில்
தொலையாது செய்துசுழலும்
தொல்லுலகர் கூட்டத்தி லாயினும் மறவாது
சோதியுன் முன்புநிற்பேன்
இந்தநல் லுலகத்தி லென்பணிகள் செய்தபின்
இராஜாதி ராஜவுன்முன்
ஏகாந்த மாகவாய் பேசாது மௌனியாய்
எதிரெதிர் வந்துநிற்பேன். 183

## 77

ஈசநீ யென்றுநான் எட்டத்தில் நின்றனன்
என்னுடைச் சொந்தநீயென்
றெண்ணீயுன தண்மையிற் சேர்ந்திடவு மில்லைமற்
றெந்தைநீ யென்றுன்கழல்
பூசைசெய் தேன்போற்றி தோழனைப் போலவுன்
பொற்கரந் தொட்டேனிலை
போந்துநீ யேயெனது சொந்தமென் றேசொலிப்
போம்வழியில் வந்துநின்றே
ஆசையோ டுன்னையென தாகத் தணைத்தன்ப
அருமைமிகு தோழவென்னேன்
அண்ணனுக் கண்ணனீ யானாலு மெனதுநிதி
யத்தனையு முன்னோடுதான்
மாசிலா வின்பதுன் பத்திலும் நின்னையே
மருவிநிற் பேன்பூமியில்
மன்னுமிச் சிறியவாழ் வரிதென்று பெருவாழ்வின்
மாக்கடல் குளிக்கவெண்ணேன். 184

## 78

ஆதியில் உலகை அயன்படைத் திட்டநாள்
சோதியில் விண்மீன் துலங்கின வன்றே
தேவர்கள் வானிற் திருச்சபை கூடினர்
பூரணம் பூரணம் பேரா னந்தமென்
றுரணம் பாடியே யாடின ராஞல்
திடுமென வொருவன் திகைத்துக் கூறினன்
உடுத்திரட் கோவையில் ஒன்றை யிழந்தோம்
தேடுமி னென்றே திருகுபொன் வீணையின்
தந்தி யறுந்தது தாழிசை நின்றது
தேடின ரோடினர் திசையெலா மலைந்தார்
வாடினர் விண்ணுல குக்கோர் மருந்தினை
அண்ட மிழந்ததோ ரழிவிலா மகிழ்வினை
நடுநிசி யமைதியில் நல்லுடுத் திரளெலாம்
முறுவல் முகிழ்த்தே மெல்லெனக் கரைந்தன
பங்கமில் பூரண மெங்கும்
பொங்குமித் தேடல் போதும்வீ ணெனவே. 185

## 79

இம்மையில் யானுனைத் தரிசிக்கு மருளெனக்
கில்லையெனி லுன்தரிசனம்
ஏழைக்கு வாய்க்கவில்லை யென்பதைக் கணமுநான்
எண்ணிமற வர்திருப்பேன்
செம்மையே யித்துயர் கனவிலும் நனவிலும்
சேர்த்துவைத் துத்திரிகுவேன்
சென்றொழியு மெனதுவாழ் நாட்களிச் சந்தையிற்
தினமுமென் கைகள்நிறையப்



பொய்மையே யானபல பொருள்சேரு பொழுதிலும்
போகின்ற வழியருகிலே
புழுதியிற் பாய்விரித் தேதங் கிடும்போது
போகும்வழி நீண்டதென்றே
உண்மையா யுணருவே ஞென்றியென் னில்லத்தை
ஓங்குநல் லணிகள்செய்தே
ஒப்பற்ற வின்னிசையொ டானந்த முறுகையில்
உன்னினைவு நிற்கவருளே. 186

## 80

என்றுமொளி மாறுத வென்னுடைப் பரிதியே
இலையுதிர் காலமதனில்
எற்றுண்டு பயனின்றி யலையுமொரு சிதர்மேக
மென்னநான் அலைகின்றனன்
நன்றுபல மாதங்கள் வருடங்கள் கழிகின்ற
நானுனது பேரொளியிலே
நண்ணிக் கலந்துநீ ராவியா யுருகவொரு
நற்பரிச மருளுவாயோ
அன்றெனின் மற்றிஃதுன் லீலையெனி னையனே
அறைபோன விப்பேழையை
அம்பொனு லழகுறப் பலநிறந் தீட்டியே
அலைகாற்றில் மிதவைசெய்வாய்
துன்றுமிருள் செறியிரவி லாடலை நிறுத்தநீ
திருவுள்ள மாயினேழை
தோன்றுது மறைவனல் லாலுதய வேளையிற்
தூயவொளி யிற்கலைவனே. 187

## 81

எத்தனை தினங்கள் வீணுகக் கழிந்தவென்
றேங்கியேங் கித்தடித்தேன்
எந்தையேயெனதுவாழ் நாளிலொவ்வோர்கணமுப்
மேற்றனை பொற்கரத்தில்

வித்திலே முளையையும் மொட்டிலே மலரையும்
விரிமலரில் நற்கனியையும்
வைத்துநீ யேவளர்த் திடுதியாற் காலமோ
வறிதினிற் கழிவதில்லை
மெத்தவு மிளைத்துநான் பஞ்சணையி லேறியே
மெதுவாக நற்றுயில்செய்தேன்
மேவுமென் கருமங்கள் சகலமு முடிந்ததென
மிகமனக் கற்பனைசெய்தே
நித்திரை யகன்றொளிர் காலையி லெழுந்தங்கு
நீலவெளி யிற்கிடந்த
நிறைமலர்ச் சோலையைக் கண்ணுற்ற போதைய
நெஞ்சிலற் புதமடைந்தேன். 188

## 82

கால மூன்கரத் தெல்லை கடந்ததே
ஏனு மொவ்வொரு தற்பரை யெண்ணவும்
ஞாலத் தேயிர வோடு பகல்மலர்
போல வூழிகள் தோன்றி மறையுமால். 189

தாம திப்பதெவ் வாறென் றறிந்தனை
யாம தைச்சிறி தேயு மறிந்திலேம்
சேம மாயநூற் ருண்டுக ளோபல
காம நன்மலர் காட்டில் மலர்ந்ததை. 190

செம்மை செய்யத் தொடர்ந்து தொடர்ந்திடும்
இம்மை யில்லெமக் கோர்கணந் தானும்வீண்
பொய்மை யாவினிப் போக்குதற் கில்லைவ
றும்மை யாளர் வருவது கைவிடோம். 191



வாதஞ் செய்வோர் வழக்குரைப் போர்கள்மற்
றேத மின்றி வெறுங்கதை பேசுவோர்
சாதி பேதங்கள் சாத்திரம் கோத்திரம்
சூது சொல்பவ ரோடுதொ லைத்திட்டேன். 192

ஐய வுன்னுடைச் சந்நிதிக் கேகிலேன்
செய்ய மாமலர் தூவிப் பணிகிலேன்
நைய வென்மனம் நான்துதி செய்கிலேன்
தூய்ய கோவில் தனித்துக் கிடந்ததே. 193

மாலை வந்ததும் மாமலர் கொண்டுநான்
ஓல மிட்டிரந் தேன்வாயில் பூட்டவும்
கால மானதென் றேபயந் தோடினேன்
சால வும்மின்னும் காலமுண் டையனே. 194

## 83

முத்துப் போல முகிழ்த்ததுன் பக்கண்ணீர்
முத்து மாலைசெய் துன்கழுத் தேற்றுவேன்
பத்தி யாயொளி மின்னும் சிலம்புநட்
சத்தி ரங்களென் பாதத் தணியுமே. 195

போக மும்புக ழுந்தரு வானுநீ
போக மல்லவை வைத்திடு வானுநீ
சோக மானதென் சொந்தம தாகுமே
யாக மாயதை யுன்பதஞ் சேர்த்திட்டால். 196

அருளைச் செய்தெனை யாண்டருள் வாய்நிதம்
மருளுற்ற வென் மனத்தைத் திருத்தியே
தெருளச் செய்திடு வாய்சிந்தை மேவிய
பொருளைப் போற்றிப் புனைகுவன் சென்னியே.

84

பிரிவென்ற பாலையின் துயரமே யுலகெலாம்
பெரியவா னத்திலெண் ணில்
பேதமா முருவங்கள் தோற்றுவிக் கின்றதே
பிரிவெனும் துன்பமிரவில்
திரிகின்ற தாரா கணங்களிடை யமைதியாய்
செறிதோற்ற மருளுகிறதே
செய்யவித் தோற்றமே மழையிருள் லாடியிற்
சலசலெனு மிலைகணடுவே
விரிகின்ற பாலையின் கீதமாய் மாறுமே
மேவுமிப் பெரியதுன்பம்
வீடுகள் தோறுநற் காதலோ டிச்சையாய்
விளங்குசுக துக்கமாகும்
உருகுமென் சவியுள்ள ஊற்றிலே யித்துயர
முருவெடுத் தோங்குகவியாய்
ஓடிப் பரந்தொழுகி யருவியா கிப்பாயு
முண்மையிங் கறிதல்நன்றே. 198

85

வீரர்தந் தலைவன் வெற்றிமண் டபம்விட்
டேகின காலையில் எங்கவர் சக்திகள்
கவசமா யுதங்கள் கவர்ந்தனர் கொல்லோ
நிராயுத பாணியாய் நின்றவர் மீது
சரேலென வம்புகள் சொரிந்தன மிகுதியும்
மறுபடி திரும்பவும் தலைவன்மண் டபத்தைக்
குறுகினர் வீரர்தம் சக்திகள் கரந்தே
வெற்றிவாள் வில்சரம் விட்டெறிந் தேகினர்
நெற்றியிற் சாந்தி நிறைந்திட வாழ்வின்
பயனெனுங் கனிகளைக் கைவிட் டேகினர்
நயமுள தலைவர்தம் மண்டபத் திற்கே. 199



86

மரணமுன் சேவகன் வாசலில் நின்றான்
தெரிவறி யாதவத் தெண்கடல் தாண்டியே
உன்னுடை யோலைகொண் டென்னிடம் வந்தான்
இரவு கறுத்ததென் னுள்ளம் பயந்தேன்
ஆயினென் னவனைநான் அன்புடன் வாவெனத்
தீப மேந்தியே சென்று வணங்குவேன்
வாயிலில் நிற்பதுன் சேவக னன்றோ
ஏந்திய கையுடன் இருகண்ணீர் மல்கவே
போந்தவன் பாதத் துளஞ்சரண் வைத்தே
அஞ்சலி செய்வேன் அவன்தொழில் முடிந்ததும்
எஞ்சிட வென்னைவிட் டேகுவன் காலையில்
கருநிழல் மட்டுமென் கண்முன்னின் றிடுமே
தனிமனை யிருந்துநான் உன்வர வெதிர்பார்த்
தென்னையு முன்பதத் தர்ப்பணஞ் செய்வனே.

87

நம்பிக்கை யின்றியே யெனதுசிற் றில்லத்து
நாலுமூ லையுமலைந்தேன்
நாடியே தேடினே னாயினவ ளைக்காண
நல்லரு ளெனக்கில்லையே
நம்பனே யெனதுமனை சிறிததில் மறைந்தபொருள்
நாளுந் திரும்புவதிலை
நானுன்ற னெல்லையில் மாளிகையின் வாசலில்
நயமுடன் தேடிவந்தேன்
செம்பொனே ரந்திவா னத்தடி விதானமே
சேர்ந்துனைப் பார்த்துநின்றேன்
தேரினச் சாசுவத வெல்லையிஃ தேயிதிற்
தேய்ந்துமறை பொருளில்லையே

நம்பினோ ரின்பமொழி யாதுகண் ணீரூடு
நன்றுதெரி முகமொளிவதில்
நாதவென்வெறுவாழ்வையாழியிற்றோய்த்தெனையு
நல்லபூ ரணமாக்குவாய். 201

சருவமுமொன் றென்றே சரியா யுணர்ந்தொருகால்
நிருவிகற்ப மாக நிலைத்திடநீ செய்தருள்வாய் 202

88

பாழான கோயிலுள தெய்வமே யுனதுபுகழ்
பாடுதல் மறந்தவினை
படுமணி யிரட்டியே யந்திவே ளைப்பூசை
பண்ணுதல் மறந்து போனார்
சூழாக வந்திடுந் தென்றல்பூங் காவில்மலர்
செய்தியைக் கொண்டுவந்துன்
தூயதனி யாலயஞ் சேர்க்குமே யம்மலர்கள்
தூவவொரு பக்தனில்லை
தாழாது பழையநின் பக்தனெங் கெங்கெலாம்
தாண்டியலை கின்றானவன்
தாவென்று கேட்டவர மின்னுங் கொடுத்திலாய்
தணியாத வேட்கையோடே
கேளாது மறுபடியு முன்முனே மாலையிற்
கேவல மளிந்துவருவான்
கேடில்பல விழவுநாள் பூசனை யிலாதுன்முன்
கெட்டுக் கழிந்தவினை. 203

பாழான கோவிலிற் பதிந்தருள் தெய்வமே
பூசனை யின்றிநல் லிரவுகள் போயின
தீபமேற் றுதற்கோ திருவுடை யாரிலை





கைவினை தேர்ந்த கருத்துடைச் சிற்பிகள்
மெய்வினை யுருவினம் பலகண் டனரே
காலவெள் ளத்திலே யவையுங் கரந்தன
பாழுடை கோவிலிற் பதிந்தருள் மூர்த்தியே
மறப்பிலா மறதியில் மறைந்திருந் தாயோ. 204

89

வேண்டா மெனக்கினிப் பெரியசொற் பேச்சுகள்
விதித்தா னெனையா ளுண்டான்
வேண்டுமே லிரகசிய மாகவே பேசுவேன்
வெற்றுரைகள் கூற மாட்டேன்
பூண்டவென் னுள்ளத்தி னுரையெலாம் பாட்டாகப்
போர்த்துவெளி யிட்டு வருவேன்
பூபதியி னுவணத் தோடுவார் வாங்குவார்
விற்பார்க ளெல்லாரு மே
மூண்டநண் பகலிலே வேலையின் நடுவிலே
முற்றாத பருவத் திலே
முந்திவிடை பெற்றனன் பருவமிலை யாயினும்
முகைவிரிக வெனது காவிற்
தீண்டுமிசை வண்டினம் சோம்பலிசை செய்யவே
தீமையொடு நன்மை யென்னும்
தீராத போர்செய்து காலங் கழித்தனன்
திருவருள் சிறந்த தன்றோ. 205

இளமையின் வெறுநா ளென்னுடை யுடைய
குழகனின் றென்னைக் கூவி யழைத்தான்
சடுதியில் வேலை சற்றுமறி யேனே. 206

## 90

காலன் வந்து கதவைத் தட்டும்பொழு
தேல வேயவர்க் கேதுகொடை யுண்டோ
சால வேநிறைந் திட்டவென் வாழ்வெனும்
கோலப் பொற்கலம் கொள்ளென வைப்பனே.

வெறுங்கை யோடவன் செல்ல விடுவனோ
சிறந்த வென்விருந் தாகிவந் தானைநான்
நிறைந்த வேனி லிரவு பகலெலாம்
கறந்த தீஞ்சுவைத் தேறலைக் காட்டுவேன். 208

இந்த வாழ்வு முடிவுறு மந்தநாள்
அந்தகன் வந்து வாசலிற் றட்டுவான்
சொந்த மாயவென் வாழ்வி னுழைப்பெலாம்
எந்தை கொள்கெனச் சிந்தி விடுவனே. 209

## 91

மரணம்நீ யென்றன் வாழ்வின் நிறைவன்றோ
மரணம் வாவெனக் கொன்றுரை காதினில்
மரண மேயுனக் கேயிரவு பகல்
திரணமா யின்ப துன்பங்கள் தாங்கினேன். 210

அந்தரங் கத்தி லேயுனக் காகவென்
சிந்தை யும்பொரு ளும்மற்று மாசையும்
சொந்த மாகவெ லாமென தன்புமே
தந்து வைத்தனன் இத்தனை நாளுமே. 211

கடைக்கண் ணாலொரு பார்வை கடாட்சித்தால்
கிடைத்த வாழ்விதென் சொந்தம தாக்குவேன்
தொடுத்த கண்ணி மணாளனென் கையது
பிடித்துச் சூட்டியுன் னோடிருள் போவனே. 212



## 92

இந்நிலக் காட்சிகள் எல்லா மிழந்தே
மன்னுமென் வாழ்வு மௌனமாய் விடைபெறும்
விழிமறைந் திடவிழுங் கடைத்திரை நாள்வாழ்
வொழியுமந் நாளையே யுணர்ந்திருக் கின்றேன்
ஓழியினெல் தாரகை ஆரிருள் காக்குமே
போயகா லைக்கதிர் மறுபடி பொங்குமே
இன்பதுன் பென்னும் அலையெறிந் தார்க்குமே
பின்னு நாழிகைகள் மன்னியே மடியும்
என்கண வாழ்விதன் எல்லையை நினைத்தால்
கால மற்றதோர் காலந் தோன்றுமே
இறப்பெனு மொளியினா லிந்தமா நிலத்தின்
பெருநிதி கண்டுநான் பெருமித மடைவேன்
தாழ்ந்தவை யெளியவை யன்றோ பெரியவை
வேண்டு மென்றுநான் வீணாக் கழுதவும்
வேண்டா திருக்கப் வெற்றவை யாவையும்
இகழ்ந்து தள்ளிய வெல்லா மின்று
புகழ்ந்து போற்றுதல் புரிந்தே னையனே 213

## 93

விடைபெற் றேன்பிரி யாவிடை கூறுமின்
கடிது தாழ்த்திச் சிரங்குவித் தேனிஃதோ
நெடிது காலமும் மோடிருந் தேனினிப்
படியி லென்மனை யாட்சி துறந்திட்டேன். 214

ஏற்ற ருள்விரி தோகையில் சாவிதான்
சாற்று வீரன்பி னாலொரு வாய்மொழி
போற்றி நீர்தந்த வைக்குள வோகைம்மா
றாற்றி நல்லொளி காலை யொளிர்ந்ததே. 215

இருளை நீக்கியென் னுள்ளத்தை யேமலர்ந்
தருளு வித்த விளக்கு மணைந்ததே
வருக வென்றொரு கட்டளை வந்ததால்
பெரிய யாத்திரைக் காயத்த மாகினேன். 216

94

விடைபெற் றேன்சுப சோபனங் கூறுமின்
நடையிற் பாதைநற் காலை யழகுடன்
படியிற் கண்டது வானத்து வைகறை
முடிவில் சோதிப் பொலிவுடன் நின்றதே. 217

கையி லென்னகொண் டேகுவை யென்றுநீர்
நொய்ய வென்னையொன் றும்மற்றுக் கேட்கலீர்
கையி லொன்றிலை யாயினு முள்ளத்தே
செய்ய வார்வம் நிறைந்து கிடந்ததால். 218

நண்பர் காளென் திருமண மாலையைப்
பண்பொ டேயென் கழுத்தணிந் தேகுவேன்
மண்ணில் யாத்திரைக் காரர் கஷாயந்தான்
எண்ணி டேனெனக் கேனது வேண்டிலேன். 219

வழியி லெத்தனை துன்பங்கள் சேருமென்
றளிவ தில்லையெ னுள்ளம் பயத்தினால்
வெளியில் மாலைவிண் மீனொளி செய்யுமென்
வழியின் யாத்திரை வந்து முடிந்திட. 220

மன்ன வன்திருக் கோயிலின் வாயிலில்
துன்னு மாலையிற் சந்தியின் வேளையில்
மன்னு சோகச் சுருதி கலந்திட்ட
பின்னு கீத மெழுந்திசை செய்யுமே. 221



95

இப்பிறவி வாசலைத் தாண்டியிவ் வாழ்வெய்தி
யிங்குற்ற நாளறிகிலேன்
இருள்சூழு நல்லிரவி லானவொரு காட்டிலே
இனிதுமலர் முகையென்னவே
அப்பனே யெல்லையில் மாயையின் நடுவிலெனை
அருளொளியி னால்விரித்தாய்
அழகான காலையில் விரிந்திடுஞ் சோதிதனை
அனுபவித் திடுகணத்தே
இப்புவிக் கன்னியன் யானல்ல னறிவரிய
உருநாம மில்சக்தியே
என்னுடைய வன்னையா யென்னைக் கரத்தெடுத்
தேத்துமென வுணர்கின்றேனே
தப்பியென் வாழ்வுமுடி வடைகின்ற காலத்தில்
சாவென்ற சாயலாகச்
சுற்றுமச் சக்தியே மறுகணந் தோன்றுமிது
சாஸ்வதம் நிகழ்வதறிவேன். 222

தாய்முலை யருந்திடுஞ் சேயினை யொருமுலை
மார்பினை யகற்றிட வழுதிடு மாயினும்
மறுமுலை யுண்பதற் கிட்டதும் மற்றது
முறுவலிப் பதுபோற் பிறப்பிறப் புண்டே. 223

96

காண்பதற் கரியவெல் லாமிந்த வாழ்விலே
கண்டுகொண் டேனையனே
கருதரிய வொளியென்னுங் கடலிற் பரந்திட்ட
கமலங் கரந்ததேனை
மாண்பா யருந்தினே னேழைமற் றெண்ணரிய
மாயா விகாரவுருவாம்

மண்வீடு கட்டியே யாடினேன் பாடினேன்
மலருமுரு வற்றவுருவைக்
காண்பேன் கருத்தினாற் சுட்டியுந் தொட்டுமறி
கில்லாயுன் பரிசத்தினால்
காயமெல் லாம்மலர்ந் திட்டதென் பேனிலைதே
கடைசியாய்க் கூறுமொழிகாண்
வாணாழ் முடிந்தைந்து கரணம் மடிந்நின்று
மரணம்வந் தெய்துமேனும்
வாவென்று கூறுவேன் வேறொன்று கூறிலேன்
மறுபடியு மதுவேசொல்வேன். 224

97

என்னுட னாட லியற்றிய காலைநீ
உன்னை யாஅரென் றுசாவிய தில்லைநான்
வெட்க மறியேன் பயமறி யேனியான்
நட்பினன் போலவே நகைமலர்ந் தாடினேன்
காலையிற் கண்வளர்ந் திடுகையில் வந்துநீ
சாலவு மென்னுடைத் தோழன் போலவே
கூவி யழைத்துக் குன்றுதோ றலைவாய்
ஆவியை யுருக்கிடும் அரியநல் லிசைதான்
பாடுவை யவற்றின் பரிசறி யாதுநான்
கூடியே பாடுவேன் உள்ளங் குதித்திட
ஆடல் முடிந்ததின் னாகவென் கண்முன்
கூடிய காட்சியின் கொள்கைதா னென்னே
உலக முன்பதம் பணிந்தே
அலமர நின்றவிண் ணுடுத்திர ளடங்கவே. 225



98

நான்பெற்ற தோல்வியின் மாலைக ளணிந்துன்னை
நன்றா யலங்கரிப்பேன்
நயமாக வுன்னிடஞ் சரணடைத லின்றியே
நான்தப்ப வலிமையுண்டோ
ஊன்பெற்ற வுயிர்வாழ்வி லுண்டான பந்தங்க
ளோங்குதுன் பத்திலூறி
யுடைபட்டு மாயமாய் மறையுமே யுள்ளீட
தொன்றுமில் லாதவுள்ளம்
வான்பெற்ற தெள்ளமுத மென்னவே குழல்போல
வருகான மழைபொழியுமே
வாய்மடுத் திட்டகல் தானுங் கரைந்திடும்
வலியவெ னகந்தைதேயும்
தேன்பெற்ற சததளக் கமலமெப் போதுமுகை
சிந்தியவி ழாதுவிடுமோ
திருவருள் செய்துநீ வாவென் றழைத்திடிற்
சாவினைச் சரணடைவனே. 226

99

சுக்கானை நான்கை விடும்போது நீயதைத்
தொடுதற்கு நேரமென்றே
சொல்லா தறிந்திடுவ னேனோவிவ் வீணான
சுகமில்போ ராட்டமிங்கே
இக்கார ணத்தினால் என்வேலை யெல்லா
மிமைப்பொழுதி லேமுடிப்பேன்
என்பேதை இதயமே உன்தோல்வி யைப்பொறுத்
தின்பா யடங்கிநிற்பாய்
திக்கால் வருங்காற்றி னொவ்வோ ரதிர்ச்சியும்
சிறியவென் தீபத்தினைத்

தெரியா தனைத்திடும் மீண்டுநா னேற்றவை
செய்வது மறந்துநிற்பேன்
இக்காலம் நானினிப் புத்தியாய் நீவரும்
எல்லையைப் பார்த்துநிற்பேன்
இருளிலே பாயினைக் கீழே விரித்துன்னை
யேற்பதற் கேங்கிநிற்பேன். 227

### 100

உருவ மென்ற கடலிடை மூழ்கியே
அருவ மென்ற முழுமணி தேடினேன்
திரிவ தில்லை யினித்துறை தோறும்நான்
உருவந் தேயென் புயற்பட கேறியே. 228

திரையில் மோதித் திரியுநாட் போயின
விரைவில் யானிற வாவிறப் பெய்துவேன்
கரையி லாதபே ராழியி னுழைத்தே
கரையும் நாதமில் கீதசபை செல்வேன். 229

வாழ்வெ னுமிந்த யாழினை யேந்தியே
சூழுஞ் சாஸ்வத மாய சுருதிசேர்த்
தாழ்வ னின்பத்தில் மற்றது மாண்டபின்
நீழும் சாந்தி மௌனம் நிலைத்திடும். 230

### 101

சந்ததமு மினியநற் கீதங்கள் பாடியே
தரிசனஞ் செய்யவருவேன்
சாற்றுமிக் கீதங்க ளேயெனக் கொளிதந்து
சர்வமுங் காட்டியருளும்



சிந்தைதனி லுணர்வுதந் தெனதுசிற் றுலகினைச்
சோதிமய மாக்கிநல்ல
செம்மையா மறிவினையு முதவியே தெரியாத
சிலவழி களைத்திறந்தே
எந்தையென் னுள்ளத்து வானவெளி யேயிலங்
கெண்ணற்ற விண்மீனையும்
எளியனேற் குக்காட்டி யிரவுபக லெப்பொழுது
மின்பதுன் பென்னுமுலகில்
சொந்தமாம் மாயா விகாரப் படைப்பையுஞ்
சுவைத்திடச் செய்துவைத்தே
சொர்ணமய மானவச் சோதிமா ளிகைவாயில்
சுற்றிக் கொணர்ந்துவிடுமோ. 231

### 102

உன்னை யறிந்தனன் என்று புளுகினன்
ஓவியத் துன்னுருக் கண்டவர்கள்
என்னை யடைந்து வியந்து முகம்நோக்கி
யாரிவர் யாரிவர் கூறுமென்றார். 232

ஆரறி வாரது யானறி யேனென
அங்கவ ரென்னை யிகழ்ந்தகன்றார்
சீரிய சின்னச் சிரிப்புச் சிரித்தங்கே
தேவர் பிரானேநீ வீற்றிருந்தாய். 233

என்று மழியாத கீத விசையினில்
எந்தை யுனைச்சில பாடிவிட்டேன்
ஒன்றும் அறியாதேன் உள்ளப் பெருக்கினால்
ஓது மவைக்குரை யோதுமென்றார். 234

ஆரறி வாரது யானறி யேனென
அங்கவ ரென்னை யிகழ்ந்தகன்றார்
சீரிய சின்னச் சிரிப்புச் சிரித்தங்கே
தேவர் பிரானேநீ வீற்றிருந்தாய். 235

### 103

அங்கென விங்கென வின்றி யடங்கலும்
ஆகிய வுன்னடியென்
ஐம்புல னன்கு விரிந்து பரந்தோர்
அஞ்சலி செய்திடுமே
எம்பெரு மானுன தின்பெழி லாயபொன்
னம்பல வாயிலிலோர்
கும்பிடு செய்ய நிறைமுகில் போலக்
குனிந்திடு மென்மனமே. 236

பாடிய கீத நதிகளெல் லாமொரு
பாதையி லோடியுனைத்
தேடிய வந்துநின் மோன வலைக்கடல்
சேர்ந்து கலந்திடுமே
நீடிய குன்றுறை சேக்கை நினைந்தெழு
நீள்சிறை யன்னமெனக்
கூடிய வென்னுடை வாழ்வெனும் யாத்திரை
குறுகிய துன்னடிக்கே. 237

கீதாஞ்சலி முற்றும்.

## அனுபந்தம்

# தாகூரின் வேறு பாடல்கள்

### 1

கார்முகிற் கங்கு லாவணித் திங்கள்
கனையொலி விசும்பில் வெள்ளிகள் மறைந்தன
மனையும் வீதியும் ஒளிவிளக் கவிந்தன
வீட்டுக் கதவுதாள் பூட்டுச் செறிந்தன
போதி நாதன் மேதகு சீடன்
மெய்த்தவ நிறையுப குப்த னென்பான்
வடபால் மதுரையில் நெடுமதிற் பாங்கர்
புழுதி மலிந்த பூதலம் பாயலாய்க்
குடங்கை யணையில் நெடுந்துயில் கொண்டான்
கொண்டவன் மார்பி லொண்டொடி யணிந்த
செஞ்சிலம் பரற்றுஞ் சீறடி படலும்
துயிலி னீங்கித் துடுமென வெழுந்தான்
மங்கை யொருத்தியின் செங்கை விளக்கொளி
புண்ணியன் கருணைக் கண்ணிணை தாக்கின
யாரையோ மற்றிவள் பேரியல் மூதூர்
ஆடல் சான்ற நாடகக் கணிகை!
அணிமணி குயிற்றிய பணிநிரை பூட்டி
வெண்மை நீலப் பூந்துகில் சாற்றி
இளமை சொட்டிய பழமது மாந்தி
பெண்மை கனிய அண்மையில் நின்றாள்
கையில் தீபம் தாழ்த்தியம் முனிவன்
பொய்யறு தவமலி நிறைமுகங் கண்டு
ஒய்யெனப் பாய்ந்து மெய்யெலாம் நடுங்க
அறியேன் சிறியேன் ஆற்றிய பெரும்பிழை

தவமுதி ரிளையோய் பொறுமதி மற்றிப்
புழுதிப் பாயல் அடிகளுக் கடாதென்
வளமனைத் துயில வருகென அழைத்தாள்
காலம் வருமப் போதுநான் வருவேன்
சீல முடையாய் செல்மதி யின்றெனப்
பாலசந் யாசி பகர்ந்தன னப்போ
இருள்நிறக் கங்குல் சிறுநகை புரிந்தென
இடையிடை மின்னிப் பெருமுழக் கெடுத்துத்
துடியிடை நடுங்கப் பெருமழை பெய்தது
சாலையில் நின்ற செழுமரச் சினைகள்
விரைமல ரேந்தி வில்லென வளைந்தன
தூரத் தெழுந்து தென்றலொடு கலந்த
காதற் குழலொலி கடிதுவந் தணையும்
முல்லையங் காட்டில் மலர்விழாக் காண
சென்றனர் அந்நகர்ச் செல்வ ரெல்லாம்
வானத் துச்சியிற் பால்நிற முழுமதி
சந்தடி யற்றவந் நகர்விடு சாயல்கண்
டந்தரத் துலவவச் சுந்தர நிசியில்
கண்துயி லாது காதல்நோய் கொண்ட
பூங்குயி லினங்கள் பொறுமையற் றளிந்து
தேமாஞ் சினையிற் கூமுறை செய்தன
தன்னந் தனியே நன்னகர் கடந்து
மெய்த்தவ நிறையுப குப்த வண்ணல்
நெடுமதிற் பாங்கர் நின்றவன் கண்டான்
புண்ணிறை மேனியள் பெருநோய் கொண்டவள்
நகர்நீக் குற்றுப் புறநகர்ச் சாலையில்
செல்லுமோர் வழியிற் கல்லெனக் கிடந்தாள்
யாரிவ ளென்று வாரிமடி சேர்த்தான்
உலர்ந்த வாயில் நறும்புன லூட்டினன்



எரிந்த புண்ணிற் றைல மூட்டினன்
கொடுமை தீர்ந்தவக் கோதை யுரைக்கும்
கரு ணையுள்ளத்துப் பெரியோய் யாரென
யானுனைக் காணும் காலம் வந்ததப்
பாலசந் யாசி யானெனப் பகர்ந்தான்
சீலத் தவமலி கோலமா னவனே 238

2

பசித்தது சிராவதி நகரம் பலநாள்
புசிப்பதற் கின்றிப் புலம்பினர் மக்கள்
தாய்நினைந் தூட்டும் பாலருந் தாது
காண்டகு சிறுவர் மாண்டனர் பலரே
பருக்கை யறியா திருக்கையி லுணங்கி
மால்கொண் டயர்ந்து மடிந்தனர் பலரே
நச்சுப் புகையுண் டிறந்தவர் போன்றார்
அச்சிரா வதியுறை மக்க ளெல்லாம்
உண்டி வழங்கி யுயிர்கொடுத் துதவும்
தொண்டினை நும்முள் யாவரே தொடங்குவிர்
என்றுதஞ் சீடரை வினவினான் சாக்கியக்
குன்றினி லுதித்தவக் கருணைச் சோதியான்
தூங்கிய தலையன் சோர்ந்த நெஞ்சினன்
தனபதி ரத்தினா கரனெனுஞ் சீடன்
ஆரிய வென்னிதி யறுமடங் கெனினும்
கூரிய விப்பசி குறைக்குமா றறியேன்
என்றனன் வென்றிவேற் கொற்றவன் தளபதி
சயசேன் எழுந்து நயமுற வுரைப்பான்
குருதி சோர விருதயங் கீறி
உயிரே யெனினும் பரிவுடன் ஈவேன்
என்னகத் துணவிலைப் புண்ணிய வெனலும்

பெருநிலத் திருவுடைத் தருமபா லெழுந்து
புலம்பு நெஞ்சினன் நெட்டுயிர்த் துரைக்கும்
மழைவளம் மாறி வயல்விளை வற்றன
அரசிறை கொடுக்க வழியறி யாதேன்
அன்னங் கொடுக்க என்செய் வேனென
வீதியிற் பிச்சை நாடொறும் ஏற்றுணும்
சாதுவின் தனிமகள் ஓதுசுப் பிரியை
கதுமென வெழுந்து மதிமுகங் கோட்டி
ஐய யானது செய்வனென் றுரைத்தாள்
யாங்ஙனஞ் செய்குதி பூங்கொடி நீயொரு
பேதைகொல் லென்றவ ரோதின ரிகழ
என்பெரு வறுமையே நின்பெருஞ் செல்வமென்
றுதர வுடனவ ளறைந்தன ளன்றே. 239

## 3

எழுந்தது புத்த பானு எழுமினோ நகரத் தீரே
குழந்தைகள் போல் நீளக் கொள்ளுதல் தூக்க மென்னோ
களங்கமில்கருணை மூர்த்திக்காகநான்கலங்கொணர்ந்தேன்
உளங்கொளக்கொடுமினென்றான் உத்தமனொருநற்சீடன்

காலையங் குதய வானிற் கவிந்தன கதிரின் கூட்டம்
சோலையிற் குயில்கள் பாடத் துவங்கின துயின்ற நல்லூர்
காலையிற் கலங்கை கொண்டு சார்ந்தவச் செம்மல் தானும்
ஓலமிட் டெழுமினின்னே உளங்கொளக் கொடுமினென்றான்

சிராவஸ்தி நகரத் துற்ற செம்மனத் தவரே செய்தி
ஒருவருக் கில்லை யென்னு துலகுயத் தருமே வானம்
கருநிதி யில்லை யென்று தயங்குவார் தமக்கு மேலாம்
ஒருநெறி கொடையே நெஞ்சிலோங்குநற் றுறவு கொள்மின்



வேறு

என்று கூறி யெழுந்ததக் காலையில்
பொன்று மாறறி யாதவிப் பேருரை
கன்றி வாடிக் கலுழ்ந்து கண்ணீர் விட்டு
நின்றன ளொரு நீள்விழி மாதராள் 243

துஞ்சு வாழ்வு கணந்தொறும் தோற்றுமிப்
பஞ்ச பூதப் படைப்பினி லின்பமோர்
கிஞ்சித் தாயினுங் கிட்டுவ தில்லையால்
நெஞ்சில் நற்றுற வேநெறி யென்றனர். 244

அந் நகர்வணி கச்செல்வ ரிவ்வுரை
சொன்ன நேரந் துவங்கித் துறவினில்
மன்னி யுள்ளம் மறுகினர் மன்னவர்
மன்ன னுந்தன் மகிமையெம் மட்டென்றான் 245

வேறு

திறந்தன வீதியிற் சாளர மெல்லாம்
அறந்தரு நெஞ்சத் தடிகளத் தெருவில்
பாத்திர மேந்திப் பிச்சையென் றிரக்கும்
காட்சியந் நகரைக் கலக்கிற் றன்றே
நிதிய மிகுத்தவந் நகர வைசியர்
பொன்னுநன் மணியும் சொரிந்து போற்றினர்
வள்ளல் மற்றவை கொள்ள மறுத்து
பெருநிதிக் குவிய லடிகளுக் கேனோ
பெரிதென மதிக்குமப் பொருளெது கொடுமின்
என்றலும் வணிகர் சென்றனர் மடிந்தே
மன்னவர் மன்னனும் அரமனை புக்கான்
நன்னகர் குவித்தவந் நவநிதி விட்டே.

வறுமையு நோயுஞ் சிறுமையு மல்கிய
சேரியின் மூலையிற் சென்றனன் பிக்கு
பாத்திர மேந்திப் பகவதி பிச்சையென்
றேத்திய குரல்கேட் டங்குவந் துற்றாள்
சிறுமண் குடிசையி லிருந்தவோர் பெண்மணி
சேவடி தொட்டுச் சிரசில் வைத்தாள்
சற்றே பொறுத்தருள் தண்ணளி யுடையோய்
என்றவள் விரைந்துதன் மனையகம் புக்குத்
தானணிந் திருந்தவச் சேலைக் கந்தலை
ஒய்யென வுரிந்தே கொள்கென வெறிந்தாள்
சிறுமனைக் கதவவள் மானங் காக்க
ஐயவென் னுடைமை யனைத்து மிஃதென
வாழ்கநீ யன்னாய் வாழ்ந்தனை யிதனால்
உன்கொடை யுலகுக் கிணையிலை
யென்று கூறி யேகினன் முனிவனே. 246

## 4

மன்னவன் பிம்பி சாரன் மாமுனி யான போதி
மன்னவன் தனக்கோர் கோவில் வகுத்தனன் சலவைக்
[கல்லில்
மின்னுறள் மேகம் போல விளங்குமத் தாது கோபம்
மன்னிய வுளத்தாற் கல்லில் வகுத்ததோர் வணக்கம்
[போலும் 247

மாலையி லரச கோட்ட மங்கையர் மடவார் மற்றுங்
காலனை யொத்த கண்ணார் காந்தளஞ் செங்கை பொங்க
மாலையும் பூவுஞ் செம்பொன் மணிவிளக் கேந்தி வந்து
சிலமே ஞான மூர்த்தி சேவடி சரண மென்பார். 248



அன்னவ னிறந்த பின்றை யவன்வழி யரசு செய்வான்
சொன்னவந் நெறியை வாளாற் றுடைத்துவெங் குருதி
[கொண்டே
தன்மதம் நிறுவி வேத வேள்விகள் தழைக்க வென்றே
பன்னரும் பௌத்த நூல்கள் ஆகுதி பண்ணினானே. 249

மாமுது வேனி லோர்நாள் மாலைவந் திறுத்த தாக
கோமுனி பரவு மன்பால் கோப்பெருந் தேவி தோழி
சிமதி யென்பாள் கங்கை சேர்ந்துநீ ராடிக் கையில்
பூமலி கலமும் பொன்செய் புதுமணி விளக்குங் கொண்டே

ஆயதன் தேவி முன்னர் அஞ்சலி செய்து செவ்வேல்
பாய்வது போன்ற நோக்கி யவள்முகம் பார்த்த போது
காயமு நடுங்க வெம்பிக் கனன்றுளம் பயந்து தேவி
வேயுறு தோளி தன்னை விஷமென வெகுண்டு பார்த்தாள்.

செய்வது சிறிதுந் தேராய் செத்திட உறுதி கொண்டாய்
வெய்யவெம் மரச னாணை விலங்கினாய் போதி நாதன்
வைகுமக் கோவில் சென்று வணங்குவார் தலையை யின்னே
கொய்திடு மரச னிந்தக் கொடுநெறி விடுதி யென்றான். 252

கோப்பெருந்தேவி சொன்ன கொடுமொழி கேட்டு மங்கை
கூப்பினள் கையைச் சென்னி குவித்தனள் வணங்கி மீண்டு
தீப்பொலி வேள்வி முன்னர் திருமணஞ் செய்து காதல்
ஒப்பிய மன்னன் தேவி அமிதையை அணுகி நின்றாள்.

புதுமணங் கண்ட வந்தப் பூங்கொடி கையிற் செம்பொன்
மதியன ஆடி பார்த்து மைபிருள் கூந்தல் வாரி
விதியென வகல்சி மந்த ரேகையிற் சாந்து பூசி
ரதியென வழகு செய்தே ரம்மியக் கனவி லாழ்ந்தாள்.

கண்டது மிவளைக் காந்தள் விரலுறு கை விதிர்க்க
ஒண்டொடி கூறும் நின்னால் உறுபழி யுற்ற தையோ
கண்ணெதிர் நிற்க வேண்டா கடிதகன் றிடுதி யென்னாத்
தண்மதி யனையாள் நீங்கிச் சார்ந்தனள் சுமதி முன்பே.

அரசிளங் குமரி யான அழகிய சுமதி யாங்கு
சரிகதி ரந்தி வேளை சாளரத் தருகே தங்கிப்
பெருகிய காத லூட்டும் காவியம் பருகி நின்றாள்
உருகியதீக்கோல்போல உடம்பெலாமுயிர்ப்புப்பெற்றே.

வெண்மலர் தீபங் கொண்டே விமலர்க்குப் பூசை செய்ய
நண்ணிய நங்கை தன்னைக் கண்டதும் நடுங்கி நெஞ்சில்
எண்ணிய நினைவு மாறக் காவியம் நிலத்தில் வீழப்
பெண்ணிது துணிவு நன்று பிழைத்ததுன் மதிகா ணென்றாள்

வேறு

எங்கள் நாதனை யேத்துதற் கேகுமின்
செங்கை மாமலர் தூவித்தொ ழுவம்யாம்
தங்க ளீரினித் தாமதஞ் செய்கலீர்
துங்க மாமுனி கோவிற்குத் தோகையீர். 258

என்று கூறித் தலைநிமிர்ந் தேயவள்
சென்று வாயிலந் தப்புர மெங்கணும்
நின்று கூவினள் கேட்டவ ரிற்சிலர்
கன்றித் தூற்றக் கதவடைத் தார்சிலர். 259

வேறு

மன்னவன் மாளிகைக் கோபுரத் துச்சியில்
மின்னிய வெண்கலக் கொடுமுடி மீது
மாலைக் கதிரொளி மின்னி மறைந்தது
வீதிக ளெல்லாம் வெய்யிருள் பாவ



நகர மாந்தர்த மரவ மடங்கப்
பசுபதி கோவிலிற் படுமணி யிரட்டும்
வேனில் மாலையில் விளங்குநீர்ச் சுனைபோல்
வானக வாவியில் விண்மீ னொளிரும்
புத்தர் கோவிலிற் புதுவிளக் கொளிர்விடும்
வித்தையீ தென்ன வீரர் மருண்டார்
மரக்கிளை யூடே மணிநிரை விளக்கின்
பெருக்கங் கண்டவச் சேவகர் பெயர்ந்தார்
வாளுறை யகற்றி வாய்விட் டலறினர்
யாரை யோநீ மடக்கொடி யோயெனப்
போதி நாதன் பூங்கழல் பரவும்
சீமதி நானெனச் செப்பினள் கணமே
போழ்ந்தது வாளே பாய்ந்தது குருதி
வீழ்ந்தனள் நங்கை விளங்கிய தாரகை
வெண்கற் றரையெலாம் செந்நிறம் படர
அவிந்தது கடைக்காற் றீபம்
அவிந்தது புத்தொளி அளவில்பல் லாண்டே. 260

## 5

மன்னவர் மன்னனே கேட்டி—அந்த
மாமுனி யான நரோத்தமன் போட்டி.
பொன்னான கோவில் வெறுப்பான்—வேறாய்ப்
போயோர் மரத்தி னடியி லிருப்பான் 261

நெய்க்குடஞ் சுற்றும் எறும்பு—போல
நிறைகின்றா ரன்ப ரிஃதென்ன குறும்பு
மெய்க்குழு யாவரு மொல்லை—விட்டு
விலகினார் கும்பிட ஒருவரு மில்லை. 262

பாடுகின் றார்நல்ல பாட்டு—அன்பர்
பரவுகின் றாரவை செவியாரக் கேட்டுச்
சூடுகின் றாரவன் பாதம்—நின்று
துதிக்கின்றார் மதிக்கின்றார் என்ன விநோதம். 263

தேனுள்ள பொற்குடம் விட்டு—வண்டு
சிறுமலர் தேடல்போல் சேவடி தொட்டு
ஆனந்தங் கொள்கிறா ரையா—இனி
அடுப்பது புரிகுவாய் அரசனே மெய்யாய். 264

என்று புகன்றனன் வென்றி—மன்னர்க்
கேவல்செய் யும்முதற் சேவக னின்று
நன்று தெரிகுவ னென்று—சொல்லி
நானில மன்னனும் போயினன் கன்றி. 265

மன்னவன் நெஞ்சகம் நொந்தான்—அந்த
மாதவ னுற்ற மரத்தண்டை வந்தான்
பொன்னின் திருக்கோவில் விட்டு—இங்கே
போனதென் னென்றான் திருவடி தொட்டு. 266

கடவுளங் கேயில்லைப் பொன்னால்—நீயுங்
கட்டிய கோவிலிற் கசிவில்லா மன்னா
திடமாக நாலைந்து லக்கம்—பொன்னைச்
செலவுசெய் தேனிது வென்ன கலக்கம். 267

சித்திர மண்டபஞ் செய்தேன்—நல்ல
சீரான வீதியுஞ் சாலையுஞ் செய்தேன்
நித்திய பூசைகள் செய்தேன்—கடவுள்
நீயில்லை யென்றிடில் உன்னைநான் வைதேன். 268

தெரியுந் தெரியு மெனக்கு—நெஞ்சிற்
சிறிது மிரக்கமோ வில்லை யுனக்கே
எரிதின்ற வீடுக ளின்றி—உன்னை
எத்தனை பேர்வந்து வேண்டினர் நன்றி. 269



வீடில்லாச் சோதரர்க் குதவா—இந்த
வீணன்செய் கோவி லெனக்கு முதவா
ஈடில்லாப் பொருள்செல விட்டும்—சற்றும்
ஈரமில் லாதவர்க் கருளில்லைச் சொட்டும். 270

என்று மொழிந்தன னீசன்—நானும்
இங்கே யிருப்பதற் கேமன நேசன்
துன்று பெருங்கோபங் கொண்டான்—மன்னன்
தூரப்போ வென்னுடை நாட்டைவிட் டென்றான்.

அன்புட னுறுத லாக—முனி
ஆசைக் கடவு ளிருப்பிடம் போக
இன்றெனை நீதுரத் தென்றான்—மன்னன்
இருடிக்கு வேந்தன் துரும்பென நின்றான். 272

## 6

கங்கைக்கு மேற்குக் கரையோரக் காட்டிலே
கதிரவன் தேரோட்டிச் சென்றுவிட்டான்
எங்கள் பசுக்களை நாங்களு மோட்டியே
எம்மிடஞ் செல்லுவோம் தோழர்களே. 273

தோற்றிய நாற்றுமுடிபோலுங் குஞ்சியர்
சுண்ணாம்புக் கீறுபோற் பூணூலார்
போற்றுங் கவுதமன் சீடர்க ளெல்லாரும்
போகப் புறப்பட்டார் ஆச்சிரமம். 274

கட்டிய உச்சிக் குடுமித் தலைமீது
காட்டு விறகுஞ் சுமந்துகொண்டே
எட்டி நடந்து பசுக்களை ஓட்டியே
எல்லாருஞ் சென்றார்கள் ஆச்சிரமம். 275

வந்து குருதேவன் பாத மலர்களை
வாழ்த்தி வணங்கி விழியிலொற்றி
செந்தீயின் பக்கத்தி லட்டணைக் காலிட்டுச்
சீட ரொழுங்கா யிருந்தனரே. 276

கூறு மறிவுரை கேட்டன ருள்ளத்திற்
கொண்டு நினைந்தன ரங்கிருந்தார்
வேறோர் புதியவ னங்குவந்து நின்றான்
வியப்புடன் நோக்கினர் எல்லோரும். 277

தாமரைப் பூப்போல் மலர்ந்த முகத்தினன்
சற்குணங் காட்டிடுந் தோற்றத்தினன்
மாமரப் பூங்குயில் போலுங் குரலினன்
வந்தங்கு நின்றான் புதியவனே. 278

வாச மலரும் மதுரப் பழங்களும்
மாதவன் சந்நிதி யிற்படைத்தே
நேச முடனவன் சேவடி கும்பிட்டு
நின்று சிலமொழி கூறிடுவான். 279

எம்பெரு மானே சரணஞ் சரணமிவ்
வேழை பெயர்சத் தியகாமன்
செம்பொருள் கற்றிட உன்னை யடைந்தனன்
திருவருள் செய்யென் றிரந்தனனே. 280

வாழ்த்தி யிருவெனக் கைகூப்பிக் கும்பிட்டு
மற்றவ னோர்புறத் தேயிருந்தான்
ஆழ்ந்த நினைவுடன் சீட ரவனையும்
ஆசானை யும்பார்த்தார் மாறிமாறி. 281



அந்தண ரன்றியே யாவர் விரும்புவர்
அரியமெய்ஞ் ஞானப் பொருளதனை
மைந்தவுன் தன்குலம் யாதுசொல் லென்றனன்
மாதவ னாகிய கோதமனே. 282

ஐயா வெனது குலமறி யேனியான்
அன்னையைக் கேட்டு வருவனென்றே
பொய்யாத சத்திய காமன் விடைபெற்றுப்
போயினன் தாயிடம் வேகமதாய். 283

தப்பான குலமென் றறிந்துகொல் லோவாற்றில்
தவளைக ளெல்லாம் கறகறத்த
கைப்பான காரியங் கண்டவர் போலவே
கண்ணைச் சிமிட்டின தாரகைகள். 284

கையினால் நீந்தியுங் காலால் நடந்துமோர்
கால்வாய் கடந்து கரையடைந்தே
செய்ய கிராமத்து மூலையில் உள்ள தன்
சிறுகுடில் சேர்ந்தனன் செல்வனுமே. 285

எல்லாரும் நித்திரை நல்லாகக் கொண்டிட
என்மகனை யின்னுங் காணேனென்றே
அல்ல லுடன்நின்ற அன்னைகண் டோடிப்போய்
அவனை யணைத்துச்சி மோந்தனளே. 286

ஆரியன் தன்னிடஞ் சென்றனை மைந்தனே
அருளிப்பா டென்ன வறைகவெனச்
சீரிய வென்னுடைத் தந்தையார் பேரினைச்
செப்ப வேண்டுமென்றான் அப்புதல்வன். 287

ஆரு மறியாத மெய்ப்பொருள் கேட்டிட
அந்தண ரேதகு மென்றுரைத்தார்
சீரிய வென்னுடைத் தந்தையார் பேரினைச்
செப்ப வேண்டுந்தாயே இப்பொழுதே. 288

பூவைப்போற் கண்ணிணை பூமியை நோக்கின
பொற்குரல் கம்பிய துள்நடுக்கும்
நாவைத் தடுத்தது மென்மைக் குரலிலே
நற்றா யுரைத்தன ளுற்றதெல்லாம். 289

இல்லாத ஏழைநான் சிற்சில பேர்களுக்
கேவல் புரிந்தனன் பாலியத்தில்
நல்லா னருளினால் நீவந் துதித்தனை
நாயக னில்லையென் கண்மணியே. 290

சாபலை மற்றிது கூறினள் புத்திரன்
சத்திய காமனுங் கேட்டிருந்தான்
சேவலுங் கூவிற்றுச் சேரிருள் மாய்ந்தது
திக்குங் கிழக்கு வெளுத்ததுவே. 291

வட்ட மானதங்க வட்டிலைப் போலவே
வரிசை மரங்களின் மேலாக
எட்டிப் பார்த்துக்கொண்டு பானு வெழுந்தனன்
இருடியுஞ் சீடரும் முன்னெழுந்தார். 292

கங்கையி லேயாடிக் கூந்த லுதறியே
காலைக் கடனு முடன்முடித்தார்
அங்கு பழைய மரத்தின் நிழலிலே
ஆரியன் முன்பாக வீற்றிருந்தார். 293



ஆரங்கே வந்தவன் சத்திய காமனே
ஆரியன் சேவடி போற்றுகின்றான்
ஒருரை யும்முரை யாமல் மவுனமாய்
ஒதுங்கி நின்றானங் கொருபுறத்தில். 294

அன்புந் தயையும் அருளும் பொறையும்
அளப்பருங் கல்வியும் மெய்ந்நிலையும்
செம்புலச் செல்வமும் உள்ள கவுதமன்
சிறுவனைப் பார்த்துச் சிரித்தனனே. 295

என்னசொன் னாளன்னை தந்தையின் பேரென்ன
யாதுன் குலமென்றான் கோதமனும்
அன்னைசொன் னதெல்லா மொன்றும் விடாமலே
அத்தனை யுஞ்சொன்னான் சத்தியவான். 296

வாட்டமில் லாமுகம் இஞ்சியைச் சப்பிய
மந்தி முகம்போல மாறினவே
முட்டியே தேன்கூட்டில் ஈக்கள் இரைதல்போல்
மூசென் றிரைந்தனர் சீடரெலாம். 297

சாதிப் புரட்டன் துணிபென்ன பாரென்று
தம்முள்ளே சீடர் முறுமுறுத்தார்
வேத நெறியறி கோதம னென்கின்ற
மேலவ னன்புட னேயெழுந்தான். 298

கைகளை நீட்டியே சத்திய காமனைக்
கட்டித் தழுவிநெஞ் சோடணைத்தான்
வையகத் தந்தணர் யாரினு மேலான
வாய்மைத் திருக்குல முன்குலமே. 299

வாய்மையே மேற்குலம் வாய்மையே மேற்குணம்
வாய்மையே நல்லற மென்மகனே
வாய்மையே மேற்கதி காட்டிடும் ஞானங்கள்
மறைகளெல் லாங்கூறு மென்மகனே. 300

அச்சமில்லை யில்லைச் சத்திய காமனே
அந்தணர் தம்மினும் மேற்குலநீ
இச்சைப்படி யெல்லாக் கல்வியு ஞானமும்
ஈகுவன் கொள்ளென்றான் கோதமனே. 301

## 7

தூரத்தே யமு னாநதி துள்ளியே
நீரைக் கொண்டு நெளிந்து வளைந்திடும்
பாரைப் பின்னி வளைந்து கறுத்துயர்
கோரத் தோற்ற மரம்நிறை குன்றுகள். 302

கரையை முன்னி முனிந்து பரந்திடர்
புரியும் பாறை முழைஞ்சு குழைந்திடும்
விரையுந் தாயை நினைந்திடு கன்றுபோல்
பரிய வந்து கலந்த வுபநதி. 303

கீறி விட்டவை டூரியக் கோடுபோல்
மாறி மாறி யமுனையை மண்டிடும்
கீறிப் பாறை கிடக்குமத் தோற்றந்தான்
போரில் வீரர் புனிதமெய்க் காயம்போன்ம். 304

சிக்கி யர்க்குக் குலகுரு வானநற்
பாக்கி யம்புவி பெற்ற தவத்தினான்
வாக்கி லேயருள் கொண்டகோ விந்தனும்
சாக்கி யர்மணி போலும் மகாமுனி. 305



கல்ல லைத்தொழு கும்யமு னைக்கரை
கல்லின் மேலிருந் தேமறை யோதினன்
மல்கு செல்வச் செருக்குடை யானவன்
நல்லசீட னு மங்குவந் தெய்தினான். 306

தேவ தேவநின் சேவடி போற்றினேன்
பாவி நான்பாத காணிக்கை யாகவே
மூவு லகும்பெ றலரி தாமொளி
மேவு கங்கண மேற்றரு ளென்றனன். 307

கையி லேயொன் றெடுத்தனன் உள்ளத்தில்
பொய்யி லாதவச் சிக்கியப் புண்ணியன்
பைய வேயது மெல்லென வீழ்ந்துபோய்த்
துய்ய நீரிற் கலந்து மறைந்ததே. 308

ஐய வோவென் றலறிக் குதித்தவன்
மெய்யில் வேர்வை மலர்ந்திட வுள்ளமும்
நொய்ய வேரகு நாதெனுஞ் சீடனும்
வெய்ய நீரில் விழுந்து தடவினான். 309

மறையிற் போன மறைபொருள் தேடியே
இறைவன் தன்கருத் தொன்றி யிருந்தனன்
முறையிற் கங்குல் சிவந்து வெகுண்டது
மறைவுற் றபொருள் கண்டிலன் சீடனும். 310

வேறு

வந்து குருவின் முன்னின்றே
வடியும் நீருஞ் சோர்வுமாய்
நைந்து மெலிந்து கூறுவான்
நல்லோய் மீண்டு மொருகாற்போய்

சிந்து சலத்திற் தேடுவேன்
தேவ விழுந்த விடங்காட்டும்
ஐந்து கோடி கொடுத்தாலும்
அதுபோல் வளைய லரிதென்றான். 311

கையி லெஞ்சிய கங்கணத் தையெடுத்
தைய மற்றது போன விடமஃதே
பையச் சென்று பொறுக்கி யெடுத்தியென்
றொப்பெ னவதை யும்மங்கு வீசினான். 312

---